
# சித்தர் சுவாமிகள்

## ஓர் அபூர்வ தேடல்



பெ. கணேஷ்

குமுதம் பு(து)த்தகம்

# ஆத்ம தரிசனம்

சிநேகமுள்ள இதயங்களுக்கு...

இந்நூலின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி.

குமுதம் இணையதளத்தில் வாரந்தோறும் இடம்பெறும் 'கோபுரதரிசனம்' நிகழ்ச்சிக்காக தமிழகம் முழுவதிலுமுள்ள திருத்தலங்களுக்கு சென்றபோது... ஓர் அபூர்வத் தேடலோடு நான் தரிசித்து மகிழ்ந்த ஜீவசமாதிகளைப் பற்றியும்.. அதனுள் இன்றும் ஆன்ம உடலோடு வாழ்ந்து அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிற சித்தர் சுவாமிகளின் ஆன்மிகத் தொகுப்பாக இந்நூலை உருவாக்கியிருக்கின்றேன்.

சித்தர்கள் யார்? சுவாமிகள் யார்? அவர்கள் உண்மையில் தெய்வீகத் தன்மையுடையவர்களா? அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் நிஜமா? அது நடந்திருக்குமா? இதைப்போன்ற கேள்விகளோடு இந்நூலுக்குள் சென்றால்... இந்நூலை முழுமையாகப் படித்து முடிக்கின்ற நொடிகளில்... அவர்கள் எல்லோரும் நிஜமானவர்கள். அவர்களின் அற்புதங்கள் அத்தனையும் உண்மையானவை... எனும் உணர்வினைப் பெறுவீர்கள்

இந்த அபூர்வத் தேடலுக்கு வாய்ப்பளித்து.. இந்நூல் உங்கள் கைகளில் தவழ உதவிகள் புரிந்த இந்த அபூர்வத்தேடலின் முக்கிய காரண கர்த்தாவாக... தமிழக திருத்தலங்களுக்குச் செல்கின்ற அரிய வாய்ப் பினை எனக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற குமுதம் குழும இதழ்களின் தலைவர் நிர்வாக இயக்குநர் பெருமரியாதைக்குரிய பா. வரதராஜன் அவர் களுக்கும், என்னுடன் பணியாற்றும் குமுதம் குழும நண்பர்களுக்கும், என்னைப் பெற்ற எனது தாய்க்கும், தந்தைக்கும் எனது நூல்களில் முதல் வாசகியும் எனது மனைவியுமான க.லீலாவதிக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இப்படிக்கு,

பெ. கணேஷ்

நிகழ்ச்சித் தயாரிப்பாளர் மற்றும் பொறுப்பாளர்

குமுதம் இணையதளம்.

முகவரி :

பெ. கணேஷ்

63/47, இரண்டாவது தெரு,

அச்சமகண்டிகை, பழனிப்பேட்டை,

அரக்கோணம் - 631002.

ganesh@kumudam.com

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீலஸ்ரீ சீமான் சித்தர் | 16 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ மாயாண்டிச் சித்தர் | 24 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ அழுக்குச் சித்தர் | 37 |
| 4 | ஸ்ரீலஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சித்தர் | 48 |
| 5 | ஸ்ரீலஸ்ரீ சுப்பையா சித்தர் | 59 |
| 6 | ஸ்ரீலஸ்ரீ அருணாச்சல சித்தர் | 69 |
| 7 | ஸ்ரீலஸ்ரீ சதானந்த சித்தர் | 81 |
| 8 | ஸ்ரீலஸ்ரீ நாகநாத சித்தர் | 90 |
| 9 | ஸ்ரீலஸ்ரீ அண்ணன் சுவாமிகள் | 98 |
| 10 | ஸ்ரீலஸ்ரீ குழந்தையானந்த சித்தர் | 108 |
| 11 | ஸ்ரீலஸ்ரீ சித்தானைக்குட்டி சித்தர் | 117 |
| 12 | ஸ்ரீலஸ்ரீ தெய்வத்திரு சர்க்கரையம்மன் சித்தர் | 124 |
| 13 | ஸ்ரீலஸ்ரீ திருவலம் சித்தர் | 130 |
| 14 | ஸ்ரீலஸ்ரீ ரோ[illegible] சித்தர் | 134 |
| 15 | ஸ்ரீலஸ்ரீ பட்டினத்தார் சித்தர் | 141 |
| 16 | ஸ்ரீலஸ்ரீ தொள்ளைக்காது சித்தர் | 148 |

# சித்தர்கள் யார்?

சித்தர்கள் உலக நன்மைக்காகவும் மனித உயிர்களின் நலனுக்காகவும் வாழ்ந்தவர்கள். நம் தமிழக மண்ணில் பல நூறு ஆண்டுகளாக எண்ணற்ற அற்புதங்கள் நிகழ்த்திவரும் இவர்கள், மனித உயிர்களுக்குச் செய்திருக்கும் நன்மைகளும் ஆச்சரியங்களும் ஏராளமானவை.

சாதாரண மனிதர்களைப் போன்றே நம்முடன் வாழ்ந்த இவர்கள் அமானுஷ்ய சக்தியும் தெய்வ அருளும் நிரம்பியவர்களாக இருந்தார்கள். ஒருவரைப் பார்த்த நொடியிலேயே அவர்களுக்குள் இருக்கும் பிரச்னைகளை அறிந்துகொள்ளும் பேராற்றல் அவர்களிடம் இருந்தது.

பெரும்பாலான சித்தர்கள் மனிதர்கள் தங்களை நெருங்கிடாமல் இருப்பதற்காக பித்தனைப் போன்று மனநலம் குன்றியவர் போன்று மிகமிக எளிமையான தோற்றத்தில் இருந்தார்கள். அவர்களைக் கண்டுணர்ந்து அவர்களிடம் தங்கள் பிரச்னைகளைச் சொல்லும் மனிதர்களுக்கு எந்தவித பிரதியுபகாரமும் எதிர்பாராது நன்மையளித்து வாழ்வித்தார்கள்.

'சித்தர்' என்கிற பெயர் கேட்கும்போதே நம்முள் ஒருவிதமான பரவசம் ஏற்படுவது உண்மை நிலையோடு வாழ்ந்த அந்த மகாப் பெரியவர்களை நினைத்துத்தான். அவர்கள் யார்? உண்மையில் 'சித்தர்' என்பதற்கு என்ன பொருள்? என்ற கேள்வி ஒரு சிலருக்கு எழுமானால், சித்தர் ஆய்வாளர் டாக்டர் இரா. மாணிக்கவாசகம் சொல்லும் பதில் இதுதான். மனம், புத்தி, அகங்காரம் எனப்படும் அந்தக்கரணங்கள் நான்கில் ஒன்றான சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள்.

'சித்தித்தல்' என்பதற்கு அடைதல் என்று பொருள் கொண்டால், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் எனும் நான்கு வகை ஆன்மிக நிலைகளுள் சாயுச்சிய நிலை பெற்றவர்கள் சித்தர்கள். இறைவனின் மாண்புகள் எனப்படும் சத்து, சித்து, ஆனந்தம் என்பனவற்றுள் 'சித்'தாகிய நற்பேரறிவு கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள். சிவம் எனும் சித்தனை, சமயச் சார்பற்ற நிலையில் வணங்கி வழிபட்டவர்கள் சித்தர்கள் என்கிறார் இரா. மாணிக்கவாசகம்.

சித்தர்களின் அமானுஷ்ய சக்தியில் 'சித்தாடல்' என்பது முக்கியமான விஷயமாகும்.

பதினெண் சித்தர்களும் இந்தச் சித்தாடலில் மிகச் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் மட்டுமல்லாது இவர்களின் சீடர்களுக்கும் அந்தச் சித்துக்கலையைச் சொல்லிக் கொடுத்தார்கள்.

அந்த 'சித்து' என்பது நம்பமுடியாத விஷயமாகத் தோன்றும். ஆனால் அத்தனையும் உண்மை. நடந்த நிஜங்கள்.

திருக்கயிலையில் நந்தி தேவரின் அருள்பெற்ற சித்தர் தனது 'சித்து' சக்தியால் இறந்துகிடந்த இடையனின் உடலில் புகுந்து அவனை உயிர்ப்பித்து கண்ணீர்விட்ட பசுக்களுக்கு ஆச்சரியமூட்டினார். திருமூல நாயனார் என்கிற அந்தச் சித்தர்தான் ஆண்டுக்கு ஒரு பாடல் என மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களைப் பாடினார். அந்தப் பாடல்கள்தான் இப்போது நம்மிடையே திருமந்திரமாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

அதேபோல் இடைக்காட்டு சித்தரும் தனது சித்துவேலையால் பன்னிரண்டு ஆண்டுகள் மழையில்லாமல் வறண்டுபோயிருந்த சூழலில் ஆடுகளை எருக்கிலைகளை தின்னப் பழக்கியும், மனிதர்களுக்கு குருவிறகு எனும் தானியத்தை உணவாக்கியும் வாழ்வித்தார் என்கிறது அவரது வாழ்வியல் நூல்.

அதேபோல் கோரக்க சித்தர் தனது சித்துவேலையால் தனது உடலை காயகல்ப உடலாக மாற்றிக்கொண்டார். அதைப் பரிசோதிக்க நினைத்து அல்லம தேவரின் கைகளில்

கூரிய வாளைக் கொடுத்து தன் உடலை வெட்டச் சொல்ல, அல்லம தேவர் அந்த வாலால் கோரக்கரை வெட்ட, உடலில் வாள் வெட்டுப்படாமல் நழுவிக் கீழே விழுந்தது. உடனே அல்லம தேவர் அதே வாளால் தன்னை வெட்டும்படி சொல்ல, கோரக்கர் அல்லம தேவரின் உடலில் வாளைப் பாய்ச்ச, அது காற்றினுள் புகுந்து வருவது போல் வந்தது. தன்னைப் போன்றே அல்லம தேவரும் சித்துகளில் முதன்மையானவர் என உணர்ந்து கோரக்கர் அல்லம தேவரின் சீடரானார் என்கிறது பழமையான நூல்.

அதேபோல் போகர் சித்தர் எழுகடல் தாண்டி இருக்கும் சஞ்சீவி மூலிகையை தனது சித்துவேலையால் ஒரே நொடியில் வரவழைத்துக் கொடுத்தார் என்கிறது போகர் நூல்.

சித்தர்கள் இத்தகைய சித்துவேலைகள் மட்டுமில்லாது எண்வகை சித்து சக்திகளைப் பெற்றிருந்தார்கள்.

அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்கிற இந்த சக்திகள் மூலமாக, 'அணுவைப் போல் நுண்மையாகும்', 'மிகப் பெரியதாகுதல்', 'மிக நுண்மையாதல்', 'மிகு எடையாதல்', 'எங்கும் செல்லும் ஆற்றல்', 'எண்ணியதை எய்தும் ஆற்றல்', 'எதையும் ஆக்கும் ஆற்றல்', 'எவரையும் தன்வயப்படுத்தும் ஆற்றல்' என்கிற ஆற்றல்களை சித்தர்கள் பெற்றிருந்தார்கள்.

இந்த ஆற்றல் யாவும், இடைவிடாத முறையான யோகப் பயிற்சியினாலும், தவத்தாலும் சித்துக்களாக கைவரப் பெற்றார்கள் சித்தர்கள்.

இப்படி பலப்பல சித்துக்களைப் பெற்றிருந்தாலும் அவற்றை வெளிக்காட்டாமல் கிறுக்கான மனிதர்களாக வாழ்ந்தார்கள். மனித உயிர்களுக்கு பிரச்னை என்கிறபோது உதவி செய்யும் சக்தியாக மட்டும் அந்த சித்து சக்தியைப் பயன்படுத்தினார் கள்.

அடுத்து, சித்தர்கள் தாங்கள் உடலுடன் இருக்கும்போதே இறைவனுடன் கலந்திருந்தார்கள். நினைவு, செயல் என்பன வற்றைத் துறந்து சிவனோடு ஒன்றாகச் சேர்ந்திருந்

தார்கள். அதாவது வாசி யோகத்தில் சர்வ சதா காலமும் நிலைத்திருந்தார்கள்.

**பரத்தோடே சேர்ந்தவர்கள் பரமே யாவார்**
**பரப்பிரமம் பிறவியதாய் எங்குந் தோன்றும்**
**வரத்தோடே யருள்பெற்று மனமுந் தேறி**
**வாசியென்ற குதிரையினால் வீடு கட்டி**
**சரத்தோடே மனையதனில் அறிவிற் சேர்ந்தால்**
**தயவான மறுபிறப்பு இதுதானப்பா**
**சிரத்தோடே இந்த வகை அறிந்தாயானால்**
**சிவத்தோடே சேருவதிற் செயம் பெற்றாயே**

**(சுப். சுத். 94)**

பரத்தோடு சேர்ந்தவர்கள் பரப்பிரமமாய் எங்கும் நிறைந்தவர்களாகி விடுவார்கள். வாசி என்கிற வீட்டில் வசிப்பவன் மறுபிறப்பு பெற்றவனாவான். அவ்வாறு மறுபிறவி அடைந்தவன் சிவத்தோடு சேர்வதில் வெற்றி பெற்றவனாவான். ஆக உண்மையான சித்தர் நிலை இதுதான்.

இப்படி பேராற்றல் பெற்றுவிட்ட சித்தர்கள் மனிதத் தன்மை தாண்டிய தெய்வீக நிலையில் இருப்பார்கள். விண்வெளியில் வசித்த சித்தர்களும், மனிதர்களின் கண்களுக்குப் புலப்படாத அமானுஷ்ய உடலுடன் வாழ்ந்த சித்தர்களும் நம் மண்ணில் ஏராளமானோர் இருந்தார்கள். அவர்களில் நவநாத சித்தர்கள் மிக முக்கியமானவர்கள்.

சத்யநாதர், சதோக நாதர், ஆதி நாதர், அனாதி நாதர், வகுளி நாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கஜேந்திர நாதர், கோரக்க நாதர் என்கிற இந்த ஒன்பது நவநாத சித்தர்களும் ஒன்பது கோடிச் சித்தர்களுக்கு சமமானவர்களாக வாழ்ந்தார்கள். தெய்வத் தன்மையோடு மனித உயிர்களுக்கு இவர்கள் அருளியிருக்கும் அற்புதங்கள் ஏராளமானவை.

சித்த மருத்துவம், ஆயுர்வேதம் என்கிற உயிர் காக்கும் மருத்துவ முறைகளையும், சக்தி மிகுந்த மூலிகைகளையும் உலகுக்கு உணர்த்தியவர்கள் சித்தர்கள்தான்.

இந்தச் சித்தர்களில் முதன்மையானவர்கள் பதினெண் சித்தர்கள். ஆனால் பதினெண் சித்தர்கள் யார் யார் என்பதில் சில கருத்துகள் உள்ளது.

திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வான்மீகர், கமலமுனி, போகர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், சட்டைமுனி, சுந்தரானந்தர், குதம்பைச் சித்தர், கருவூரார், கோரக்கர், பாம்பாட்டிச் சித்தர். இந்தப் பதினெண் சித்தர்கள்தான் முதன்மையானவர்கள் என்கிறது தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள படங்கள்.

ஆனால் அபிதான சிந்தாமணி நூலோ, அகத்தியர், போகர், கோரக்கர், கயிலாச நாதர், சட்டைமுனி, திருமூலர், நந்திதேவர், கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்ம முனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாகீசர், சுந்தரானந்தர், உரோம முனி, பிரம்ம முனி இந்தப் பதினெண் சித்தர்கள்தான் முதன்மையானவர்கள் என்கிறது. இந்தச் சித்த நூல்களை ஆராய்ந்த சித்த மருத்துவர்களோ, கோதமர், அகத்தியர், சங்கரர், வைரவன், மார்க்கண்டன், வான்மீகர், உரோமர், காகபுசுண்டர், சட்டை முனி, நந்தீசர், திருமூலர், காலங்கி, மச்சமுனி, புலத்தியர், கருவூரார், கொங்கணர், போகர், புலிப்பாணி இந்தப் பதினெண் சித்தர்கள்தான் முதன்மையானவர்கள் என்கிறார்கள்.

இது மட்டுமல்லாது சித்தர்களின் எண்ணிக்கை ஐம்பதை நெருங்குகிறது எனக் குறிப்பிடுகிறார் 'சித்தர்கள் வரலாறு' நூலின் பதிப்பாசிரியர் திரு.எஸ்.பி.ராமச்சந்திரன்.

காலாங்கி நாதர், போகர், ரோமரிஷி, மச்சமுனி, சட்டை முனி, யூகிமுனி, பிரம்ம முனி, வான்மீகர், பதஞ்சலி முனிவர், இடைக்காடர், தன்வந்திரி, மூலத்தீசர், அகத்தீசர், சிவ வாக்கியர், இராமதேவர், காகபுசுண்டர், கருவூரார், புண்ணாகீசர், புலிப்பாணி, நந்தீசர், புலஸ்தியர், வியாசர், தேரையர், யோகோபு, கொங்கணர், தட்சிணாமூர்த்தி, கோரக்கர், கௌபாலர், சோதிமுனி, டமரகர், சுந்தரானந்தர், வர ரிஷி, ஊர்வசி, கமல முனி, அறிவானந்தர், அகப்பேய் சித்தர், குதம்பை சித்தர், பாம்பாட்டி சித்தர், காலகண்டர், சுப்பிரமணியர், ஜமதக்கினி, திருணாக்கியமுனி, சண்டேசர், திருமூலர், பூனைக்கண்ணர் என

நாற்பத்தைந்து சித்தர்களைக் குறிப்பிடுகிறார்.

சித்தர்களின் இந்த எண்ணிக்கையில் மாறுபாடு ஏற்படினும் அத்தனை சித்தர்களும் தெய்வீகத்தன்மை நிறைந்தவர்கள் என்பதும் உலக நன்மைக்காக மட்டுமே வாழ்ந்தவர்கள் என்பதும் நிதர்சனமான உண்மை.

இப்போது பதினெட்டு சித்தர்களின் காலத்தைப் பற்றிப் பார்ப்போம்.

**01. ஸ்ரீ பதஞ்சலி சித்தர் பங்குனி மாதம் மூல நட்சத்திரத்தில் பிறந்தவர். இவரது காலம் (வாழ்நாள்) ஐந்து யுகங்களும் ஏழு நாட்களும் ஆகும். இவர் ராமேஸ்வரத்தில் சித்தியடைந்தார்.**

**02. ஸ்ரீ அகஸ்தியர் மார்கழி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் நான்கு யுகங்கள் நாற்பத்தெட்டு நாட்கள். இவர் திருவனந்தபுரத்தில் சித்தியடைந்தார்.**

**03. ஸ்ரீ கமலமுனி வைகாசி மாதம் பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் நான்காயிரம் ஆண்டுகள் நாற்பத்தெட்டு நாட்கள். இவர் திருவாரூரில் சித்தியடைந்தார்.**

**04. ஸ்ரீ திருமூலர் புரட்டாசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் மூவாயிரம் ஆண்டுகள் பதின்மூன்று நாட்கள். இவர் சிதம்பரத்தில் சித்தியடைந்தார்.**

**05. ஸ்ரீ குதம்பைச் சித்தர் ஆடி மாதம் விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் ஆயிரத்து எண்ணூறு வருடங்கள் பதினாறு நாட்கள். இவர் மாயவரத்தில் சித்தியடைந்தார்.**

**06. ஸ்ரீ கோரக்கர் கார்த்திகை மாதம் ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எண்ணூற்றெண்பது வருடங்கள் பதினொரு நாட்கள். இவர் பேரூரில் சித்தியடைந்தார்.**

**07. ஸ்ரீ தன்வந்திரி ஐப்பசி மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எண்ணூறு வருடங்கள் முப்பத்திரண்டு நாட்கள். இவர் வைத்தீஸ்வரன் கோயிலில் சித்தியடைந்தார்.**

**08. ஸ்ரீ சுந்தரானந்தர் ஆவணி மாதம் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எண்ணூறு வருடங்கள்**

இருபத்தெட்டு நாட்கள். இவர் மதுரையில் சித்தியடைந்தார்.

09. ஸ்ரீ கொங்கணர் சித்திரை மாதம் உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எண்ணூறு வருடங்கள் பதினாறு நாட்கள். இவர் திருப்பதியில் சித்தியடைந்தார்.

10. ஸ்ரீ சட்டைமுனி ஆவணி மாதம் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எண்ணூறு வருடங்கள் பதினான்கு நாட்கள். இவர் திருவரங்கத்தில் சித்தியடைந்தார்.

11. ஸ்ரீ வால்மீகி புரட்டாசி மாதம் அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எழுநூறு ஆண்டுகள் முப்பத்திரண்டு நாட்கள். இவர் எட்டுக்குடியில் சித்தியடைந்தார்.

12. ஸ்ரீ ராமதேவர் மாசி மாதம் பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எழுநூறு ஆண்டுகள் ஆறு நாட்கள். இவர் அழகர் மலையில் சித்தியடைந்தார்.

13. ஸ்ரீ நந்தீஸ்வரர் வைகாசி மாதம் விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் எழுநூறு ஆண்டுகள் மூன்று நாட்கள். இவர் காசியில் சித்தியடைந்தார்.

14. ஸ்ரீ இடைக்காடர் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் அறுநூறு ஆண்டுகள் பதினெட்டு நாட்கள். இவர் திருவண்ணாமலையில் சித்தியடைந்தார்.

15. ஸ்ரீ மச்சமுனி ஆடி மாதம் ரோஹிணி நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் முந்நூறு ஆண்டுகள் அறுபத்திரண்டு நாட்கள். இவர் திருப்பரங்குன்றத்தில் சித்தி அடைந்தார்.

16. ஸ்ரீ கருவூரார் சித்திரை மாதம் அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் முந்நூறு ஆண்டுகள் நாற்பத்திரண்டு நாட்கள். இவர் கருவூரில் சித்தியடைந்தார்.

17. ஸ்ரீ போகர் வைகாசி மாதம் பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் முன்னூறு ஆண்டுகள் பதினெட்டு நாட்கள். இவர் பழனியில் சித்தியடைந்தார்.

**18. ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் கார்த்திகை மாதம் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் நூற்று இருபத்து மூன்று ஆண்டுகள் பதினான்கு நாட்கள். இவர் சங்கரன் கோயிலில் சித்தியடைந்தார்.**

நாம் இதுவரை பார்த்தது பதினெட்டுச் சித்தர்களின் காலம். ஆனால் இந்திய சித்தர்கள் அனைவரின் காலநிலைகளை அறிய முடியவில்லை. அது என்ன இந்திய சித்தர்கள்? என்ற கேள்வி எழுகிறதா? இந்திய சித்தர் மரபினர் ஏராளமான பிரிவுகளில் இருந்ததாக பழமையான நூல் ஒன்று விவரிக்கிறது. நாடி சித்தர்கள், ரச சித்தர்கள், சங்கத சித்தர்கள் என்பவர்கள் இதில் முதன்மையானவர்களாகக் கருதப்படுகிறது. இதில் ரச சித்தர்கள் மருத்துவத்தில் அமானுஷ்ய சக்தி மிகுந்தவர்களாக இருந்தார்கள்.

சிவபெருமானை ஆதிநாதனாக பாவித்து சிவபாதமே கதியென சிவனைத் தொழுத சித்தர்கள் நாத சித்தர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இத்தகைய இந்திய சித்தர்கள் ஹடயோகப் பிரதீபிகா, கெரண்டா ஸம்ஹிதா, சிவஸம்ஹிதா போன்ற சாஸ்திர நூல்களைத் தந்தார்கள்.

நம் தமிழ் மண்ணிலும் தென்னாட்டிலும் வாழ்ந்து பல்வேறு சித்தாடல்களைச் செய்து மனித உயிர்களின் நன்மைகளுக்காக மட்டுமே வாழ்ந்த சித்தர்கள் மகேஸ்வரச் சித்தர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் தந்திர சாஸ்திரத்திலுள்ள சுத்தமார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள். வாமம் (இடது), தட்சிணம் (வலது) என இந்திய தந்திர சாஸ்திரங்கள் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் தட்சிண ஸ்ரோதம் எனவும் வலது ஒழுக்கம் யோகம் முதலிய ஆன்மப் பயிற்சிகளை உள்ளடக்கிய வித்யா ஞானத்தை வலியுறுத்துகிறது. இதுதான் சுத்தமார்க்கம் என அழைக்கப் படுகிறது. நம் தமிழ் மண்ணில் வாழ்ந்த சித்தர்கள் இந்த சுத்த மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் எனலாம்.


இந்த சுத்த மார்க்கத்தைச் சார்ந்த சித்தர்களில் பால வர்க்கம், மூல வர்க்கம், கைலாய வர்க்கம் என்று அறியப்பட்டிருக் கின்றனர்.

திருமூலர், கம்பளிச் சட்டைமுனி போன்ற சித்தர்கள் தாங்கள் கைலாயவர்க்கத்தினர் என அவர்களின் பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல பாலவர்க்கத்துக்கு முருகப்பெருமான் தலைமைச் சித்தராக அறியப்படுகிறார். தமிழ்ச் சித்தர் மரபில் ஆறு ஆதாரங்களும் ஆறு மலைகளாக உருவகப்படுத்தப்படுகின்றன. முருகனின் ஆறுமுகமும் இந்தப் படிமமாகவே கருதப்படுகிறது. இதில் முருகப்பெருமானை மலைமீதேறி தரிசிப்பது குண்டலினியை எழுப்பி சஹஸ்ராரத்தில் கலப்பது என்று எடுத்துக்கொள்ளலாம். ஆகவே பாலவர்க்கத்தைச் சார்ந்த சித்தர்கள் குண்டலினி யோகத்தில் வல்லமை பெற்றவர்களாக இருந்தார்கள்.

காயச் சித்தர்கள் என்பவர்கள் உடலை இரும்பாக்கி மனதை மாயமாக்கு என உடலை காயகற்ப உடலாக, காற்றுடலாக மாற்றி வாழ்ந்தார்கள். "காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" என்பது இவர்களின் தத்துவம். இந்த காயகற்ப உடலை அணுக்களாகப் பிரித்து மீண்டும் கூட்டுகிற வல்லமை பெற்றிருந்தார்கள்.

ரசவாதச் சித்தர்கள் என்பவர்கள் மூலிகை மருத்துவத்திலும், வேதியியலிலும் இரும்பைப் பொன்னாக்கும் ரசவாதக் கலையிலும் தேர்ச்சி பெற்றவர்களாக எண்ணற்ற மூலிகைத் தத்துவங்களை மூலிகை மகத்துவங்களை நமக்கு அருள்பாலித் தார்கள்.

இதுபோன்று 'சித்தர்கள்' எந்தப் பெயரில் அறியப்பட்டாலும் அவர்கள் அனைவரும் உலக மக்களின் நன்மைக்காக மட்டுமே வாழ்ந்தவர்கள் என்பது நிதர்சனமான உண்மை. வான மண்டலத்தில் சூரியனுக்கு வடக்கே உலகம் அழியும்வரை எண்பத்து எட்டாயிரம் சித்தர்கள் வாழ்ந்து கொண்டிருப் பார்கள் என்று விஷ்ணுபுராணத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, சித்தர்கள் இவ்வுலகம் உள்ளவரை நமக்காக, நம் நன்மைக்காக அருள்பாலித்துக் கொண்டிருப்பார்கள்.



# 1

# ஸ்ரீலஸ்ரீ சீமான் சித்தர்

இப்போது நீங்கள் அறியப்போகும் ஸ்ரீலஸ்ரீ சீமான் சித்தர் இலங்கையில் அவதரித்து நம் தமிழ் மண்ணில் காரைக்காலில் வாழ்ந்து ஏராளமான சித்துக்களையும் அமானுஷ்யங்களையும் நிகழ்த்தி ஜீவசமாதி நிலையடைந்தவர். இன்றும் தனது ஜீவ சமாதியை நாடி வருபவர்களின் துயர் தீர்த்து நல்வாழ்வளிக்கும் கருணைக் கடவுளாக காரைக்காலில் சூட்சும உடலோடு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு சாதாரண மனிதரைப் போன்ற தோற்றத்திலும் உடலில் ஆடைகளின்றி கழுத்திலும் தலையிலும் உருத்திராட்ச மாலை களோடும் கனிவான முகத்துடனும் ஒளி பொருந்திய கூர்மை யான விழிகளோடும் தெய்வீக மணம் கமழ வீற்றிருக்கும் சித்தர், தன்னருகில் வரும் நபர்களின் மனதில் நினைத்த காரியத்தை

நல்லனவே தீர்த்துவைக்கும் தன்மை பொருந்தியவர்.

நம்மால் உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேச அவரிடம் மட்டும் முடியாது. உள் மனது, வெளி மனது இந்த இரண்டும் அவரருகில் நாம் நிற்கும்போது அவரது மனதிற்கு வசமாகி விடும்.

ஒரு தாயிடமுள்ள தாய்மை, அன்பு, பாசத்தைப் போன்றே தன்னை நாடிவரும் அத்தனை பேருக்கும் தாயுள்ளத்தோடு அருள்பாலிக்கும் மகான் அவர்.

கடந்த நூற்றாண்டில் 1890ல் ஜீவ சமாதி நிலையடைந்த அம்மகான், காரைக்கால் மண்ணில் நிகழ்த்தியிருக்கும் அற்புதங்களை அறியும்போது நம் மனது ஆச்சரியத்தில் விரிகிறது.

1836ம் வருடம் ஒரு நாள் மாலைப்பொழுதில் இலங்கை கண்டி கதிர்காமக் கோயிலில் ஒரு மிகப்பெரிய அதிசயம் நிகழ்ந்தது.

அவ்வாலயத்தின் குருக்களாக இருந்த சுப்ரமண்யம் என்பவருக்கு நீண்ட நாட்களாக ஒரு மனக்குறை. தினந்தோறும் கதிர்காமக் குமரனைப் போற்றி வேதம் படிக்கும் அம்மனிதரின் மகனுக்கு நான்கு வயதாகியும் பேச்சு வரவில்லை. எங்கெல்லாமோ டாக்டரிடம் அழைத்துச்சென்றும், அச்சிறுவன் செவிடு ஊமை எனும் குறைபாடுடன் பிறந்தவன்; அதனால் அவனால் பேச முடியாது என டாக்டர்கள் அவர் மனதில் வேதனையை விதைத்தனர். மருத்துவர்கள் கைவிட்டால் என்ன? உலகத்தைக் காக்கும் எம்பெருமான் முருகன் இருக்கிறாரே! அவருக்காக தினம் தினம் திருப்புகழ் பதிகங்கள் பாடுகிறோம். அவர் நம் மகனைப் பேசவைப்பார் எனக் காத்திருந்தார் சுப்ரமண்ய குருக்கள். அன்று சற்றே உணர்ச்சிவயப்பட்டு கண்ணீரோடு தீப ஆராதனை செய்ய ஆரம்பித்தார். மங்கள ஆரத்தியைத் தரிசித்த மக்கள் சுப்ரமண்ய குருக்களின் மனக்குறையை அறியாமல் மெதுவாக கலைந்துசெல்ல, சுப்ரமண்ய குருக்கள் முருகன் முன்பாக கண்மூடி நின்றார். முருகா முருகா என அவரது உதடுகள் உச்சரிக்க, கண்களில் நீர் திரண்டு வழிய ஆரம்பித்தது.

மனம் முழுதும் முருகா என் மகன் செவிடனாக, ஊமையாக வாழ வேண்டுமா? உன் பெயரை உச்சரிக்கும் பாக்கியம் அவனுக்குக் கிடைக்காதா? முருகா என் மகனைப் பேசவை! என முருகனை மனமுருகி வேண்ட, சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது.

தன் காதருகே மற்றுமொரு 'முருகா முருகா' என்ற குரல் கேட்க, சட்டெனத் திரும்பிய சுப்ரமண்ய குருக்கள் ஆச்சரியத்தில் உறைந்தார். தன்னருகே வந்து நின்றிருந்த அவரது நான்கு வயது மகன்தான் 'முருகா முருகா' என தமிழ்க்குமரன் முருகனின் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தான்.

இவன் செவிடன், ஊமை என டாக்டர்களால் கைவிடப் பட்டவன். இப்போது எப்படி பேசுகிறான்? இது என்ன ஆச்சரியம்? என உணர்ந்தவர், சட்டென ஸ்ரீ கதிர்காமக் குமரனைப் பார்க்க, அவர் புன்னகை முகமாக 'இதுகூட தெரியலியா?' என்பது போன்று தோற்றமளிக்க, 'முருகா முருகா முருகா' என கதிர்காமமே அதிரும் வண்ணமாக முருகனின் திருநாமத்தை உச்சரித்தார். மெய்சிலிர்ப்போடு தன் மகனை மார்போடு அணைத்துக்கொண்டார். அன்று இறையருளால் முருகப்பெருமானின் அருள் கடாட்சத்தோடு பேசிய அந்தச் சிறுவன்தான் சீமான் சித்தராக அருள்மழை பொழிந்தார்.

அன்று அவருக்கு அவரது பெற்றோர் சுப்ரமண்ய குருக்களும் பத்மாவதித் தாயாரும் வைத்த பெயர் கந்தசாமி. கந்தசாமி சிறுவயதிலேயே அவரது தந்தையுடன் எந்நேரமும் கண்டி கதிர்காமக் கோயிலிலேயே இருப்பார். எந்த இறையருளால் பேச ஆரம்பித்தாரோ அந்த இறைவனின் திருநாமத்தைத் தவிர வேறு உச்சரிக்க மாட்டேன் என 'முருகா முருகா' வார்த்தைக்கு வார்த்தை முருகனின் திருப்பெயரை உச்சரித்தபடி வளர்ந்த அச்சிறுவன் ஒரு தெய்வப்பிறவி; இறைவனின் அருட்கடாட்சம் நிறைந்தவன் என்பதை அப்போதே அங்குள்ள மக்கள் அறிய ஆரம்பித்தனர்.

நாட்கள் நகர நகர, கந்தசாமி தனது உடலில் துணி உடுத்து வதை தவிர்க்க ஆரம்பித்தார். அப்படி யாரேனும் அவருக்கு ஆடை அணிவித்தாலோ, அது அவர் நடக்கும்போது தானே

அவிழ்ந்து வீழ்ந்துவிடும். தான் உடையில்லாமல் இருப்பதை உணராத பக்திப் பிரவாகத்தில் எப்போதும் திளைத்திருப்பார் கந்தசாமி.

முருகா முருகா என உச்சரிக்கும் உதடுகளிலிருந்து எப்போதாவது யாருக்காகவேணும் ஒரு சில வார்த்தைகள் வரும். அந்த வார்த்தைகள் தெய்வ வார்த்தைகளாக இருக்கும் என்பதால், அவரைத் தேடிவந்து அவர் முகம் பார்த்து அவர் தன்னை நோக்கி ஏதேனும் சொல்லமாட்டாரா? என, நூற்றுக்கணக்கானோர் காத்திருக்க ஆரம்பித்தனர்.

தன் எதிரே இருப்பவரின் உடலுக்குள்ளிருக்கும் பிரச்னைகளை தன் பார்வையில் உணர்ந்துவிடும் கந்தசாமி, 'உன் வயிற்றின் இடது புறத்திலிருக்கும் கட்டி உன்னை ரொம்ப துன்புறுத்துதோ? கவலைப்படாதீங்க, சரியாகிடும்' கந்தசாமி நோயினால் பாதிக்கப்பட்ட நபரின் முகத்தைப் பார்த்துச் சொல்ல, 'தன்னுள் இருக்கும் பிரச்னைகளை இவர் எப்படி உணர்ந்தார்?' என்ற ஆச்சரியத்துடன் அவர் சித்தரின் முகத்தைப் பார்க்க, 'அதான் சொல்லிட்டேன்ல, சரியாகிடும் போங்கள் பிரச்னைகளை'. கந்தசாமி சொன்னது போலவே எந்தவித மருந்து மாத்திரைகள் இல்லாமலே கட்டி இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோன அதிசயத்தைப் பார்த்து அன்றைய மருத்துவர்களே வியந்துபோயினர்.

சிறுவனாக இருந்த கந்தசாமி வளர வளர, அவருக்குள் ளிருக்கும் தெய்வீக அற்புத சக்திகளும் வளர ஆரம்பித்தது. இலங்கையின் கண்டி முழுதும் கந்தசாமியின் அற்புதங்கள் தெரியவர, தினமும் நூற்றுக்கணக்கானோர் அவரை நாட ஆரம்பித்தனர். ஆனால் தனிமையை விரும்பிய கந்தசாமி, எப்போதாவதுதான் ஒரு சிலரின் கண்களுக்குத் தெரியும் விதமாக கதிர்காமக் கோயிலில் நடமாடுவார். மற்றபடி திடீரென கோயிலில் தோன்றியவர் அதே நேரத்தில் வேறொரு இடத்திலும் தோன்றி குழப்பிவிடுவார்.

மிகவும் பிரச்னைக்குரிய நபர்கள் என்று உணர்ந்தால் மட்டுமே திடீரென அவர்கள்முன் தோன்றி தனது வலது கரத்தை அவர்களின் தலையில் ஆசிர்வதிக்கும்படி தொடுவார். அந்த

நொடியில் உடல் முழுதும் மின்சாரம் பாய்ந்த அதிர்வை உணரும் அந்த நபர்கள், அந்த நிமிடத்திலிருந்து தன்னுள்ளிருக்கும் தீய பிரச்னை விலகி வாழ்வில் வளமடைவார்கள். அவரின் அற்புதம் உணர்ந்தவர்கள் அன்றிலிருந்து அவரை 'சீமான்' சுவாமிகள் என்று பக்தியுடன் அழைக்க ஆரம்பித்தனர்.

கண்டியில் வாழ்ந்த கனகசபாபதி என்பவர் கந்தசாமி ஒரு சித்த மகாபுருஷர் என்பதை உணர்ந்து அவரை நாடினார். பல நாட்களாகியும் கதிர்காமக் கந்தன் கோயிலுக்குள் சித்தரை அவரால் பார்க்க முடியவில்லை. ஆனால் அங்குள்ள எல்லோருமே இப்போதுதான் இங்கேதான் அவரைப் பார்த்தேன் என்று சொல்ல, கனகசபாபதி திகைப்புடன் சித்தரைத் தேட ஆரம்பித்தார். ஒரு நாள் திடீரென கனகசபாபதியின்முன் வந்த சித்தர், 'எதுக்கு என்னைத் தேடறே? உன் குடும்பத்துல இருக்கறவங்க எல்லாருக்கும் ஆயுசு பலமா இருக்கு. உங்களை எந்த பில்லி சூன்யமும் ஒண்ணும் பண்ணாது. நான் சரி பண்ணிட்டேன், வீட்டுக்குப் போ' என்று சொல்லியபடி அங்கிருந்து நகர்ந்தார்.

நம் பிரச்னையை சித்தர் உணர்ந்துவிட்டாரே அது போதும் என்று திருப்தியோடு வீட்டுக்குத் திரும்பிய கனகசபாபதி, வீட்டுக்குள் நோயில் படுத்திருந்த மனைவியும் மகனும் உற்சாகமாக தெளிவாக அமர்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். சித்தரின் மகிமையைப் பற்றி கனகசபாபதி சொல்லி முடிக்க, அடுத்த நொடியே அவரின் குடும்பத்தினர் அத்தனை பேரும் நன்றியோடு சித்தரை மனமுருக வேண்டியபடி கரம் குவித்தனர்.

இறையருளால் பேச ஆரம்பித்த சித்தர் தனது சித்தினாலும் இறையருளாலும், தீர்க்கமுடியாத பல நோயாளிகளின் நோய்களைக் குணப்படுத்தி ஆச்சரியமூட்டியிருக்கிறார். கண்டியில் அவரால் குணமடைந்த பலரது குடும்பங்களுக்கு இன்றும் அவர் குலதெய்வமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

பதினேழு வயதில் ஒரு இளைஞன் இத்தகைய சக்திமிகுந்த மனிதராக எல்லோராலும் வணங்கப்படுவதை பொறுக்காத ஒரு சிலர், ஒரு நாள் அவர் கதிர்காமக் கோயிலில்

தியானத்தில் இருக்கும்போது கை கால்களை கயிற்றால் இறுகக்கட்டி குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போனார்கள். தியானத்திலிருந்த சித்தர் மெல்ல கண் திறந்து, 'உங்க ஆசை என்னை ஆற்றிலே போடணும்னு இருக்கா? சந்தோஷமா செய்யுங்க' என்று சொல்லிவிட்டு கண்மூடி தியானத்திற்குள் ஆழ்ந்தார்.

அவரைத் தூக்கிச் சென்றவர்கள் ஆற்றங்கரையில் வைத்து மேலும் பெரிய கயிறு ஒன்றினால் அவர் உடல் முழுதும் இறுகக் கட்டி ஆற்றில் தூக்கி வீசினர். சித்தர் அவ்வளவுதான் என்ற சந்தோஷத்தோடு அவர்கள் நகர, கதிர்காமக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் சித்தரைக் காணாது திகைக்க ஆரம்பித்தனர்.

நாட்கள் நகர, பதினைந்து நாட்கள் கழித்து ஆற்றில் நீர் வற்றிய நிலையில் ஆற்றுக்குள்ளே சித்தர் விழுந்து கிடப்பதை அறிந்த ஒரு சிறுவன் ஊரில் விஷயத்தைச் சொல்ல, எல்லோரும் பதற்றமாக ஆற்றங்கரையில் கூடினர். சித்தர் கை கால்கள் கட்டப்பட்டு வீசப்பட்ட இடத்தில் அப்படியே இருந்தார். அவரது பாதி உடல் மணலுக்குள் புதைந்திருக்க, மேல் உடல் முழுதும் கயிறு இறுக்கி சிவந்துபோயிருந்தது. அவரது நிலையைக் கண்டு அதிர்ந்துபோன ஒரு சிலர் பரபரப்பாக ஓடிச்சென்று அவரை மணலிலிருந்து வெளியெடுத்து உடல் முழுதுமிருந்த கயிறுகளைப் பிரித்தனர். அடுத்த நொடி அவர் கண் திறந்தார். 'இது என்ன மாயை!' எல்லோரும் மெய்சிலிர்ப்போடு சித்தரைப் பார்க்க, அவர் தன் மீதிருந்த மணலை உதறிவிட்டு ஏதும் நடந்திடாதது போன்று நடக்க ஆரம்பித்தார். சுற்றிலும் இருந்தவர்கள் வியப்புடன் பார்க்க, அவர் அவர்களைப் பார்த்து மெல்லப் புன்னகைத்துவிட்டு நடக்க ஆரம்பித்தார்.

சில மணி நேரங்களில் இலங்கை கடல்பரப்பில் நடந்து கடலோரத்தில் ஒருசில நொடிகள் நின்றார். ஆர்ப்பரித்து எழும் அலைகள் அவர்மீது மோத, புன்னகையோடு அவற்றை எதிர்கொண்டு நடக்க ஆரம்பித்தார். கடல் அலைகளின் சீற்றம் அவரை கைகுலுக்கி வரவேற்க, கடல்மீது நடந்தார். சில மணி நேரங்களில் அவரது பாதம் நம் இந்திய மண்ணைத் தொட்டது.

சுற்றும்முற்றும் பார்த்தவர் நேரே காரைக்கால் சன்னதிக்குச் சென்றார். அந்த நொடியிலிருந்து சீமான் சித்தரின் இருப்பிடம் காரைக்காலானது.

முதலில் அவரை ஏதோ கிறுக்குச் சாமியார் என உணர்ந் தவர்கள், அவரின் அற்புதங்களை உணர ஆரம்பித்ததும் சித்த மகாபுருஷர் என வணங்க ஆரம்பித்தனர். இதுமட்டுமல்லாது இலங்கையில் அவரது அற்புதத்தால் குணமடைந்தவர்கள் அவரின் மகிமைகளைச் சொல்ல, சித்தர் இருக்கும் இடம் தேடி பலரும் வர ஆரம்பித்தனர். ஆனால் யார் அழைப்புக்கும் அன்புக்கும் கட்டுப்படாமல் ஒரே இடத்தில் பல இடங்களில் தோன்றுதல், திடீரென ஒரே இடத்தில் தோன்றி மறைதல், விண்ணில் பறத்தல் என பல்வேறு சித்துக்களின் மூலம் மக்களிடமிருந்து விலகி இருந்தார்.

கால் போன போக்கில் காரைக்கால் முழுதும் சுற்றிவரும் அவர், திடீரென ஒரு வீட்டின் முன்பு நின்று வாய்திறந்து கேட்டுவிட்டால் அந்த வீடு எல்லாவிதமான ஐஸ்வர்யங்களும் நிரம்பி வழியும் செல்வ நிலைக்கு உயர்ந்துவிடும். இதனாலேயே சித்தர் இன்று நம் வீட்டுக்கு வந்து ஏதேனும் சாப்பிட கேட்க மாட்டாரா? என்று எல்லோரும் காத்திருப்பார்கள்.

கடைவீதியில் சென்று ஏதாவது ஒரு கடையின் கல்லாப்பெட்டியில் கை வைத்து ஒரு சில காசுகளை எடுத்துவந்து நாட்டு மருந்துக் கடைக்கு அருகே இருக்கும் கிணற்றில் போட்டுவிட்டு கால்போன போக்கில் நடையைக் கட்டுவார். அவர் காசு எடுத்த அந்த நொடியிலிருந்து அந்தக் கடையில் வியாபாரம் பன்மடங்காகப் பெருகிவிடும். அதுமட்டுமல்ல, அந்தக் கடை முதலாளியின் குடும்பத்தில் மங்களம் பொங்கும். இதனாலே சித்தர் இன்று தனது கடையின் கல்லாவிலிருந்து காசு எடுக்க மாட்டாரா என கடைக்காரர்கள் காத்திருப்பார்கள். இப்போதும் சித்தர் காசுகளை வீசிய கிணறு காரைக்காலில் 'சீமான் கிணறு' என்று அழைக்கப்படுகிறது. அதேபோல் அவர் பெரும்பாலான நேரங்களில் தியான நிலையிலிருந்த இடத்திற்கு அருகேயுள்ள குளம் 'சீமான் குளம்' என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

சித்தர் ஒரு கருணைக் கடல். நிஜமாகவே தன்னை நம்பிவரும் அன்பர்களின் பிரச்னைகளை ஒரு சில நொடிகள் கூர்மையாகப் பார்த்து, தனது ஒளிமிகுந்த பார்வையாலேயே சரிசெய்து விடுவார்.

விபத்தில் கால் எலும்பு நொறுங்கிய நிலையில் வந்த அன்பருக்கு தனது அமானுஷ்ய சக்தியால் ஒருசில நாட்களிலேயே எலும்புகளைக் கூடவைத்து நடக்க முடியாத நபரை நடக்க வைத்திருக்கிறார்.

உடல் முழுதும் வெண்குஷ்ட நோயால் வருந்தியவரை, தன் கைகளைப் பதித்து அமானுஷ்ய சக்தியைப் புகுத்த, ஒருசில வாரங்களிலேயே அவரது உடலை பழைய நிலைக்குக் கொண்டுவந்து ஆச்சரியமூட்டியிருக்கிறார்கள்.

எதிர்வரப்போகும் ஆபத்துக்களிலிருந்து அவர்களை அறியாமல் ஒரு சிலரை காப்பாற்றி அருளியிருக்கிறார்கள்.

காரைக்கால் மண்ணில் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளமானவை. அதற்குச் சான்றாக தா.கு.குருசாமி செட்டியாரின் குடும்பத்தினரும், ருக்மணி அம்மாள் குடும்பத்தினரும், தெய்வசகாயம் குடும்பத்தினரும் காரையில் சித்தரின் அருட் சான்றாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இருதய நோயாளிகளையும் காச நோயாளிகளையும் தனது அற்புத அருளினால் முழுமையாகக் குணப்படுத்தி பல்வேறு அற்புதங்களை நிகழ்த்திய அந்த மகாபுருஷர் 1890ம் ஆண்டு மாசி மீ கேட்டை நட்சத்திரத்தில் ஜீவ சமாதி நிலையடைந்தார். ஒரு நூற்றாண்டைக் கடந்தபிறகும், இன்றும் காரைக்கால் நகரில் வீற்றிருக்கும் அவரது ஜீவசமாதியிலிருந்து சூட்சும உடலோடு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

சூக்ஷ்ம பலம், ஆயுள் பலம், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் அருளும் அந்தச் சித்தரின் ஜீவசமாதியைத் தரிசித்து உங்கள் குறைகளைச் சொல்லுங்கள். நல்லதை, வல்லதைத் தந்தருளி உங்கள் வாழ்வை வளமாக்குவார் ஸ்ரீலஸ்ரீ சீமோன் சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 2

# ஸ்ரீலஸ்ரீ மாயாண்டிச் சித்தர்

**ஸ்ரீ**லஸ்ரீ மாயாண்டிச் சித்தர் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகாவில், மதுரைஇராமேஸ்வரம் நெடுஞ் சாலையிலுள்ள முத்தனேந்தல் நகருக்கு அருகே இருக்கும் கட்டிக்குளம் கிராமத்தில் குப்பமுத்து வேளாளருக்கும் தத்தாயி அம்மையாருக்கும் மகனாக அவதரித்தார்.

மண்பாண்டம் செய்து பிழைப்பு நடத்திவந்த குப்பமுத்து வேளாளர் - தத்தாயி தம்பதிகளுக்கு நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியம்இல்லை. ஒருநாள் இறைவன் அருள்போல் அவ்வூருக்கு வந்த ஸ்ரீலஸ்ரீ கூட்டுக்கோல் இராமலிங்க சித்தரை அணுகி, மனமுருகி வேண்டிக்கொண்டார்கள். அந்த மகா சித்தரும் 'உங்களுக்கு தெய்வ அருள் பொருந்திய மகன் பிறப்பான்.

பின்னாளில் உலக நன்மைக்காக மட்டுமே வாழ்வான்' என்று அருள்பாலித்து அருள, 1858ம் ஆண்டு ஆடி மாதம் வளர்பிறை பூர்த்தி திதியில் மாயாண்டிச் சித்தர் அவதரித்தார்.

சிறிய வயதில் ஒரு சாதாரண குழந்தையாக வளர ஆரம்பித்த சித்தர், மெல்ல மெல்ல தன்னுள் இருக்கும் அற்புதச் சக்திகளை வெளி உலகிற்கு தெரியப்படுத்த ஆரம்பித்தார்.

எட்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது, அவரது தந்தை குப்பமுத்து வேளாளருடன் ஐயனார் கோயிலுக்குச் சென்றார். அங்கு கோயிலுக்கு அருகே ஒரு நந்தவனம் இருக்க, அதனுள் மாயாண்டிச் சித்தரை விளையாடச் சொல்லிவிட்டு, வரும்போது உனக்குப் பிரசாதம் கொண்டுவருகிறேன் என ஐயனார் கோயிலுக்குள் சென்றார் குப்பமுத்து வேளாளர். கோயிலில் ஐயனாரைத் தரிசித்துவிட்டு சிறிது நேரத்தில் பிரசாதத்துடன் நந்தவனத்திற்கு வந்தவர், தன் மகனைக் கண்டு அதிர்ந்தார். காரணம், நந்தவனத்தில் மாயாண்டி தியான நிலையில் அமர்ந்திருக்க, அவர் தலைமீது ஒரு நாகப்பாம்பு படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தது. அந்த நாகம் எங்கே தனது மகனைக் கொத்திவிடுமோ எனப் பாய்ந்து, 'ஐயோ பாம்பு, பாம்பு' என குப்பமுத்து வேளாளர் அலற, அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் அவரின் அலறல் கேட்டு ஓடிவந்தார்கள். 'இது எப்படி சாத்தியம்? அந்தச் சிறுவன் தன் தலையைச் சுற்றி ஒரு நாகப் பாம்பு படமெடுத்து ஆடுவதை உணராமல் கண்மூடி உட்கார்ந்திருக்கிறானே! அந்தப் பாம்பை அடிக்கச் சென்றால் அது சிறுவனைக் கொத்திவிடுமே! இப்போது என்ன செய்வது?' என எல்லோரும் குழப்பமாகப் பார்க்க...

மெல்லக் கண் திறந்த மாயாண்டிச் சித்தர், 'நாகராஜா, இறங்கிப் போறீங்களா?' என கொஞ்சமும் அதிராமல் புன்னகையோடு குரல் கொடுக்க, அந்த நாகம் அச்சிறுவனின் முதுகின் வழியே இறங்கி நகர்ந்து மறைந்தது.

நடப்பதை எல்லோரும் திகைப்பாகப் பார்க்க, குப்பமுத்து வேளாளர் ஓடிப்போய் தன் மகனைத் தூக்கிக் கொண்டார். அவரைப் பார்த்துப் புன்னகைத்த சித்தர், 'என்னப்பா பயந்துட்டீங்களா? நாகராஜன் எனக்கு நண்பன். அவனோட

நான் அடிக்கடி இப்படித்தான் விளையாடுவேன்' என்று சொல்ல, அப்பொழுதுதான் 'இது தெய்வத்தின் மகன் ஆயிற்றே! இவன் சூட்டுக்கோல் இராமலிங்க சித்தரின் அருளால் அவதரித்த மகன் ஆயிற்றே!' என்பது குப்பமுத்து வேளாளருக்குப் புரிந்தது. சுற்றிலும் இருந்தவர்கள் இது சாதாரண குழந்தையல்ல. தெய்வ அருளால் அவதரித்த குழந்தை என உணர்ந்து அச்செய்தியை அவ்வூர் முழுக்க தெரிவித்தனர்.

நந்தவனத்தில் நடந்ததை தனது மனைவி தத்தாயி அம்மாளிடம் குப்பமுத்து வேளாளர் தெரிவிக்க, 'நம் மகன் தெய்வ அருள் பொருந்தியவன் என்பதில் சந்தோஷமாக இருந்தாலும், சூட்டுக்கோல் சித்தர் சொன்னதுபோல் உலக நன்மைக்காக வாழச் சென்றுவிடுவானோ என பயமாக இருக்கிறது' என கலங்க ஆரம்பித்தாள் தத்தாயி அம்மாள்.

ஒருநாள் களத்துமேட்டில் நெல் அவித்து காயப்போட்டிருந்த தத்தாயி அம்மாள் பள்ளிக்கூடம் சென்று அம்மாவைப் பார்க்க களத்துமேட்டிற்கு வந்த மாயாண்டியிடம், 'நீ இந்த நெல்லை காக்கைகள் தின்னாமல் பார்த்துக்கொள். உனக்குச் சாப்பாடு கொண்டுவருகிறேன்' என மாயாண்டியை காவலுக்கு வைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றாள். அங்கே நெல் கதிரைத் தின்னும்விதமாக காக்கைகள் பறந்துவர அவற்றை விரட்டி விட்டு தியானத்தில் அமர்ந்தார் மாயாண்டிச் சித்தர். இப் போது விரட்டுவதற்கு ஆள் இல்லாததால், கூட்டம் கூட்டமாக காக்கைகள் களத்துமேட்டுக்கு வந்து நெல் கதிர்களை கொத்தித் தின்ன ஆரம்பித்தன. தியானத்தின் இடையே கண் திறந்த சித்தர், களத்துமேடு நிறைய காக்கைகள் சூழ்ந்திருப்பதைப் பார்த்து, 'என் தியானத்தைக் கலைக்கறீங்களா? ஏ காக்கைகளே! இந்தக் களத்துமேட்டிலுள்ள நெல்லைக் கொத்தும் நீங்கள் எல்லோரும் மாண்டுபோங்கள்' எனச் சொல்லிவிட்டு, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு தன் மகனுக்குச் சாப்பாடு கொண்டுவந்த தத்தாயி அம்மையார், களத்துமேடு நிறைய காக்கைகள் இறந்துகிடப்பதைப் பார்த்து அதிர்ந்துபோனாள்.

'ஐயோ! மகனே! உன்னிடம் காக்கைகளை விரட்டத்தானே

பொன்னேன்? இப்படி எல்லாவற்றையும் கொன்றுவிட்டாயே! காக்கைகளைக் கொன்ற பாவம் நம் பரம்பரைக்கே ஆகாதடா!' என்று அழ ஆரம்பிக்க, அம்மாவின் குரல் கேட்டு தியானம் கலைந்த சித்தர், எதிரே நடந்திருக்கும் விபரீதம் உணர்ந்து அம்மாவைப் பார்த்து, 'அம்மா அழாதீங்க! அந்தப் பறவைகள் சாகவில்லை. தூங்கிக் கிடக்கின்றன. இப்ப பாருங்க. எல்லா காக்கைகளும் பறந்து செல்லப்போகிறது' என்று சொல்லிவிட்டு காக்கைகளின் அருகே சென்று, 'ம். இன்னும் என்ன தூக்கம் போகலியா? எழுந்து பறந்து போங்கள்' என்று சொல்ல, அடுத்த நொடி, படபடவென இறக்கைகளை உதறி அத்தனை காக்கைகளும் 'கா கா கா' என்ற குரலோடு பறக்க ஆரம்பித்தன.

தன் கண் எதிரே நடப்பது நிஜமா? இல்லை கனவா? இது எப்படி சாத்தியம்? என்ற கேள்விகளோடு தத்தாயி அம்மாள் தன் மகனைப் பார்க்க, மெலிதான புன்னகை ஒன்றை பதிலாகத் தந்துவிட்டு, 'பசிக்குது, சாப்பாடு போடும்மா' என்றார் மாயாண்டிச் சித்தர்.

தனது சிறுவயதிலேயே இதுபோன்ற ஏகப்பட்ட சித்துக்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திய சித்தர், எண்ணற்றோரின் பிணிகளைத் தீர்த்து ஆரோக்கிய வாழ்வினை அருளியிருக்கிறார்.

தனது மகன் தெய்வ அருள் பொருந்தியவன். ஸ்ரீ சூட்டுக்கோல் சித்தர் சொன்னதுபோல் இவன் பெரியவனானதும் குடும்பத்தை விட்டு விலகிச் சென்றுவிடுவான் என்று உணர்ந்த அவரது பெற்றோர், திருமணம் என்கிற பந்தத்தில் மாயாண்டியைக் கட்டிப்போட்டால் இங்கேயே தங்கிவிடுவார் என புளியங்குடி கிராமத்தைச் சார்ந்த மீனாட்சியை அவரது துணையாக திருமணம் செய்து வைத்தனர்.

மிக இனியதாக அவர்கள் இல்வாழ்க்கை நகர்ந்ததன் பயனாக, மீனாட்சி, கணபதி என்கிற இரண்டு தெய்வ அருட் குழந்தைகளுக்குத் தந்தையானார் மாயாண்டிச் சித்தர். குழந்தைகள் வளர ஆரம்பிக்க, ஒருநாள் ஸ்ரீ சூட்டுக்கோல் சித்தர் வாக்குப் படி, 'எனக்கு இரண்டு குழந்தைகளல்ல. ஆயிரக்கணக்கான குழந்தைகளின் நல்வாழ்விற்கு இந்த பூமிக்கு வந்தவன் நான்'

என மாயாண்டிச் சித்தர் உலக நன்மைக்காக வீட்டைவிட்டு புறப்பட்டார். பெற்றோர், மனைவி, குழந்தைகள் எவ்வளவோ தடுத்தும் நிற்காமல் 'சித்தன் போக்கு சிவன் போக்கு' எனப் புறப்பட்டுவிட்டார். சித்தரின் இந்த முடிவால் அதிர்ச்சி யடைந்த அவரது துணைவியார் மீனாட்சி, அவர் கட்டியிருந்த வேஷ்டியைப் பிடித்திழுத்து 'போகாதீங்க' என்று தடுக்க முயல, வேஷ்டி சித்தரின் இடுப்பிலிருந்து கழன்று மீனாட்சியின் கைகளுக்குச் சென்றது. அப்போது அவர் தன் மனைவியைப் பார்த்து, 'இனிமேல் இந்த வேஷ்டிதான் உனக்குச் சொந்தம்' என்று சொல்லியவாறு அங்கிருந்து நகர்ந்தார்.

'இறைவன் திருவடிதான் தன் இருப்பிடம். இந்த உலக மனிதர் களின் நல்வாழ்வுதான் தன் நோக்கம்' எனப் புறப்பட்டவர் கல்லங்குடி, விலத்தூர், தஞ்சாவூர் வழியாக மார்நாடு என்கிற கிராமத்திற்குச் சென்றார். அங்கே சிறிது நேரம் ஒரு ஆலமரத் தடியில் தியானத்தில் அமர்ந்தவர் சற்று நேரத்தில் புன்னகையாய் கண் திறந்து, அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை அழைத்தார். அவர்கள் மாயாண்டிச் சித்தரின் முகத்தைப் பார்த்ததும் அவர் ஒரு தெய்வீக புருஷர் என்பதை உணர்ந்து கரம் குவிக்க ஆரம்பித்தனர். அவர்களை நோக்கி சித்தர், 'என்னை ஏன் வணங்குகிறீர்கள்? இங்கே உங்கள் ஊரில் கண்மாய்க் கரையில் மண்ணுக்குள்ளே ஒரு சிவன் கோயில் புதையுண்டு கிடக்கிறது. முதலில் மணலைத் தோண்டி கோயிலைக் கண்டுபிடியுங்கள். அங்கேயுள்ள சிவனும் மீனாட்சியும் உங்களைக் காத்தருள்வார்கள். அவர்கள்ள வணங்குங்கள்' என்று சொல்ல, அவர்கள் ஊரிலுள்ள முக்கியஸ்தர்களிடம் சொல்ல, 'இந்தச் சித்தர் சொல்வது உண்மையாக இருக்குமோ?' என்ற கேள்வியுடன் கண்மாய்க் கரையில் தோண்ட ஆரம்பித்தனர். என்ன ஆச்சரியம்! சித்தர் சொன்னதுபோலவே பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மண்ணில் புதைந்துபோன சிவன் கோயிலும் மீனாட்சியம்மன் கோயிலும் அங்கே இருப்பதைக் கண்டு எல்லோரும் திகைப்படைந்தனர். 'எங்கள் ஊருக்கு நல்லருளைத் தந்த தெய்வமே' என சித்தரை வணங்க ஆரம்பித்தனர். கோயிலைச் சுத்தப்படுத்தி தினந் தோறும் பூஜைகள் செய்ய ஆரம்பித்தனர். அன்று மாயாண்டிச்

துரால் புதையுண்டு கிடந்த கோயிலைக் கண்டறிந்த மார்நாடு கிராம மக்கள், இன்றும் அக்கோயிலை சிறப்பாகப் பராமரித்து வருகிறார்கள்.

அக்கிராமத்தில் சில காலம் தங்கியிருந்து நல்லருள் புரிந்துவந்த சித்தர் 1882ம் வருடம் அங்கிருந்து புறப்பட்டு மதுரை தல்லாகுளத்துக்கு வந்தார். அங்கே கோரிபாளையத்தில் ஒரு கள்ளிச்செடியில் படுத்துவிட்டார். அதுதான் இனி தனது இருப்பிடம் என்று உணர்ந்த சித்தர், அங்கே ஸ்ரீ சூட்டுக்கோல் இராமலிங்க சித்தரின் கைகளில் வைத்திருந்த சூட்டுக்கோலை ஊன்றி அம்மகா சித்தரை வணங்க ஆரம்பித்தார்.

கோரிபாளையத்திலும் மாயாண்டிச் சித்தரின் மகத்துவம் அறிந்து, எண்ணற்றோர் அவரை நாடிவந்து அவரின் அருளாசியைப் பெற்றுச்செல்ல ஆரம்பித்தனர்.

ஒருநாள் அக்கிராமத்தின் பெரிய செல்வந்தர்களில் ஒருவரான காசிச் செட்டியாரின் மகன் வயலுக்குச் செல்லும்போது நல்ல பாம்பு கடித்து இறந்துவிட்டான். தனக்கென இருந்த ஒரே வாரிசான தன் மகன் இறந்துபோன சோகத்தில் காசிச் செட்டியார் மனம் உடைந்து போனார். கண்ணீரும் கதறலுமாக காசிச் செட்டியாரின் மகனின் உடலை பாடையில் வைத்து சுடுகாட்டுக்கு எடுத்துச்சென்றனர். அப்போது வழியில் கள்ளிச்செடியில் படுத்திருந்த சித்தர் சட்டென எழுந்து வந்தார். பாடையை வழிமறித்து உட்கார்ந்துவிட்டார். உடனே சோகத்தில் இருந்தவர்கள், 'யாரடா இந்தப் பைத்தியம்? வழியில் வந்து உட்கார்ந்துவிட்டது?' என்று கோபமாக வந்து, 'ஏய் பைத்தியமே, எழுந்து போ!' என்று தூக்க முயல, அவர்களின் கையைத் தட்டிவிட்டு எழுந்த சித்தர், 'யாருடா பைத்தியம்? தூங்கிக்கிட்டு இருக்கறவனை செத்துப்போய்ட்டான்னு நினைச்சு பாடையிலே தூக்கிட்டு வர்றீங்களே! நீங்கதான் பைத்தியம்!' என்று சொல்ல, காசிச் செட்டியார் உடனே முன்னால் ஓடிவந்து, 'சுவாமி! நீங்கள் சொல்வது உண்மையா? என் மகன் உயிரோடு இருக்கிறானா?' என்று கேட்க தலையசைத்த சித்தர், பாடையை கீழே இறக்கும்படி சொல்லிவிட்டு, பாடையில் இறந்துகிடந்த அந்த இளைஞனின் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்கள்

வரை மூன்று முறை கையால் தடவிவிட்டார். அடுத்த நிமிடம் அத்தனை முகமும் அதிர்ச்சியில் உறையும் விதமாக அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. சித்தரின் கரம் பட்டதும், சில்லிட்டு இருந்த உடலில் உஷ்ணம் பரவி திடீரென உடலை ஒரு வெட்டு வெட்டி, துள்ளி எழுந்து உட்கார்ந்தான் அந்த இளைஞன். சுற்றிலும் இருந்தவர்கள் மயிர்க்கால் கூச்செறியும்விதமாக ஆச்சர்யத்தில் படபடத்தார்கள்.

எழுந்து உட்கார்ந்த இளைஞர் காசிச் செட்டியாரிடம் வந்து, 'எனக்கு என்னப்பா ஆச்சு? ஏன் இப்படி தூக்கிட்டு வந்தீங்க?' என்று கேட்க, கண்ணீரோடு சித்தரைப் பார்த்த காசிச் செட்டியார் சட்டென்று சித்தரின் கால்களில் விழ, எல்லோரும் அவரின் காலில் வீழ்ந்து வணங்கினர். சட்டென்று அவர்களிடமிருந்து விலகிய மாயாண்டிச் சித்தர், மீண்டும் அந்த கள்ளிச்செடியில் போய் படுத்துக்கொண்டார்.

இது நிஜமா உண்மையா? என்று யோசிக்கிறன்றனர் அன்று சித்தரால் உயிர் பிழைத்த இளைஞனின் வாரிசுகள். இன்று அவரின் கருணையை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்று காசிச் செட்டியாரின் மகனை உயிர் பிழைக்கவைத்தது போலவே மதுரை வடக்கு மாசி வீதியில் தாழமுத்து பிள்ளை சந்தில் பெரும் செல்வந்தராக வாழ்ந்த கருப்பண்ணக் கோனாரின் மகன் இருளப்பனையும் உயிர் பிழைக்க வைத்திருக்கிறார் சித்தர்.

மருத்துவர்களால் இனி காப்பாற்ற முடியாது என கைவிடப் பட்ட இருளப்பனை சித்தரிடம் அழைத்துவந்த கருப்பண்ணக் கோனார் தன் மகனைக் காப்பாற்றும்படி வேண்ட, அவனை கட்டிக்குளத்திற்கு அழைத்து வரும்படி சொன்ன சித்தர், அங்கே 6 க்கு 6 குழி வெட்டச்சொல்லி அமர்ந்துகொண்டு குழியை மரப்பலகை போட்டு மண்ணால் மூடிவிடும்படி சொல்லிவிட்டு, இருபத்து நான்கு மணி நேரம் இருளப்பனின் நெற்றிப்பொட்டில் கரம் பதித்து மரணத்தில் கடைசி நிமிடங்களில் இருந்தவனை மீண்டும் உயிர்த்தெழ வைத்தார். மறுநாள் காலை புதுப்பொலிவுடன் புன்னகை முகமாய் குழிக்குள்ளிருந்து வெளியே வந்த இருளப்பனைப் பார்த்து

எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். இறந்துகொண்டிருந்தவனை உயிர் பிழைக்க வைத்த மாயாண்டிச் சித்தரின் கால்களில் கருப் பண்ணக் கோனார் கண்ணீருடன் வீழ்ந்து வணங்கினார்.

தன் உடலைவிட்டு விலகிச் சென்ற ஆன்மாவை மீண்டும் தன் உடலுக்குள் புகவைத்த மாயாண்டிச் சித்தரின் சிஷ்யனாகப் போகிறேன் என இருளப்பன் சித்தருடன் புறப்பட, கருப் பண்ணக் கோனார், 'உயிர் கொடுத்த மகானுக்குப் பணிவிடை செய்' என மகனை சித்தருடன் அனுப்பிவைத்தார். இருளப்பன் பல காலம் சித்தருடன் தங்கியிருந்து பணிவிடை செய்தார்.

இராமநாதபுரம் மண்ணில் மாயாண்டிச் சித்தர் ஏகப்பட்ட சித்துக்கள் நிகழ்த்தியிருக்கிறார். ஒருமுறை தீராத வயிற்றுவலியால் வேதனைப்பட்ட இராமநாதபுரம் மன்னர் சேதுபதி தனது பிரதான மந்திரியிடம் 'கட்டிகுளம் கிராமத்தில் மாயாண்டிச் சித்தர் என்கிற மகான் இருக்கிறார். அவரை அழைத்து வா!' என்று சொல்லி, அவர் அரண்மனைக் காவலர்களைக் கட்டளையிட்டு கட்டிகுளம் சென்று சித்தரை அழைத்துவரும்படி சொன்னார். கட்டிக்குளம் வந்த காவலர்கள், 'நாங்கள் சாரட் வண்டி கொண்டு வந்திருக்கிறோம். இராமநாதபுரம் சேதுபதி உங்களை அழைத்துவரச் சொன்னார்' என்றனர்.

அவர்கள் வந்திருப்பதன் நோக்கம் அறிந்த சித்தர், 'நீங்கள் செல்லுங்கள் நான் வருகிறேன்' என்றார். அவர்கள் சாரட் வண்டியில் வேகமாகச் செல்ல, பல மைல் தூரங்களுக்கு அப்பால் ஒரு கண்மாய்க் கரையில் சித்தர் நின்றிருக்க, எல்லோரும் அவரை அதிர்ச்சியாகப் பார்த்தனர். 'இவர் எப்படி நமக்கு முன்பாக இங்கே வந்தார்?' என்று யோசிப்பதற்குள் அங்கிருந்த பள்ளக்குழிக்குள் குதித்த சித்தர் அவர்கள் அரண்மனைக்குள் நுழையும் முன்பாகவே அங்கு வந்து மன்னர் சேதுபதிக்கு வைத்தியம் பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியில் வாயைப் பிளந்தனர்.

இதேபோல ஏகப்பட்ட சித்துகள் சித்தரால் நிகழ்த்தப் பட்டிருக்கிறது. மதியம் ஒரு மணிக்கு மலேசியாவிலும், மதுரையிலும், இராமநாதபுரத்திலும் மூன்று இடத்தில் மூன்று வீடுகளில் உணவு சாப்பிட்டதை சம்பந்தப்பட்ட மூன்று

குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஒன்றாகச் சந்திக்கும்போது, 'நேற்று இதே நேரத்தில் எங்கள் வீட்டில்தான் சாப்பிட்டார். அதெப்படி உங்க வீட்டுக்கு வரமுடியும்?' என ஆச்சரியப் படும்விதமாக நிறைய சித்துக்களை நிகழ்த்தியிருக்கிறார்.

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் வாழ்ந்த 56 ஊர்களுக்குச் சொந்தக்காரரான உக்கிரபாண்டித் தேவருக்கும் இந்திராணி அம்மையாருக்கும் நீண்ட நாட்களாக குழந்தை இல்லை. 'எவ்வளவு வைத்தியம் பார்த்தும் எங்கெல்லாமோ கோயில்களுக்குச் சென்றும் பலன் இல்லையே' என அவர்கள் தவித்தபோது, அவர்களிடம் ஒரு முதியவர் 'நீங்கள் கட்டிக்குளம் சென்று மாயாண்டிச் சித்தரைப் பாருங்கள். அவர் அருள்பாலிப்பார்' என்று சொல்ல, உடனே உக்கிரபாண்டித் தேவரும் இந்திராணி அம்மையாரும் கட்டிக்குளம் வந்தனர்.

அவர்களை புன்னகையோடு வரவேற்ற சித்தர், '56 ஊர்களுக்கு சொந்தக்காரர். இந்தச் சாதாரணமானவனைத் தேடி வந்திருக்கீங்களே' என்று சொல்ல, 'இவருக்கு எப்படி தன்னைப்பற்றித் தெரிந்தது?' என்று ஆச்சரியப்பட்ட உக்கிரபாண்டித் தேவர், 'தனக்குப் பிள்ளை வரம் வேண்டும்' எனக் கேட்க, சற்று நேரம் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்த சித்தர் புன்னகையோடு கண்திறந்து 'உங்களுக்கு பிள்ளை வேண்டுமா? ஊர் போற்றும் பிள்ளை வேண்டுமா?' என்று கேட்டார்.

தனது அருகிலிருந்த இந்திராணி அம்மையாரை ஒரு நொடி பார்த்த உக்கிரபாண்டித் தேவர், 'ஐயா, எங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளைதான் வேண்டும்' என மாயாண்டிச் சித்தரிடம் சொன்னார். உடனே அவர்கள் இருவரையும் பார்த்து புன்னகைத்த சித்தர், 'தேவரே! உங்கள் மனைவியின் வயிற்றில் ஒரு முத்து இருக்கிறது. அது அடுத்த வருடம் குழந்தையாக பிறக்கப்போகிறது. அந்த முத்துவை ஊர் அல்ல உலகமே போற்றும். அதனால் அந்தக் குழந்தைக்கு முத்து என்ற பெயரையும் என்னுடைய குருநாதரான இராமலிங்க மகானின் பெயரையும் சேர்த்து வையுங்கள்' என்று ஆசிர்வதிக்க, சந்தோஷத்துடன் அவர்கள் ஊர் சேர்ந்தார்கள். மாயாண்டிச் சித்தர் ஆசிர்வதித்ததுபோலவே அடுத்த ஆண்டே

அவர்களுக்கு அருள்வடிவமாய் ஒரு ஆண் குழந்தை பிறக்க, அக்குழந்தைக்கு முத்துராமலிங்கம் எனப் பெயரிட்டு மகிழ்ந் தனர். அந்தக் குழந்தை வேறு யாருமில்லை. இந்திய மண்ணில் மறக்க முடியாத மாமனிதராக வாழ்ந்த முத்து இராமலிங்கத் தேவர்தான் அவர்.

மாயாண்டிச் சித்தர் நிகழ்த்திய அற்புதங்களில் மறக்க முடியாத நிகழ்வு ஒன்று வெள்ளையர் ஆட்சியின்போது மாயாண்டிச் சித்தர் மானாமதுரைக்கு இரயிலில் பயணம் செய்த போது நடுவழியில் டிக்கெட் பரிசோதகர் மாயாண்டிச் சித்தரை இரயிலில் இருந்து கீழே இறக்கிவிட்டார். அவர் கீழே இறங்கிச் சென்று ஒரு ஆலமரத்தில் தியானத்தில் அமர்ந்துவிட்டார். இதன்பின் அந்த இரயில் புறப்படத் தயாரானபோது டிரைவர் எவ்வளவோ முயற்சி செய்தும் அந்த இரயிலை ஒரு அங்குலம்கூட நகர்த்த முடியவில்லை.

இது என்ன ஆச்சரியம்? திடீரென இரயில் நகர மறுக்கிறதே என இரயில் இன்ஜினியர்களுக்கு தகவல் தர, அங்கே வந்த இன்ஜினியர்கள் இன்ஜினை சரி பார்த்துவிட்டு, 'எல்லாம் சரியாக இருக்கிறது! என்ன காரணத்தால் வண்டி நகர மறுக் கிறது?' என்று குழம்பிப்போனார்கள். அப்போது வண்டியில் பயணம் செய்தவர் இன்ஜின் டிரைவரிடம் சென்று டிக்கெட் பரிசோதகர் மாயாண்டிச் சித்தரை இறக்கிவிட்டதைச் சொல்ல, அவரை அழைத்து வரும்படி டிக்கெட் பரிசோதகரை அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டனர். அதன்படி டிக்கெட் பரிசோதகர் ஆலமரத்தில் தியான நிலையிலிருந்த மாயாண்டிச் சித்தரிடம் சென்று மீண்டும் இரயிலுக்கு வரும்படி அழைக்க, சித்தர் இரயிலில் வந்து அமர்ந்ததும் வண்டி புறப்பட்டது. இரயிலில் பயணம் செய்த அத்தனை பேரும் ஆச்சரியத்தின் உச்சிக்குப் போனார்கள். இது என்ன மாயம்? இது என்ன அற்புதம்? அவர் மனிதரே அல்ல தெய்வம் என சித்தரை பக்தியுடன் பார்த்தனர்.

எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் இரயில் மானாமதுரையை அடைந்தது. அங்கு மாயாண்டிச் சித்தரை வரவேற்கக் காத்திருந்த பக்தர்களின் கூட்டத்தைப் பார்த்து டிக்கெட் பரிசோதகர்

மிரண்டு போனார். 'இவ்வளவு புகழ் வாய்ந்த ஒரு மகானை இரயிலில் இருந்து இறக்கிவிட்டோமே' என்று வருந்திய டிக்கெட் பரிசோதகரான அந்த ஆங்கில துரை சட்டென சித்தரின் கால்களில் வீழ்ந்து மன்னிப்பு கேட்டார்.

'நானே ஒரு பரதேசி. மேலே உடைகூட அணிவதில்லை. சட்டையில்லை, சட்டையில் பாக்கெட் இல்லை, பாக்கெட்டில் பணம் இல்லை. அதற்கான தேவையோ பர்சோ இல்லாத சிவனடி சாதுக்கள் நாங்கள். எங்களிடம் டிக்கெட் கேட்கலாமா?' என்று மாயாண்டிச் சித்தர் கேட்க, அவரிடம் மன்னிப்பு கேட்ட ஆங்கில துரை, 'இனிமேல் இராமேஸ்வரம் செல்லும் இரயிலில் இலவசப் பயணம் செய்ய சாதுக்களுக்கு அனுமதி வழங்கப்படும்' என்று அறிவித்தார். பல ஆண்டுகள் இந்தச் சலுகை வழக்கில் இருந்தது.

இதேபோல் மற்றொரு சம்பவம். ஆங்கிலேயர் ஆட்சியின் போது நடந்தது. குன்றக்குடி முருகன் கோயில் தேரோட்டத் தன்று தேர் இழுத்து வரும்போது மாயாண்டிச் சித்தர் தேரின் உச்சியில் கோவணத்துடன் நின்றுகொண்டிருந்தார். இதைப் பார்த்த வெள்ளைக்கார அதிகாரி தேரை நிறுத்தி சித்தரை இறக்கி விட்டார். உடனே சித்தர் மலை அருகில் இருந்த மண்டபத்தில் தியானத்தில் அமர்ந்துவிட்டார். அதன்பிறகு தேரை நகர்த்த முயன்றவர்கள் அதிர்ச்சியில் உறைந்தார்கள். காரணம், ஒரு அங்குலம்கூட தேரை நகர்த்த முடியவில்லை. பல மணி நேரம் போராடியும் தேரை நகர்த்த முடியாததால், அந்த அதிகாரி தனக்கு மேலே இருந்த அதிகாரியை அழைத்து வந்து 'தேரை நகர்த்த முடியவில்லை' என்று சொல்ல, அதற்குக் காரணம் கேட்ட அதிகாரியிடம், 'சித்தரை கீழே இறக்கிவிட்ட விஷயத்தைச் சொன்னார்கள் தேர் இழுத்தவர்கள். உடனே தியானத்திலிருந்த மாயாண்டிச் சித்தரிடம் வந்த மூத்த அதிகாரி, 'ஐயா! கொஞ்சம் கண் திறக்க முடியுமா?' என்று கேட்க, 'என்ன, தேரை நகர்த்த முடியவில்லையா?' என்று கேட்ட சித்தர், 'நான்தான் நிறுத்தி வச்சிருக்கேன். நான் நகர்த்தறேன். அதுக்கு நீங்க ஒரு உதவி செய்யணும்' என்று சொன்னார்.

'சொல்லுங்க ஐயா! என்ன உதவி வேணும்னாலும்

செய்யறேன்' என ஆங்கில அதிகாரி சொல்ல, '63 நாயன்மார்களில் முதன்மையாக விளங்குகின்ற, முதுமையில் இளமை பெற்ற திருநீலகண்ட நாயன்மாருக்கு இந்த மலையில் ஒரு மண்டபம் கட்ட வேண்டும்' என்று கேட்க, உடனே ஆங்கில அதிகாரி, 'தங்கள் சித்துப்படி திருநீலகண்ட நாயனார் பெயரில் ஒரு மண்டபத்தை பட்டயம் போட்டுத் தருகிறேன்' என பட்டயம் போட்டு கொடுத்துவிட்டார். அந்த திருநீலகண்ட நாயனார் மடத்தில் அன்றுமுதல் இன்றுவரை 24 நாட்டு குலால வம்சத்தார்கள் குரு பூஜைகளும் தினசரி பூஜைகளும் நடத்தி வருகிறார்கள்.

நெற்றியில் திருநீறும் மெல்லிய தாடியும் ஒளி பொருந்திய கண்களும் கோவணமுமாக காட்சியளித்த மாயாண்டிச் சித்தர், ஒரு இறையருள் நிறைந்த மகான். அன்று அவர் சொன்னது பலித்தது. பல நூறு நோயாளிகள் அவரது அற்புத சக்தியால் குணமடைந்திருக்கிறார்கள். அதேபோல் பல இடங்களில் அவரது மடாலயங்களை நிறுவினார். அந்த மடாலயங்களில் எல்லாம் ஒரு கிணறும் தியானக் குகையும் இருக்கச் செய்தார். அவர் எந்த ஊருக்குச் செல்ல விரும்புகிறாரோ அப்போது தான் இருக்கும் இடத்திலுள்ள கிணற்றில் இறங்கி அவர் சேரவேண்டிய இடத்தில் இருக்கும் மடாலயத்தின் கிணற்றிலிருந்து ஏறி மேலே வருவார். அதேபோல் ஒரு மடாலயத்தின் குகையின் உள்ளே செல்பவர் மற்றொரு இடத்திலிருக்கும் மடாலயத்தின் குகையிலிருந்து வெளிப்படுவார். இதுபோன்று பல நூறு சித்துக்களையும் அமானுஷ்யங்களையும் நிகழ்த்திய மாயாண்டிச் சித்தர் 1930-ம் ஆண்டு, ஒரே நாளில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் காட்சி கொடுத்து சமாதி நிலையை அடைந்தார்.

இன்றும் அம்மகா சித்தர் மதுரை திருப்பரங்குன்றம் வழித்தடத்தில் திருமுக்கூடல் மலை.. திருப்பரங்குன்றம் இரயில்வே கேட் அருகில் தியாகராஜர் பொறியியல் கல்லூரிக்கு அருகில் அமைந்திருக்கும் அவரது சமாதியிலிருந்து தன்னை நாடி வரும் பக்தர்களின் துயர் தீர்த்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். அதேபோல கட்டிக்குளம், முத்தனேந்தல்,

மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம் என்கிற முகவரியிலுள்ள அவரது மற்றொரு சமாதியிலிருந்தும் தனது பக்தர்களின் தேவையறிந்து அவர்களுக்கு நல்வாழ்வு அளித்துக்கொண்டிருக்கிறார் அத்தெய்வச் சித்தர்.

இது நிஜமா? சாத்தியமா? சித்தர் அவ்வளவு சக்தி நிறைந்தவரா? என்கிற கேள்விகள் உங்களுக்கு எழுமானால் அதற்கு ஒரே பதில், 'இது நிஜம்! நடந்த உண்மை.' இந்தப் பதிலை நான் மட்டும் சொல்லவில்லை. சென்னை முகப்பேர் மேற்கு மாநகர பேருந்து நிறுத்தத்தின் அருகே ஸ்ரீமச்சடி கருப்பண்ண சுவாமி ஆலயம் கட்டியிருக்கும் பிரகாஷ் ராஜா என்பவரும் இதையே சொல்கிறார்.

'மாயாண்டிச் சித்தரை என்னோட தாத்தா கருப்பண்ண சேர்வைக்கு ரொம்பவும் தெரியும். அவரோட சித்துக்களை நேர்ல பார்த்து வியந்து அவரை தங்களோட குலதெய்வமா வழிபட ஆரம்பிச்சாரு. என் அப்பா துரைசாமிக்கு அஞ்சு வயசிருக்கும்போது அவர் தலையில் கைவச்சு நீ பெரியவனானதும் உனக்கு நல்ல துணைவி அமைஞ்சு, முதல்ல ஒரு மகன் பிறப்பான்னு வாக்கு கொடுத்திருக்காரு. அவர் வாக்குப்படியே நான் பிறந்தேன். அதனாலேயே எங்க குடும்பமே அவரை குலதெய்வமா வழிபட்டுக்கிட்டு இருக்கோம். கேட்டதைக் கொடுப்பவர், நல்லதைத் தந்தருள்பவர் மாயாண்டிச் சித்தர். அவரோட சமாதிக்குச் சென்று என்ன நேர்த்தி வச்சாலும் நினைச்சது நடக்கும்' என்றார் அந்த பக்தர்.

என்ன! நீங்களும் அவர் சமாதிக்குச் சென்று உங்கள் மனக் குறைகளைச் சொல்லுங்கள். நலமும் வளமும் தந்தருள்வார் அந்தப் புனிதமான மாயாண்டிச் சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 3

# ஸ்ரீலஸ்ரீ அழுக்குச் சித்தர்

சித்தர்கள் மனித உயிர்களின் அமைதிக்காகவும் மகிழ்விற்காகவும் இறைவனை உணரும் ஆன்மிக நிலைக்காகவும் தங்களின் அனுபவங்கள் மூலமாகக் கற்ற மூன்று மார்க்கங்களை வழிகாட்டிச் சென்றிருக்கிறார்கள். அவை சித்தி மார்க்கம், உறவு மார்க்கம், சரணாகதி மார்க்கம் என்பதாகும்.

இந்த மூன்று மார்க்கங்களில் இன்றைய மனிதர்களின் வாழ்நிலைச் சூழலுக்கு ஏற்றது சித்தி மார்க்கம்தான். மற்ற இரண்டு மார்க்கங்களான உறவு மார்க்கமும், சரணாகதி மார்க்கமும் இன்றைய மனிதர்களுக்கு ஏற்புடையதாக இருக்காது. அவை மிகவும் கடினமான மார்க்கங்கள். சர்வ சதா காலமும் இறைவனிடம் மனதை அளித்து பசி, தாகம் எதையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நொடிப்பொழுதும் மனதை

கடவுளிடம் ஒருமுகப்படுத்தும் மனவலிமையும் ஆற்றலும் உள்ளவர்களுக்குத்தான் இந்த இரண்டு மார்க்கங்களும் எளிதாக இருக்கும்.

சித்தி மார்க்கம் என்பது மனிதன் தனக்குள்ளே உறைந்திருக்கும் ஜீவாத்மாவை உணர்ந்து அதைப் பரிசுத்தப்படுத்தி வளர்த்து இறைவனோடு ஒன்றுபடும் தகுதியைப் பெறும் மார்க்கமாகும். மனிதன் தனக்குள்ளே உறைந்திருக்கும் ஜீவாத்மாவை உணர, அவனது அகக்கண் திறக்கப்பட வேண்டும். ஆத்மா பரிசுத்தமடைய ஆத்மாவில் படிந்திருக்கும் பல ஜென்மங்களில் செய்த எல்லாப் பாவங்களையும் முதலில் கழுவிக் களைய வேண்டும். பிறகு பக்தியாலும், நல்வினைகளாலும், தர்மங்களாலும் புண்ணியங்களைச் சேர்க்கவேண்டும். ஜீவாத்மா வளர வளர அதிலுறையும் சக்திகளை சித்திகளாக முறைப்படி படிப்படியாக வெளிப்படுத்த வேண்டும்.

ஜீவாத்மாவானது பரமாத்மாவின் ஒரு சிறிய அணு. சித்தர்கள் அதை ஒரு விதை என்பார்கள். ஒரு விதைக்குள் ஒரு மரம் அல்லது ஒரு தோப்பு மறைந்திருப்பது போல, ஜீவாத்மாவிற்குள் பரமாத்மாவின் எல்லா சக்திகளும் உறைந்திருப்பதை சித்தர்கள் கண்டறிந்தார்கள். ஆனால் ஜீவாத்மாவெனும் விதை, விதையாகவே இருந்துவிடக் கூடாது. மரமாக வளர்ந்து பலன் தர சித்தர்கள் கண்டறிந்த வழியே சித்தி மார்க்கமாகும். சித்தர்கள் மெய்ஞானிகள் மட்டுமல்ல! விஞ்ஞானிகளாகவும் இருந்தார்கள். அவர்கள் தற்காலத்திலுள்ள பல நவீன விஞ்ஞானக் கருவிகள் போன்ற எந்தவிதமான உபகரணங்களும் இல்லாமல் தங்கள் தவ வலிமைகளால் வான சாஸ்திரம், கணிதம், சித்த வைத்தியம், வேதியியலில் அற்புதமான கண்டுபிடிப்பு போன்ற பல்வேறு சாஸ்திரங்களை மனிதர்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதில் சித்த வைத்தியம் என்கிற அற்புதமான மருத்துவக்கலையால் இன்றும் ஆங்கில மருத்துவத்தால் விடைசொல்ல முடியாத மஞ்சள் காமாலை, எயிட்ஸ் போன்ற நோய்களுக்கு சித்த மருத்துவம் ஒரு சிறந்த மருத்துவமாக பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இப்போது நீங்கள் அறியப்போகிற அழுக்குச் சித்தர் நம் தமிழக மண்ணில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு

பொள்ளாச்சிக்கு தெற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகள் சூழ அமைந்திருக்கும் வேட்டைக்காரன்புதூர் எனும் கிராமத்தில் வாழ்ந்து ஏகப்பட்ட சித்துக்களையும் அமானுஷ்யங்களையும் நிகழ்த்தியவர். இன்னும் பலநூறு பக்தர்களின் நம்பிக்கை தெய்வமாய் இறை அருளாய் ஆன்ம உடலோடு தன்னை நாடி வருபவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு சாதாரண கிராமத்து மனிதரின் தோற்றத்திலும் பரட்டைத் தலையுடனும் மேல் உடலில் ஆடைகளில்லாமல் சிறிய கோவணத்துடன் காட்சியளித்த இவரது முகமும் ஒளி பொருந்திய கண்களும் இவரை தெய்வீகப் புருஷராக காண்போருக்கு உணர்த்திவிடும்.

அழுக்குச் சித்தரின் பூர்வீகம் எது? இவர் எங்கிருந்து வந்தார் என்பது யாருக்கும் தெரியாது. சித்தர்களுக்கு காலநிலை கிடையாது. பலநூறு ஆண்டுகளாக தங்களின் சூட்சும உடலோடும் ஸ்தூல உடலோடும் இந்த பூமியில் வாழ்ந்து உலக நன்மையை காப்பவர்களாயிற்றே சித்தர்கள்! அழுக்குச் சித்தரும் அந்த மகா சித்த புருஷர்களின் வழியில் வந்தவர் என்பதாலும் அவரது பூர்வீகம் அறிய முடியாது.

சித்தர்களுக்கே உரிய அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், வஸித்வம், ஈஸத்துவம் என்கிற சித்துக்களிலும் வல்லமை பெற்றிருந்த அழுக்குச் சித்தர் பல இடங்களில் தோன்றுதல், திடீரென மறைந்து தோன்றுதல், விண்வெளியில் பறந்து செல்லுதல் என பல்வேறு சித்துக்களைச் செய்திருக்கிறார். அப்படித்தான் அவர் கோவையை அடுத்துள்ள வெள்ளியங்கிரி மலையில் நிர்வாணமாக அலைந்துகொண்டிருந்த போது ஆன்மிகத்தில் பழுத்த பழமாக இருந்த ஒரு முதியவர் இவர் ஒரு சித்த புருஷர் என்பதை இனம் கண்டுகொண்டார். உடனே அவர் அழுக்குச் சித்தரை நெருங்கி, 'நீங்கள் யாரோ?' என்று கேட்க, ஒரு நொடி மௌனமாகப் புன்னகைத்த சித்தர், 'நீங்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டதால் உங்களுக்கு நான் அகப்படுவேன் என நினைக்காதீர்கள்' என்று சொல்லியவாறே திடீரென மறைந்துபோனார். தன்னெதிரே மிகப்பெரிய ஒளிப்பிழம்பு தோன்றியதைப் போல் உணர்ந்த அந்த முதியவர் ஒருகணம் கண்மூடித் திறப்பதற்குள் எதிரேயிருந்த

சித்தரைக் காணாமல் திகைத்துப்போனார்.

இதேபோல் தனது மூன்று வயதுப் பெண் குழந்தையை தோளில் சுமந்தவாறே ஒரு மனிதர் அந்த மலைப்பாதையில் நடந்துகொண்டிருக்க, தோள்மீதிருந்த சிறுமி ஆனந்தமாய் புன்னகைப்பதை உணர்ந்து 'ஏன்மா சிரிக்கிறே?' என்று கேட்க அந்தச் சிறுமி, 'அப்பா, இவர் சிரிச்சாருப்பா. அதான் எனக்கும் சிரிப்பு வந்தது' என்று சொன்னாள். ஒன்றும் புரியாத அந்த மனிதர் 'எவரு சிரிச்சாரு?' என்று சிறுமியிடம் கேட்க, பக்கத்தில் நடந்து வந்துகொண்டிருக்கும் சித்தரை நோக்கி கைகாட்டி, 'இதோ, இவர்தான் சிரிச்சாரு' என்று சொன்னாள். சிறுமி சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டு நின்ற அந்த மனிதர் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, 'என்னம்மா சொல்றே? நீ சொல்ற மாதிரி இங்கே யாருமே இல்லையே' என்று திகைப்பாகச் சொல்ல, 'என்னப்பா நீங்க! இவரோட முகம் எவ்வளவு பிரகாசமா இருக்கு? இவரோட தலைக்குப் பின்னாடி வட்டமா வெளிச்சம் இருக்கு. இவரைப் போய் தெரியலீங்கறீங்களே!' என்றாள் சிறுமி. சட்டென்று தன்னருகே ஒரு சக்தி மிகுந்த மகான் இருக்கிறார் என்பதை உணர்ந்த மனிதர், அந்தச் சிறுமி கை காட்டிய திசை நோக்கி தனது இரு கரங்களையும் குவித்து, 'ஐயா, நீங்கள் ஒரு மகா புருஷராக சித்த பெருமானாக இருக்க வேண்டும். உங்கள் முகத்தை நான் பார்க்க வேண்டும். என் மகளுக்கு அளித்த பேரருளை எனக்கும் அளியுங்கள்' என்று மனதிற்குள் வேண்ட, அடுத்த நொடி அடர்ந்த பனி விலகிச் செல்ல, மெல்ல உருவம் தெளிவடைவது போன்று அழுக்குச் சித்தர் அந்த மனிதரின் கண் பார்வைக்கு வந்தார்.

சந்தோஷத்தில் கண் கலங்கிய அம்மனிதர், 'ஐயா! நீங்கள் எங்கள் ஊருக்கு வந்தால் அது புண்ணிய பூமியாகும்' என்று கேட்க, 'நான் உங்கள் கண்களுக்கு அகப்படாமல் இருந்ததே இதற்குத்தான். பார்த்தீங்களா! இப்ப நீங்க என்னை உங்க எல்லாருக்குள்ளேயும் என்னை அடைச்சிடணும்னு நினைக் கறீங்க. ம்ஹூம். நான் அவ்வளவு சீக்கிரத்தில் அகப்பட மாட்டேன்பா' என்ற சித்தர் சட்டென்று மறைந்துபோக, இப்போது தோளில் இருந்த சிறுமி, 'அப்பா, நம்மகூட வந்துகிட்டிருந்தாரே! அவரை இப்ப காணோமே' என்று

கவலையோடு அந்த மனிதரிடம் கேட்டுக்கொண்டே வந்தாள். இப்படிப் பல நிகழ்வுகள். பல மனிதர்கள் வேண்டிக்கேட்டும் யாருக்கும் அகப்படாமல் இருந்த சித்தர், முடிவில் அன்புக்கு அடிமையாகி அகப்பட்டுக் கொண்டார். அவர்களின் வேண்டுதல்படி வேட்டைக்காரன்புதூர் கிராமத்திற்குள் காலடி எடுத்து வைத்தார். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அப்போது வேட்டைக்காரன்புதூரில் பிளேக் நோயில் அகப்பட்டு எண்ணற்றோர் மடிந்துகொண்டிருந்தார்கள். இருநூறு ஆண்டுகளுக்கு முந்தைய காலம் என்பதாலும், ஆங்கில மருத்துவத்தின் ஆரம்ப நிலை என்பதாலும் அன்று அந்நோய் ஓர் கொடிய மரண நோயாக இருந்தது. எண்ணற்றோர் அந்நோய்க்கு இரையாக, மீதமிருந்தவர்கள் அந்த ஊரைக் காலி செய்துவிட்டு காடுகளுக்கு தஞ்சம்புக இருந்தார்கள். அந்த மனிதர்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன்தான் அழுக்குச் சித்தர் வேட்டைக்காரன்புதூருக்குள் காலடி எடுத்து வைத்தார்.

அங்கே மரண பயத்திலிருந்தவர்களை அழைத்து, 'நான் உங் களைக் காப்பாற்றுகிறேன். நீங்கள் என்னோடு இங்கேயே இருங் கள்' என்று சித்தர் தனது கைகளிலிருந்த பச்சிலைகளை அக் கிராம மக்களுக்குக் கொடுத்தார். அந்நோயின் துவக்கத்திலிருந்த வர்களை தன்னருகில் அழைத்து அவர்கள் நெற்றிப்பொட்டில் விரல் பதித்து, வாய்க்குள் இரண்டு மூன்று பச்சிலைச் சாறுகளை விட்டு, 'ஒண்ணும் ஆகாது போ' என்றார். அது இறைவன் வார்த்தை ஆயிற்றே! அவர் காலடி வைத்த நாளிலிருந்து அவ்வூரில் காலன் காணாமல் போனான். ஒரு உயிருக்கும் அங்கே ஆபத்தில்லை. மரண பயம் விலகி எல்லோர் இல்லங்களிலும் சந்தோஷமும் உற்சாகமும் நிறைந்தது.

இப்போதும் அச்சம்பவங்களின் சாட்சிகளாக, அன்று சித்த ரால் காப்பாற்றப்பட்டவர்களின் வாரிசுகள் சித்தரை கண்கண்ட தெய்வமாக வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரியின் முன்னாள் கலெக்டர் திரு.வாசு தேவராஜ் அவர்களும் தன் தந்தையின் உயிர் காத்து அருளியவர் அந்த அழுக்குச் சித்தர் மகான்தான் என்று மனம் நெகிழ்ந்து சொல்கிறார்.

வேட்டைக்காரன்புதூர் அழுக்குச் சித்தரின் வரவுக்குப் பிறகு

குதூகலமடைந்தது. அகப்படமாட்டேன் என்ற அழுக்குச் சித்தரும் அக்கிராம மக்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அங்கேயே தங்கி அருள் வழங்க ஆரம்பித்தார்.

தான் ஒரு சித்த புருஷராக, இறை அருளாளராக இருப்பினும் அக்கிராம மக்கள் தன்னையும் ஒரு மனிதராகவே உணர வேண்டும் என்பதற்காக தினந்தோறும் அக்கிராம மக்களின் வீடுகளுக்குச் சென்று உணவு கேட்டு வாங்கி உண்பார். அதிலும் தன் மனதில் இவருக்குத் தோன்றுகிற வீடுகளுக்குச் சென்று உணவு வேண்டுமென கேட்பார். அப்படி அவர் கேட்கிறபோது, அவர்கள் வீட்டின் வாசலில் அமர்ந்தவாறே அன்று அவர்கள் என்னென்ன உணவு வகைகளைச் சமைத்தார்கள் என்பதை மிகச் சரியாகக் கூறுவார். 'சித்தருக்கு எப்படி நம் வீட்டுக்குள் சமைத்தது துல்லியமாகத் தெரிந்தது?' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே உணவு கொண்டுவந்து தருவார்கள். அப்போது சித்தர் இலையை ஒதுக்கிவிட்டு தனது இரண்டு கைகளால் உணவை வாங்கிச் சாப்பிடுவார்.

அப்படி அவர் யார் வீட்டில் உணவு கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறாரோ அவரது வீட்டில் வறுமை ஒழிந்து செல்வமும் ஐஸ்வர்யமும் பெருகும். அரிசிப் பானையில் குறைவற்று அரிசி நிரம்பி வழியும். இதனாலேயே 'சித்தர் இன்று நம் வீட்டுக்கு வந்து உணவு கேட்க மாட்டாரா?' என அக்கிராம மக்கள் ஆவலுடன் காத்திருப்பார்கள்.

அதேபோல் சித்தர் ஒரு வீதிக்குள் நுழையும்போதே அந்த வீதியில் உள்ளவர்களின் மனம் குதூகலமடையும். அவர் பார்வையில் நாம் படவேண்டும். நம் உடலிலிருக்கும், மனதில் இருக்கும் பிரச்னைகளை அவர் தன் ஆத்ம சக்தியால் உணர்ந்து தமக்கு நல்லருள் புரியவேண்டும் என பலர் ஏங்கித் தவித்தார்கள்.

சித்தரின் கண்களிலிருந்து எந்த ஒரு தீய விஷயமும் தப்ப முடியாது. திருடர்கள், மனத்தூய்மை இல்லாதவர்கள் அந்த கிராமத்திற்குள் நுழைந்துவிட முடியாதபடி ஒரு காவல் தெய்வமாக, இரவு பகலாக ஊர் முழுதும் வலம் வந்துகொண்டிருப்பார் சித்தர்.

இவர் குளித்து யாருமே பார்த்ததில்லை. எப்போதாவது யாராவது ஒரு உடையைச் சுற்றிவிட்டால் அது கிழியும்வரை இவர் உடலிலேயே இருக்கும். ஆனால் இவர் உடலிலிருந்து எப்போதும் தெய்வீக மணம் வீசிக்கொண்டே இருக்கும். இரவு வேளைகளில் அவர் வீதிகளின் வழியே நடந்துசெல்வதை அந்த தெய்வீக மணத்தைக் கொண்டே வீடுகளில் உள்ளவர்கள் சித்தர் கிராமத்தை வலம் வருகிறார் என்பதை உணர்ந்து கொள்வார்கள். வெளியில் படுத்திருப்பவர்களுக்கோ பிரகாசமான ஜோதி ஒன்று நடந்துசெல்வதுபோல் தெரியும். அந்த நொடியில் சித்தரை வணங்கி மனதின் பரவசத்தில் ஆழ்வார்கள்.

அந்த கிராமத்தில் தீராத பிணியாளர்களை நோயிலிருந்து காப்பாற்றியது, எதிர்நாளில் வரப்போகிற ஆபத்தை முன்பே சொல்லி உயிர் காத்தருளியது, பல இடங்களில் ஒரே நேரத்தில் தோன்றி பரவசப்படுத்தியது என ஏகப்பட்ட அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார் சித்தர். அவரது சித்துக்களைப் பற்றி விவரிப்பதென்றால் ஒரு சில பக்கங்கள் போதாது. உதாரணத்திற்கு சில சம்பவங்களைப் பார்க்கலாம்.

வேட்டைக்காரன்புதூருக்கு அருகே இருக்கிற மற்றொரு ஊரான சோமந்தூறைச் சித்தூர் எனும் இடத்தில் நடந்த ஒரு சம்பவம். அங்கேயுள்ள சிவன் கோயிலில் ஒரு காலை நேரத்தில் பூஜை செய்யும்விதமாக கருவறையைத் திறந்த குருக்கள் அதிர்ச்சியில் உறைந்தார். காரணம், அங்கிருந்த சிவலிங்கத்தை ஒரு பத்தடி நீளமுள்ள நாகப்பாம்பு சுற்றியிருந்தது. கருவறையைத் திறந்த குருக்களைப் பார்த்து படமெடுத்த நிலையில் அந்த நாகம் சீற, பயந்துபோன குருக்கள் நொடியில் அங்கிருந்து ஓட ஆரம்பித்தார். சிவலிங்கத்தை நாகம் சுற்றியுள்ளது என அவ்வூர் மக்களிடம் அவர் அதிர்ச்சியாகச் சொல்ல, அவர்களும் அதிர்ச்சியான முகத்தோடு கருவறைக்குச் சென்று கம்புகளைக் காட்டியும் சப்தம் எழுப்பியும் அந்த நாகத்தை விரட்ட முற்பட்டனர். ஆனால் அந்த நாகம் சீறிப் பாய்ந்ததே தவிர, சிவலிங்கத்தை விட்டு இறங்கவே இல்லை.

இந்தச் சூழலில் அழுக்குச் சித்தர் அக்கிராமத்தின் வழியே செல்ல, அவரிடம் தகவல் சொல்லி அழைத்து வந்தார் ஒரு முதியவர். கருவறைக்குள் நுழைந்த சித்தர் நாகத்தைப் பார்த்து,

'இறங்கிப் போடா. என்ன இது விளையாட்டு!' என்று சொல்லியவாறே நாகத்தின் அருகே செல்ல, அது அவரைக் கொத்தும் விதமாக மீண்டும் சீறியது. உடனே உஷ்ணமான சித்தர், 'பார்த்தியா! விளையாட்டு வேணாம்னா விளையாடறே. சரி நீயாக இறங்கமாட்டே. நீ இறங்காம நான் விடமாட்டேன்' என்ற சித்தர் சட்டென்று அந்த நாகத்தைப் பிடித்திழுத்தார். அது அவர் கையில் பட்டென்று கொத்தியது. இருப்பினும் விடாப்பிடியாக சித்தர் அந்த நாகத்தை சிவலிங்கத்திலிருந்து முழுமையாகப் பிடித்து வெளியே இழுக்க, அது அவர் கையில் பல இடங்களில் கொத்திக்கொண்டே இருந்தது. அந்த நாகத்தின் கூரிய விஷப் பற்கள் குத்தி எடுத்ததில் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. சித்தரின் கைகள் இரத்தத்தில் நனைய ஆரம்பிக்க, சுற்றிலும் இருந்தவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

பாம்புடன் கோயிலைவிட்டு வெளியே சென்ற சித்தர், மரங்கள் அடர்ந்த காட்டுப்பகுதியில் அந்த நாகத்தை வீசிவிட்டு வந்தார். எல்லோரும் அதிர்வாய் சித்தரைப் பார்க்க, ஒரு லேசான புன்னகையோடு அங்கிருந்து நகர ஆரம்பித்தார்.

அன்று முழுதும் அந்தச் சம்பவத்தைப் பற்றியும் பல தடவை கொத்தியதால் சித்தர் என்னாகுவாரோ என்றும் பேசிக் கொண்டார்கள். ஆனால் அந்த நாகத்தின் கொடிய விஷம் சித்தரை சிறிதளவும் பாதிக்கவில்லை. ஒன்றுமே நடந்திடாதது போன்று மறுநாள் சித்தர் நடந்துவர, எல்லோரும் பக்திப் பரவசத்துடன் அவர்முன் கரம் கூப்பினர்.

இந்தச் சம்பவம் போல் மற்றொரு சம்பவம் வேட்டைக் காரன்புதூரில் நடந்தது. அங்கே கணேசர் என்கிற நாற்பது வயது மனிதர் தீராத வயிற்று வலியால் தவித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் நோயின் வலிமை அதிகமாக, தாங்கமுடியாத வயிற்றுவலி ஏற்பட்டு தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்தார். வேட்டைக்காரன்புதூருக்கு அருகில் இருக்கும் மலையில் ஏறி அங்கிருந்து குதித்து தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்து வேகவேகமாக மலை ஏறினார். கிட்டத்தட்ட மலை உச்சிக்குச் சென்று அங்கிருந்து தாளமுடியாத வயிற்றுவலிக்கு இனி விடுதலை கிடைத்துவிட்டது என்றவாறு குதிக்க ஆயத்தமானார். அப்போது அவருக்குப் பின்னாலிருந்து 'கணேசா' என்று குரல்

கேட்க, சட்டென்று திரும்பியவர் அதிர்ந்தார். அவருக்கு மிக அருகாமையில் அழுக்குச் சித்தர் கை கால்கள் உடல்கள் துண்டிக்கப்பட்டு பல துண்டுகளாகக் கிடந்தார். அந்த உடலின் துண்டங்களைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்துபோன கணேசன், 'ஐயோ! சித்தரே உங்களை இப்படி அநியாயமாக யாரோ வெட்டிக் கொன்றுவிட்டார்களே!' என்று கதற ஆரம்பித்தார். அவருக்கு அழுகை தொடர்ந்த சிறிது நேரத்தில் மீண்டும் 'கணேசா' என்ற குரல் கேட்டது. இப்போது யாரோ தன்னைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள்தான் கூப்பிடுகிறார்கள் என்று நினைத்த கணேசனுக்கு சட்டென்று அது சித்தரின் குரல் என்பது உறைத்தது. 'அப்படியானால் இறந்தவர் எப்படி பேச முடியும்?' என்று கணேசன் நினைக்க, அவன் எதிரே அந்தப் பேரதிசயம் நிகழ்ந்தது.

பல துண்டுகளாகப் பிரிந்துகிடந்த அழுக்குச் சித்தரின் உடலின் பாகங்கள் ஒவ்வொன்றாக கூட ஆரம்பித்தன. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எல்லா பாகங்களும் ஒன்றோடு ஒன்று இணைய, கீழே படுத்த நிலையில் இருந்த சித்தர் புன்னகையோடு எழுந்தார். கணேசன் 'நடப்பது நிஜமா?' என்று பார்த்துக்கொண்டிருந்தார். அவனருகே அந்தச் சித்தர்,

'என்னப்பா! சாதாரண வயிற்று வலிக்கே செத்திடணும்னு நினைக்கறது தப்பில்லையா? முதல்ல மனசையும் உணவையும் கட்டுப்படுத்து. அந்த வயிற்றுவலி உன்னை விட்டுப் போயிடும்' என்றவர் அருகிலிருந்த ஒரு செடியிலிருந்து சில இலைகளைப் பறித்து அவனிடம் கொடுத்து, 'தினம் இதில் ஒரு இலையை வெறும் வயிற்றில் சாப்பிடு. ஜென்மத்திற்கும் உனக்கு வயிற்று வலி வராது' என்றவாறு அவன் கையைப் பிடித்து உள்ளங் கைகளில் அந்த மூலிகை இலைகளை வைத்தார்.

சித்தரின் கரம் பட்டதும் உடலுக்குள் மின்சார மாற்றம் நிகழ்ந்தது போன்று உணர்ந்த கணேசன், 'ஐயா! இப்ப நான் உங்களைப் பார்த்த கோலம் நிஜமா பொய்யா?' என்று கேட்க, புன்னகைத்த சித்தர், 'அஷ்டமா சித்துக்களில் இதுவும் ஒரு சித்து. நீ பார்த்தது நிஜம். என் போன்ற சித்தர்களின் உடல் ஒரு காற்றுடல் போன்றது. எங்களால் எங்கள் உடலின் அணுக்கூட்டங்களை தனித்தனியே பிரித்து ஒன்றுகூட்ட

முடியும். சரி, நீ இங்கே நடந்ததை வெளியில் சொல்லாதே. அதேபோல கெட்ட எண்ணத்தோடு இந்த மலைமீது ஏறாதே!' என்று சொல்ல, சரி என தலையசைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய கணேசன், இப்போது வயிற்றுவலி முற்றிலும் குணமாகியிருப்பதை உணர்ந்து சந்தோஷமானான்.

இந்தச் சம்பவத்தைப் போலவே மாட்டுவண்டி குடைசாய்ந்து போக இருப்பதை முன்கூட்டியே சொல்லி, ஆறுமாதக் குழந்தையையும் தாயையும் உயிர் காத்தது, பனைமரம் திடீரென சாய்ந்து விழப்போகும் நேரத்தில் அதனருகே படுத்திருந்தவர்களை அசரீரியாய் குரல் கொடுத்து திடுக்கிட்டு எழவைத்து உயிர் காத்தது என அவரது அற்புதங்கள் ஏராளமானவை தமிழ் மண்ணில் நிகழ்ந்தன.

தான் சமாதிநிலை அடையப்போவதை முன்னமே உணர்ந்த சித்தர், அலமேலு என்பவரை அழைத்து உப்பாற்றங்கரையில் வன்னி மரத்தையும் வில்வ மரத்தையும் நட்டு, தண்ணீர் விட்டு வளர்த்து வரும்படி சொல்லியிருக்கிறார். சொன்னபடியே மரம் நடப்பட்டு துளிர்விட்டு வளர்ந்து வரும்போது, ஒருநாள் நல்ல மழையில் நனைந்தபடி வீதியில் நின்றிருந்தவரை அலமேலுவும் அவர் கணவர் இராமு முதலியாரும் தங்கள் வீட்டுக்குள் அழைத்துவந்து ஈரத்தலையைத் துவட்டி ஒரு அறைக்குள் தங்கவைத்தனர். திடீரென அந்த அறைக்குள்ளே தியான நிலையில் சித்தர் அமர்ந்துவிட்டார். கிட்டத்தட்ட பன்னிரண்டு நாட்கள் அன்ன ஆகாரமின்றி அவர் தியான நிலையில் இருக்க, அலமேலுவும் இராமுவும் பதற்றமாகி, 'சாமி, கண்விழித்து உணவருந்துங்கள்' என்று கேட்க, சட்டென்று கண்விழித்த சித்தர், 'எனது தூல உடலுக்கு விடைசொல்லும் நேரம் வந்துவிட்டது. நான் சமாதி நிலையின் விளிம்பில் இருக்கிறேன். என்னை அந்த வில்வமரம், வன்னிமரம் இருக்கும் இடத்தில் அடக்கம் செய்துவிடுங்கள்' என்று சொல்ல, அலமேலுவும் அவர் கணவரும் அதிர்ச்சியோடு அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்க, அப்பொழுது அமானுஷ்ய ஒலியோடு ஒளிமயமான ஜோதி அவர் உடலில் இருந்து கிளம்பி மறைந்துபோனது. அலமேலுவும் அவர் கணவரும் கண்ணீரோடு நடந்ததை ஊர்மக்களிடம் சொல்ல, சித்தரின் விருப்பப்படியே

வில்வமரம், வன்னிமரம் வைக்கப்பட்ட இடத்தில் அவரது திரு உருவச் சமாதி வைக்கப்பட்டது. தற்போது அவரது சமாதிக் கோயிலின்மீது சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆற்றங்கரையின்மீது அமைந்துள்ள இந்தக் கோயில் அமைதியின் இருப்பிடமாக காட்சி தருகிறது.

சித்தர் இப்போதும் தனது சூட்சும உடலோடு தன்னை நாடி வருபவர்களின் குறை தீர்த்து நல்வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறார். பாண்டிச்சேரியின் முன்னாள் முதல்வர் திருரங்கசாமி அவர்களும் அழுக்குச் சித்தரின் தீவிர பக்தர். 'என்னவோ தெரியல. இந்தக் கோயிலுக்கு வந்து இரவு முழுதும் தங்கியிருந்து அமைதியான சூழலில் அழுக்குச் சித்தரை வணங்கும்போது மனம் தெளிவடைகிறது. பிரச்னைகளின் இறுக்கம் குறைந்து நல்ல முடிவுகள் தோன்றுகிறது. உடலும் மனமும் உற்சாகத்தில் திளைப்பதை நான் ஆனந்தமாக உணர்கிறேன். அழுக்குச் சித்தரை வேண்டிச்செல்லும் நேரங்களில் எல்லாம் எனக்கு நல்லதாகவே நடக்கிறது' என்கிறார் திரு. ரங்கசாமி.

'அழுக்குச் சித்தர் சமாதி அடைந்த தினமான கார்த்திகை மாத மிருகசீரிட நட்சத்திரத்தன்று நடைபெறும் குருபூஜையில் ஆயிரக்கணக்கானோர் அவரது சமாதிக் கோயிலுக்கு வந்திருந்து இரவு தங்கி, தியானம் செய்து சித்தரின் நல்லருளைப் பெற்றுச் செல்கின்றனர்' என்கிறார் கோயிலின் அறங்காவலராக இருக்கும் வி.கே.பி.சபாபதி கவுண்டர். தற்போது புலவர் ந.மயில்சாமியின் முயற்சியால் அழுக்குச் சித்தரின் ஐம்பொன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நீங்களும் ஒருமுறை பொள்ளாச்சிக்கு அருகே ஆனை மலைக்கு அடுத்துள்ள வேட்டைக்காரன் புதூரில் அமைந்துள்ள சித்தரின் சமாதிக்குச் செல்லுங்கள். உங்கள் வாழ்க்கையில் அமைதியையும் நிம்மதியையும் தந்து சுகமான வாழ்வளிப்பார் அழுக்குச் சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 4

# ஸ்ரீலஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சித்தர்

**ஸ்ரீ**லஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சித்தர், இம்மண்ணில் அற்புதங்களையும் ஆச்சர்யங்களையும் நிகழ்த்தி இறைத்தன்மையை இவ்வுலகிற்கு உணர்த்தினார். இன்றும் சூட்சும உடலோடு பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

திருச்சியையடுத்த காட்டூர் எனும் நகரத்திற்கு அருகிலிருக்கும் கீழாலாத்தூர் எனும் இடத்தில், இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு சிவசிதம்பரம் பிள்ளை, மீனாம்பிகை எனும் தெய்வீக அருள்பெற்ற தம்பதிகள் இனிதே வாழ்ந்து வந்தனர். திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தைப்பேறு இல்லாத தால் சிவ பக்தர்களான அவர்கள் திருவண்ணாமலைக்குச் சென்று அண்ணாமலையாரை மனமுருகித் தொழுதபடி அங்கேயே தங்கியிருந்தார்கள்.

ஒருநாள் இரவு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் அவர்களின் கனவில் தோன்றி, 'உங்கள் குறை தீரும். நீங்கள் ஊருக்குப் புறப் படுங்கள்' என்று அருளினார். அவாகள் மனமகிழ்ந்து ஊர் திரும்ப, அண்ணாமலையாரின் சாட்சி சொரூபமாக அன்னை மீனாம்பிகை தாயின் திருவயிற்றிலிருந்து ஸ்ரீ குரு தக்ஷிணா மூர்த்தி சித்தர் அவதரித்தார்.

சாதாரண மனிதப்பிறவி போன்றே சித்தர் வளர ஆரம்பிக்க, சிவசிதம்பரம் பிள்ளையும் மீனாம்பிகையும் பாசத்தோடு வளர்த்தனர். ஆனால் ஐந்து வயதாகியும் குழந்தைக்குப் பேச்சு வராததால், மீண்டும் அந்தத் தம்பதியாா திருவண்ணாமலை சென்று ஸ்ரீ அருணாசலேஸ்வரரிடம் முறையிட, அவர்கள்முன் சடாமுடியுடன் ஒரு துறவியின் உருவில் தோன்றிய அண்ணா மலையார், 'உங்க மகனை நான் பார்க்கலாமா?' என்று கேட்க, அவர்கள் துறவியை தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே பூஜை அறையில் ஆசனம் போட்டு அமர்ந்த நிலையில், கண்களை மூடி தியானத்தில் அச்சிறுவன் அமர்ந்திருக்க, அச்சிறுவனைப் பார்த்து புன்னகைத்த துறவி சிவசிதம்பரம் பிள்ளையிடம், 'இந்தச் சிறுவன் ஒரு சித்த மகா புருஷர். இவர் ஒரு தெய்வீகப் பேரொளி. இவர் உலக மக்களின் நன்மைக்காக அவதரித்திருக்கும் மகான். இவர் நீங்கள் நினைப்பதுபோல் ஊமையல்ல. தியானத்திலிருக்கும் இவரிடம் கேளுங்கள், பதில் சொல்வார்' என்று சொல்ல, சிவசிதம்பரம் பிள்ளை சற்றே திகைப்புடன் தியானத்திலிருக்கும் சிறுவனைப் பார்த்து, 'ஏன்பா அருணாசலம், ஏன் கண்ணை மூடிக்கிட்டு இருக்கே?' என்று கேட்க அடுத்த நொடி, 'சும்மா இருக்கிறேன்' என்று சிறுவன் பதில் தர, சிவசிதம்பரம் பிள்ளை அதிர்ச்சியில் உறைந்தார். இத்தனை நாள் பேசாத பிள்ளை அட்சர சுத்தமாகப் பேசுகிறானே என்று அதிர்வாய் பார்க்க, துறவி அச்சிறுவனைப் பார்த்து, 'சும்மா இருக்கிற நீ யார்?' என்று கேட்க, அடுத்த நொடி அச்சிறுவன், 'நீயே நான், நானே நீ என பதில் தர, துறவி அவர் தலையில் கரம் பதித்து, 'சத்தியம் சத்தியம்' என ஆசிர்வதித்துவிட்டு சற்றே நகர்ந்தவர் மறைந்து போனார்.

நடப்பது கனவா நிஜமா எனத் திகைத்துப்போன சிவசிதம்பரம் பிள்ளையும் மீனாம்பிகைத் தாயும் தங்கள்

மகன் அருணாசலம் ஒரு அவதாரத் திருமகன் என அறிந்து பக்தியுடன் அவரின் திருவுள்ளம் அறிந்து அன்பே வடிவாக வளர்க்க ஆரம்பித்தனர்.

சிறுவயதிலேயே அருணாசலத்திற்கு சித்துக்கலைகள் வசமானது. கண்களில் பேரொளியும் தீட்சண்யமும் தெரிய ஆரம்பித்தது. அடுத்தவர் முகத்தைப் பார்த்த நொடியில் அவர்களின் மனசிலிருக்கும் அத்தனை பிரச்னைகளும் அவருக்குத் தெரிந்துவிடும். சென்ற காலம், நிகழ் காலம், வரும் காலம் என முக்காலத்தையும் உணரமுடிந்த தெய்வீக ஞானியாக ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சித்தர் அருணாசலம் எனும் சிறுவனாக வளர ஆரம்பித்தார்.

தனது மகன் தெய்வ அருள் பொருந்தியவர் என்பதை உணர்ந்ததும் அவரது பெற்றோர்கள் அவரை தங்கள் மகனாக மட்டுமில்லாமல் அந்த ஊரையும் உலகையும் காக்க வந்திருக்கும் கருணைப் பிரபுவாகக் கருதி அவரின் அனுமதியுடன் ஒவ்வொரு காரியங்களையும் செய்ய ஆரம்பித்தார்.

ஸ்ரீ அருணாசலத்தின் தம்பி நமசிவாயம் ஒரு சாதாரண மனிதப் பிறவி என்பதால், அவரைப் பள்ளியில் சேர்த்தனர் அவர் பெற்றோர். உடனே அருணாசலம் தனது தந்தையிடம், 'ஐயா! என்னை ஏன் பள்ளியில் சேர்க்கவில்லை?' என்று கேட்டார். 'உலகமும் உயிர்களும், அன்பும் கருணையும், அருளும் ஆசியும் என உலகை அறிந்தவர் நீங்கள். சகலமும் தெரிந்த சர்வக்ஞராகிய சுவாமிகளை பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டுமா? நீங்கள் விரும்பினால் சேர்த்துவிடுகிறேன்' என்ற சிவசிதம்பரம் பிள்ளை சித்தரைப் பள்ளியில் சேர்த்துவிட்டார்.

தம்பி நமசிவாயத்துடன் பள்ளிக்கூடம் சென்ற சித்தர், அங்கே ஆசிரியர் பாடம் நடத்தும்போது ஓலைச்சுவடிகளைப் படித்த படியும் சில வேளைகளில் தன்முன்னே ஓலைச்சுவடிகளை வைத்துவிட்டு கண்மூடி தியானித்த நிலையிலும் இருப்பார். அப்போது ஆசிரியர் சித்தரிடம், 'தம்பி, பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டு தியானம் செய்யறீங்களே! படிக்க வேணாமா?' என்று கேட்டால், ஒற்றை வரியில் 'எல்லாம் படித்தாயிற்று' என்று சொல்வார். ஆசிரியர் அதற்கு 'படிச்சாச்சா. அப்ப

நான் பாடம் நடத்தினதைச் சொல்லுங்க' என்று கேட்க, அவர் நடத்திய பாடத்தில் ஒரு வரி தவறாமல், பிழையில்லாமல் சொல்லி, ஆசிரியரையும் சக மாணவர்களையும் திகைப்பில் ஆழ்த்துவார்.

ஒருநாள் ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருக்கும்போது அருணாசலம் அவரைப் பார்த்து, 'ஐயா! உங்க குழந்தை வீட்டுத் திண்ணையிலிருந்து விழுந்து கை உடைஞ்சிடுச்சு. உயிருக்கு எந்தப் பயமும் இல்லை. போய் பார்த்துட்டு வாங்க' என்று சொல்ல, அவர் வார்த்தையின் உண்மையை உணர்ந்து உடனே புறப்பட்டார். அதற்குள் அவர் வீட்டு வேலைக்காரர் அவசர அவசரமாக ஆசிரியரைத் தேடிவந்து குழந்தையின் கை உடைந்த தகவலைச் சொல்ல, ஆசிரியர் அதிர்ச்சியில் உறைந்துபோனார். அருணாசலம் முக்காலமும் உணர்ந்த மகான் என உணர்ந்து, அன்றுமுதல் அவருக்கு மரியாதை செலுத்த ஆரம்பித்தார். அவர் மட்டுமல்ல. அருணாசலத்துடன் படித்த மாணவர்கள், அவர்களின் உறவினர்கள், ஊர் மக்கள் என அத்தனை பேர் வாழ்வில் நிகழப்போகும் பேராபத்துக்களை முன்னமே அறிந்து சரியான நேரத்தில் ஆபத்பாந்தவனாக சித்தர் அருள்பாலிக்க, அவரைத் தேடி பள்ளிக்கூடத்திற்கே நிறையபேர் வர ஆரம்பித்தனர்.

தன்னால் மற்ற பிள்ளைகளுக்கு இடைஞ்சல் என்பதால் பள்ளிக்குச் செல்வதையே தவிர்க்க ஆரம்பித்தார். சகல நேரமும் தியானம், சித்துக்கள் என அச் சிறுவயதிலேயே அருணாசலம் ஒரு அற்புதங்கள் நிறைந்த புனித மகானாக எல்லோராலும் அறியப்பட்டார்.

ஒருநாள் கீழாலாத்தூரை அடுத்த ஒரு சிறிய கிராமத்தில் வசிக்கும் ஆராவமுத அய்யங்காரும் அவர் மனைவி இலக்குமி அம்மையாரும் குழந்தை வரம் வேண்டி ஸ்ரீரங்கம் சென்று அரங்கநாதரைத் தொழுதபடி அங்கேயே சிலகாலம் வசித்துவந்தனர். அப்போது அவர்கள் கனவில் அரங்கநாதப் பெருமான் தோன்றி, 'உங்க ஊருக்குப் பக்கத்திலே கீழாலாத்தூரில் ஒரு ஞானசித்தன் பிறந்திருக்கிறான். அவனுக்கு நீங்கள் மனம் நிறைந்த அன்புடன் ஓர் பசுவைக் குளிப்பாட்டி இருவரும் நீராடி, புத்தாடை உடுத்தி பரிசுத்தமான இடத்தில் பசுவை மேய்த்து,

சுத்தமான பாத்திரத்தில் பால் கறந்து, மதுரமாகக் காய்ச்சி அதை அந்த ஞானசித்தனுக்குக் கொடுத்து வாருங்கள். ஒருநாள் அந்தச் சித்தன் அப்பாலில் சிறிதளவு சேடமாக வைப்பான். அதைக் கொண்டுவந்து பயபக்தியுடன் நீங்கள் இருவரும் உட்கொண்டால் நீங்கள் புத்திர சந்தானம் பெறுவீர்கள்' என அருளாசி வழங்க, அவர்கள் மனமகிழ்ந்து அவ்வாறே செய்ய, ஆறாவது நாள் சித்தர் அந்தத் தம்பதியர் கொண்டுவந்த பாலில் சிறிது மட்டும் உட்கொண்டு மீதியை வைத்துவிட்டு, 'இனிமேல் எனக்கு பால் கொண்டுவர வேண்டாம்' என புன்னகையோடு சொல்ல, சித்தர் உச்சிஷ்டமாக வைத்துவிட்ட பாலை தம்பதிகள் இருவரும் எடுத்து அமுதமெனப் பருகினர். இறையருள் பலித்தது. இலக்குமி அம்மாள் தாய்மையடைந்து பத்துத் திங்களில் பாலகனைப் பெற்றெடுத்தாள்.

அந்த ஸ்ரீரங்கநாதப் பெருமானே சித்தர் என அடையாளம் காட்டிய ஸ்ரீ அருணாசலத்தை அவர்கள் சிறுவனாகப் பார்க்காமல் தங்கள் குலம் தழைக்கவைத்த கருணைக் கடவுளாகப் பார்த்தனர். தினமும் அவர் எதிர்ப்படும்போ தெல்லாம் ஆனந்தக்கண்ணீரோடு தொழ ஆரம்பித்தனர்.

ஒருநாள் குழந்தையை தொட்டிலில் தூங்கவைத்துவிட்டு அவர்கள் சித்தரைத் தரிசிக்க வந்தனர். தியானத்திலிருந்த சித்தர் சட்டென கண்விழித்து ஆராவமுத அய்யங்காரைப் பார்த்து, 'ஐயா! உங்கள் வீட்டில் நெருப்பு பற்றிக்கொண்டது. ஓடுங்கள் ஓடுங்கள். பயப்படாமல் ஓடுங்கள். உங்கள் மகன் பத்திரமாக இருக்கிறான்' என்று சொல்ல, அவர்கள் பதற்றமாக ஓடினர். சித்தர் சொன்னபடியே வீடு தீப்பிடித்து எரிய, வீட்டின்முன் ஊரே திரண்டிருந்தது. அச்சமயத்தில் உடலெல்லாம் விபூதி பூசி கோவணம் அணிந்திருந்த இளம் துறவி ஒருவர் கொழுந்துவிட்டு எரியும் தீக்குள் நுழைந்து தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையைப் பத்திரமாக எடுத்துவந்து, ஒரு பிராமணப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு கூட்டத்தில் கலந்து மறைந்தார்.

அந்தப் பிராமணப் பெண் ஆராவமுத அய்யங்காரிடம் குழந்தையைக் கொடுத்து ஒரு இளம் துறவி கொடுத்தார் எனச் சொல்ல, ஆராவமுத அய்யங்காரும் அவர் மனைவியும்

அதிர்வாய் சித்தரை வணங்கினர். அவரது கருணையை வியந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

அதேபோல் சித்தருடன் பள்ளியில் பயின்ற ஒரு பிராமணச் சிறுவன் பாம்பு கடித்து விஷம் ஏறி மயக்கமானான். விஷயம் அறிந்து அவனுக்கு ஏதேதோ வைத்தியம் செய்தனர். ஆனால் விஷம் இறங்காமல் மயங்கிப்போக, எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்தனர். வெளியூர் சென்றிருந்த அந்தச் சிறுவனின் தாய் மறுநாள் காலை வீடுவந்து சேர, தன் மகன் பிணமாகக் கிடப்பதைப் பார்த்து அலறித் துடித்தாள். உடனே சித்தரிடம் சென்று, 'ஐயா! உங்களுடன் பள்ளியில் படித்த என் ஒரே பிள்ளையை பாம்பின் விஷத்துக்கு இரையாகக் கொடுத்துவிட்டு நான் எப்படி உயிர் வாழ்வேன்? அவன் பிழைத்து எழாவிட்டால் நானும் என் உயிரை உங்கள் முன்பாகவே விட்டுவிடுகிறேன்' என தரையில் புரண்டு அழ ஆரம்பிக்க தம் பரிதாப நிலையைக் கண்ட சித்தர், 'அழாம என்னோட வாங்க' என்றவாறு அந்தத் தாயின் வீட்டுக்குச் சென்றார். அங்கே உடல் முழுதும் விஷம் பரவி நீல நிறமாக இறந்துகிடந்தவனை ஒரு நொடி கூர்மையாகப் பார்த்த சித்தர் பக்கத்திலிருந்த ஒரு பிரம்பை எடுத்து, 'அப்பா சுந்தரம் எழுந்திரு' என்றவாறு இறந்துகிடந்தவனின் தலையில் ஓங்கி அடிக்க, அடுத்த நொடியில் உடல் சிலிர்த்தவாறு அவன் எழ, அவன் அம்மா அதிர்ச்சியில் சிலையானாள். இரவு முழுதும் தூங்கி எழுந்தவன் போன்று அவனது தாயைப் பார்த்து 'ஏம்மா ஊருக்குப் போனா சீக்கிரம் வர்றது இல்லையா? பொழுது விடிஞ்சி வந்திருக்கே!' என்று கேட்டுவிட்டு, 'சாமி! நீங்க என்ன இங்கே வந்திருக்கீங்க?' என்று சித்தரிடம் கேட்க, 'சும்மா வந்தேன்' என்ற ஒற்றை வார்த்தையோடு அங்கிருந்து நகர, அந்தத் தாய் கண்ணீரோடு கரம் குவித்தாள்.

சித்தரின் அற்புதங்கள் வெளியூர்கள் வரை தெரிய ஆரம்பிக்க, அவரை நாடிவந்து நூற்றுக்கணக்கானோர் தினமும் அவரைத் தரிசிக்க ஆரம்பித்தனர்.

ஒருநாள் காலை தியானத்திலிருந்த சித்தர் திடீரென கண் திறந்து தனது சகோதரர் நமசிவாயத்தை அழைத்து, 'நீ பிள்ளையார் கோயில் நந்தவனத்திற்கு பூப் பறிக்கச் செல்லும்போது கீழே தேங்காய், மாங்காய் எது விழுந்து கிடந்தாலும் எடுக்காதே.

எடுத்தால் சிவ பாரதி ஆகிடுவே' என்றார்.

ஆனாலும் ஒருநாள் நமசிவாயம் கீழே கிடந்த தேங்காயை எடுத்து உரித்து உடைத்துத் தின்றுவிட்டு பூப்பறித்துக்கொண்டு வர, தனது மனதிற்குள் அதை உணர்ந்த சித்தர், 'இன்று நீ செய்த காரியத்திற்கு அபராதமாக கங்கா ஸ்நானம் செய்து விஸ்வேசுவரரைத் தரிசித்தால்தான் நிவர்த்தியாகும்' என்று சொல்ல, அடுத்த சில நாட்களில் நமசிவாயம் யாரிடமும் சொல்லாமல் காசி யாத்திரை சென்றுவிட, அவனின் இப்பிறவியின் இரகசியம் அறிந்த சித்தர், பெற்றோர்ரை சமாதானப்படுத்தினார். சித்தர் பெற்றோரிடம் சொன்னதைப் போலவே காசியிலிருந்து திரும்பிய நமசிவாயம் கீழ்வேளூர் எனும் திருப்பதிக்கு அருகிலுள்ள நீலப்பாடி எனும் ஊரில் மகான் ஒருவரால் சந்நியாசம் பெற்று ஞான சாஸ்திர விசாரம் செய்ய ஆரம்பித்தான்.

சித்தர் ஒரு தெய்வீக அவதாரம் என அறிந்தவர்கள் அவர்களிடம் தங்கள் பிரச்னைகளைச் சொல்லி அருளாசி பெற அவரை நாடி வர ஆரம்பித்தார்கள். ஆனால் பரிசுத்தமான இதயத்தோடு வருபவர்களை மட்டுமே தன்னிடம் நெருங்க அனுமதிப்பார். மற்றவர்களால் என்ன முயற்சித்தாலும் அவரை நெருங்கவோ தரிசிக்கவோ முடியாது.

அற்புதங்களின் அடையாளமாக சித்தர் எல்லோராலும் அறியப்பட்டபோது அவரின் தாயும் தந்தையும் அவரை நெருங்கி வந்தனர். அவரது தந்தை சிவசிதம்பரம் பிள்ளை, 'ஐயா! எங்களுக்கு வயதாகிக்கொண்டே வருகிறது. இயன்ற அளவிற்கு இறைவனுக்கு எங்கள் கடமையைச் செய்துவிட்டோம். எங்களுக்கு ஒரு வேண்டுதல். நான் என் மனைவியின் பிரேதத்தைப் பார்த்திராமல் இருக்கவேண்டும். அவள் பிரேதமானால் அதைப் பார்க்கும் நிலை எனக்கு வராமலிருக்க வேண்டும்' என்று தந்தை வேண்டுதல் வைக்க, தாய் மீனாம்பிகையோ, 'ஐயா! நான் சுமங்கலியாகவே இந்த மண்ணிலிருந்து விடைபெற வேண்டும். எனக்கு தங்கள் திருக்கரங்களால் ஈமக்கடன்கள் செய்ய வேண்டும்' என்று வேண்டுதல் செய்தார்.

அப்போது சிறிய புன்னகையோடு ஆமோதித்த சித்தர்,

சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் தனது தாய் தந்தையை அழைத்து 'இன்னும் எட்டாவது நாள் காலையில் நமது கருமம் முடிந்துவிடும். நீங்கள் சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு சிவத்தியானம் செய்து வாருங்கள்' என்று அருளினார். இதைக் கேட்ட பெற்றோர் இருவரும் சித்தரின் திருக்குறிப்பை உணராமல், இன்னும் எட்டு தினங்களில் சித்தர் சமாதி நிலை அடைவதைக் குறிப்பிடுவதாக நினைத்து உற்றார் உறவினர்களிடம் தெரிவித்து, சித்தர் அருளியபடி சிவத்தியானத்தில் ஆழ்ந்தனர்.

எட்டாவது நாள் காலையில் உற்றார் உறவினர்கள், ஊர் மக்கள் எல்லோரும் சூழ சிவத்தியானத்திலிருந்த தமது தாய் தந்தையை நெருங்கி அவர்களின் நெற்றியில் திருநீறிட்டு சித்தர் அனுக்கிரகம் புரிய, அடுத்த சில நொடிகளில் கண்மூடி சரிந்த அவர்கள் இறைவனின் திருவடிகளை அடைந்தனர். தனது தாய் தந்தையரின் வேண்டுதலின் படியே இருவரும் இணைந்த நிலையில் சிவபதம் அடைவதையே சித்தர் திருக்குறிப்பின் மூலம் 'எட்டாவது நாள் நமது கருமம் முடிந்துவிடும்' என்று அருளினார் என உணர்ந்த சுற்றத்தாரும் உறவினர்களும் சித்தரின் தாய், தந்தை இருவரையும் ஒரே காலத்தில் சிதை அடுக்கித் தீயிடுவதற்குத் தயார் செய்தனர். சித்தர் விதிப்படி வந்து ஸ்நானம் செய்து சிதைக்குத் தீ மூட்டிவிட்டு தமது பெற்றோர் கடன் தீர்ந்தது என கட்டிய துணியோடு திரும்பிப் பாராமல் புறப்பட்டவர், அந்த ஊரிலிருந்து வெகுதூரம் சென்றுவிட்டார். காசி, இமயமலை, ராமேஸ்வரம் என தேசம் முழுதும் அவர் பாதம் பதிந்தது. வைத்தீஸ்வரன் கோயிலிலும், அதிவீரராமன் பட்டினத்திலும், ஆவுடையார் கோயிலிலும் சில காலம் தங்கியிருந்த சித்தர், தம்பிரான் என்பவரின் தீராத குன்மநோயைக் குணப்படுத்தியும் திருக்கோகர்ணம் எனும் இடத்திலிருந்த கொடிய பேயை விரட்டியும் அற்புதங்களை நிகழ்த்தினார். அதேபோல் விராலிமலையில் முருக பக்தரான தாசில்தாரின் காச நோயையும் ஒருதலை நோயையும் குணமாக்கி, 'இனி வாழ்நாள் முழுதும் முருகனுக்குத் தொண்டு செய்' என திருவருள் புரிந்தார்.

சென்னை திருவொற்றியூரில் ஒரு சுயநினைவில்லாத பெண்ணை தனது பார்வையினாலேயே குணப்படுத்தியது,

திருக்கழுக்குன்றத்திலும் சிதம்பரத்திலும் கர்ப்பிணிப் பெண்ணையும், பாம்பு கடித்த சிறுவனையும் காப்பாற்றி அருளியது என அவர் செல்லும் இடமெல்லாம் அவரின் அற்புதங்கள் நிறைந்தன.

சென்ற இடங்களிலெல்லாம் அவரின் அற்புதம் உணர்ந்து அவரை தினமும் நூற்றுக்கணக்கானோர் நாடிவர, தனிமைக் காக அவர் திருவாரூர் சென்று அங்கே வன்மீகபுரத்திலுள்ள சோமநாதசுவாமி கோயிலுக்குப் பக்கத்திலுள்ள ஓடம்போக்கி ஆற்றின் படுகையிலும் சிலசமயம் கரையில் உள்ள மரங்களின் அடியிலும் தங்க ஆரம்பித்தார்.

உடல் முழுதும் திருநீறு பூசி ஆடைகளின்றி தியான நிலையில் கண்மூடி அமர்ந்திருக்கும் சித்தர், எப்போதாவது கண் திறந்தால் அவரின் பார்வையை முதலில் சந்திக்கும் மனிதர்கள் வாழ்வில் எல்லாவித ஐஸ்வர்யங்களும் நிறைந்து வாழ்வு வளமாகும்.

எப்பொழுதாவது ஒருமுறை பசி உணர்ந்து திருவாரூர் தெருக்களில் செல்வார். அவர் பசியறிந்து உணவிட்டவர்களின் வாழ்வில் ஆனந்தமும் ஆரோக்கியமும் நிலைபெறும்.

சிதம்பரம் நடராஜர் சித்தரின் கருணை உள்ளம் அறிந்து அவருக்குள் தெய்வீக அற்புதங்களை நிறைக்க, அவர் அருளால் சித்தர் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியாக உருமாறினார். அதன்பின் திருவாரூரிலும் சித்தரின் அற்புதங்கள் மேலும் தொடர்ந்தது.

திருவாரூர் கொத்தத்தெரு, அருணாசலம் பிள்ளை என்பவர் சுவாமிகளிடம் மிகுந்த பக்தி கொண்டவர். அவர் ஸ்ரீரங்கம் பெருமாள் கோயில் விழாவிற்குப் பந்தல் போடும்போது திடீரென உயரமான இடத்திலிருந்து விழுந்துவிட்டார். அப்போது சித்தரை நினைத்து 'அபயம் அபயம்' என்றார். அப்போது கமலாலயக் குளக்கரையில் அமர்ந்திருந்த சித்தர், 'தட்சிணாமூர்த்தியை நம்பினால் கண்டிப்பா நான் பார்த்துப்பேன்' என்று சொல்லியவாறு தனது வலக்கரத்தால் ஒரு பொருளைத் தாங்கி கீழே வைப்பது போன்று வைக்க, அங்கே உயரத்திலிருந்து விழுந்த அருணாசலம் பிள்ளை தன்னை யாரோ பிடித்து பத்திரமாகத் தரையிறக்கி விடுவது போன்று உணர்ந்தார். என்ன ஆச்சர்யம்! ஐம்பதடி உயரத்திலிருந்து விழுந்தவருக்கு

சிறு கீறல்கூட இல்லை. இது தட்சிணாமூர்த்தி சித்தரின் அருள் என உணர்ந்த அருணாசலம் பிள்ளை அவரின்முன் கண்ணீரோடு வணங்க, அவர் சிறிய புன்னகையை மட்டுமே பதிலாகத் தந்தார்.

சித்தூர் சோமநாத முதலியார் என்பவர் பெரிய தனவந்தர். அவர் குன்ம நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை செய்து பயனின்றி அவதிப்பட்டார். கடைசியாக தில்லைக்கூத்தனிடம் முறையிட, நடராஜப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'உனது நோயைக் குணப்படுத்துவதற்காகவே திருவாரூரில் தட்சிணாமூர்த்தி எனும் சித்தர் நிர்வாணமாக திரிந்து கொண்டிருக்கிறான். அவனிடம் போய் கேள். குணப் படுத்துவான்' என அருளுரைக்க, முதலியார் உடனே புறப் பட்டுச் சென்று தெருவில் உணவோடு நடந்துகொண்டிருந்த சித்தரின் கால்களில் விழுந்து கண்ணீர்விட, அவரை தனது கரம் பற்றித் தூக்கி உட்காரவைத்த சித்தர், தனது கையிலிருந்த உணவை முதலியாருக்கு ஊட்டிவிட, அந்த நொடியில் மின்சாரம் பாய்ந்த உணர்வோடு உடல் சிலிர்த்த முதலியார், தனது உடல் முழுதும் இருந்த குன்மம் விலகிப்போய் தாம் இப்போது முன்பிருந்த பழைய உடல்நிலையில் இருப்பதைக் கண்டு ஆனந்தத்தில் கண்கலங்க, சித்தர் அவரைப் பார்த்து புன்னகைத்துவிட்டு அங்கிருந்து நகர ஆரம்பித்தார். முதலியார் அன்றிலிருந்து சித்தரின் பக்தரானார்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சித்தரின் மகிமைகளும் அற்புதங்களும் உணர்ந்த சரபோஜி மன்னர் தமது பரிவாரங்களுடன் சித்தரைத் தேடிவந்து தம்முடன் கொண்டுவந்த பால், பழ வகைகள், பலகாரங்களை சித்தரின் முன்வைத்து அவரது பாதங்களில் நமஸ்கரித்துவிட்டு, சித்தருக்காக விசேஷமாக தயார் செய்துவந்த ஸ்வர்ணப் பாதுகைகளை திருவடிகளில் பூட்டி, யானை தந்தத்தால் செய்த யோக தண்டத்தை சித்தரின்முன் சமர்ப்பித்து, பீதாம்பரங்களால் திருமேனியை அலங்கரித்து பாத காணிக்கையாக சில வாசனைத் திரவியங்களை வைத்து சித்தரின் அருட்பிரசாதமான திருநீற்றைக் கேட்டு இரு கைகளையும் நீட்டினார். 'நடப்பதெல்லாம் என்ன?' என்பதுபோல் சரபோஜி மன்னர் கொண்டுவந்ததையெல்லாம்

எடுத்துக்கொண்டு போகும்படி சைகை செய்துவிட்டு, திருநீற்றைத் தராமல் முகத்தைத் திருப்ப, சித்தரின் சீடரான திருப்பணிச் சுவாமிகள் விபூதி மடலை எடுத்து, 'ஐயா! மன்னருக்கு விபூதி பிரசாதம் தந்தருளுங்கள்' என்று வேண்டுதல் செய்ய, சித்தர் உபேட்சையாக திருநீற்றை எடுத்து எறிய, அது அதிர்ஷ்டவசமாக மன்னரின் கரங்களில் விழுந்தது. மிகுந்த பக்தியுடன் அதைப் பற்றிய சரபோஜி மன்னர் சுவாமிகள் விரும்பினால் 'கிராம தானம்' தர தயாராக இருக்கிறேன் என்று சொல்ல, சித்தர் மௌனமாக இருந்தார். 'சுவாமி! நம்மால் இந்த இடங்களுக்குச் செய்ய முடிந்தது என்ன?' என்று சீடர்களிடம் மன்னர் கேட்க, அவர்களும் மௌனமாயினர். இருப்பினும் மன்னர் தமது காணிக்கையைச் செலுத்தியே ஆகவேண்டும் என பொன் மொஹராக்கள் நூற்றியெட்டால் சித்தரின் திருவடிகளை பூஜித்து, பூஜா காலத்தில் முழங்குவதற்காக தமது யானைமீது கட்டிவந்த பெரிய நகரா ஒன்றையும் இறக்கி வைத்துவிட்டு, ஸ்ரீதட்சிணாமூர்த்தி சித்தரை வணங்கியபடி அங்கிருந்து நகர்ந்தார்.

சரபோஜி மன்னர் முதல் சாதாரண தொழிலாளி வரை சித்தரின் முன்பு எல்லோரும் சமமானவர்களே. கேட்டதை நல்லதை மனமுவந்து தந்தருளும் கருணைப் பிரபுவாக திருவாரூரில் ஏகப்பட்ட அற்புதங்களை நிகழ்த்திய சித்தர், 27.08.1835ம் ஆண்டு பிற்பகல் 12 மணியளவில் ஆவணி உத்திரத்தில், முன்னமே தயார் செய்து வைத்திருந்த ஜீவ சமாதியில் சிவ சொரூபத்தில் கலந்தார்.

இன்றும் திருவாரூர் கமலாலய தெப்பக்குளத்தின் தென்மேற்கில் மடப்புரம் ஓடம்போக்கி ஆற்றங்கரையிலுள்ள அவரது ஜீவ சமாதியிலிருந்து சூட்சும உடலோடு தன்னை நாடிவரும் பக்தர்களின் குறைகளைத் தீர்த்து நல்வாழ்வளிக்கும் கருணை நாதராக அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சித்தரை மனமுருகித் தொழுதால், உள்ளன்போடு சரணடைந்தால், நினைத்தது நடக்கும். வினைகள் தீரும். ஆரோக்கியமும் ஐஸ்வர்யமும் உங்கள் வசமாகும்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 5

# ஸ்ரீலஸ்ரீ சுப்பையா சித்தர்

இப்போது நீங்கள் அறியப்போகும் ஸ்ரீலஸ்ரீ சுப்பைய சித்தர் கடையனோடையில் அவதரித்து திருக்கழுக்குன்றத்தில் முக்தியடைந்தவர்.

இவர், மெலிந்த தேகத்துடன் வெண்மையான உடையுடன் தீட்சண்யமான விழிகளுடன் சாதாரண மனிதரைப் போன்ற தோற்றத்திலிருப்பார்.

இவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதால், இவரின் திருவருளாலும் அமானுஷ்ய சக்தியாலும் நல்வாழ்வு அடைந் தவர்கள் இன்னும் ஏராளமானோர் சாட்சி சொரூபமாக அவரின் மகிமைகளை பிரமிப்புடன் சொல்கிறார்கள்.

'திருவருட்பிரகாச வள்ளலாரின் ஜீவகாருண்யம், இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கம், சாதிமத வேற்றுமை களைதல்,

ஒளி வழிபாடு, மரணமில்லாப் பெருவாழ்வு, பசித்தோர்கட்கு உணவளித்தல் போன்றவைகள் மனிதர்களை இறைத் தன்மையுள்ளவர்கள் ஆக்கும்' என்று குறிப்பிடும் சித்தர், சென்ற நூற்றாண்டில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி.ஏ. ஆனர்ஸ் படித்து பின் குடும்பம், படிப்பை விட்டு உலக உயிர்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்து, இறைநிலைக்கு தம்மை உயர்த்திக்கொண்டார்.

தாமிரவருணி நதியின் தென்கரையில் அமைந்திருக்கும் கடையனோடை கிராமத்தில் நவ திருப்பதிகளின்மீது மிகுந்த பக்தி கொண்ட விஷ்ணு பக்தர் வில்லிமுத்துக் கோனாருக்கும், நாராயண வடிவு எனும் தெய்வீகத் தாய்க்கும் மகனாக 23.11.1908 அன்று இம்மண்ணில் அவதரித்தார் ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகான்.

திருவைகுண்டம், ஸ்ரீ வரகுண மங்கை, திருப்புளியங்குடி, துலைவில்லிமங்கலம், இரட்டைத் திருப்பதி, பெருங்குளம், தென்திருப்பேரை, திருக்கோளூர், ஆழ்வார் திருநகரி எனும் நவ திருப்பதி பெருமாள்களின் திருவருளால் தமது மகன் அவதரித்திருக்கிறார் என வில்லிமுத்துக் கோனாரும் நாராயண வடிவு அம்மையாரும் உள்ளம் பூரித்தார்கள்.

அவர்கள் எண்ணியபடியே குழந்தை வளர ஆரம்பிக்கும்போதே அதன் அமானுஷ்ய சக்தி வெளிப்பட அவர்கள் திகைத்தார்கள்.

பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்ததும், பள்ளிக்கூடம் விட்ட நிமிடத்தில் அவரும் அவர் நண்பர் பால் சாமுவேல் என்பவரும் கடையனோடையிலிருந்த கோயில்கள், சமாதிகளைச் சுற்றி வருவார்கள். அப்பொழுதே அவருக்குள் சித்தர் உலகம் வசமாக ஆரம்பித்தது. ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு படிப்பிற்காக அவர் குலசேகரபட்டினத்திற்குச் சென்றபோது, திருச்செந்தூர் சென்று அங்குள்ள வள்ளிக்குகையிலும், மூவர் சமாதியிலும் அமர்ந்து தியானத்தில் ஈடுபடுவார். அந்த மூவர் ஜீவசமாதியிலிருந்த மௌன சுவாமிகளும் காசி சுவாமிகளும் ஆறுமுக சுவாமிகளும் சூட்சுமத்தில் அவருக்குள் சித்துக்கலைகளைக் கற்பிக்க, ஸ்ரீலஸ்ரீ சுப்பைய சித்தர் மெல்ல மெல்ல இறைத்தன்மையை தன்னுள் உணர ஆரம்பித்தார்.

மூவர் சமாதிகளுக்கு பெரும்பாலான சாதுக்கள் வந்து தரிசனம் செய்வார்கள். அவர்கள் ஸ்ரீ சுப்பைய சித்தரின் முகப் பொலிவையும் கருணை மிகுந்த விழிகளையும் கண்டு வியந்து, மூலிகைகளின் மகத்துவத்தையும் சக்தி மிகுந்த மூலிகைகளையும் அவருக்கு அடையாளம் காட்ட, சித்த மருத்துவம் அவரது வசமானது.

ஏழாம் வகுப்பு படிக்கும்போதே, காச நோயால் அவதியுற்ற அவரது தங்கையை தனது அமானுஷ்ய சக்தியாலும் மூலிகையாலும் ஆச்சர்யமூட்டும் வகையில் குணப்படுத்தினார். அதுமட்டுமல்ல. தீராத தலைவலி, வாத நோய், குஷ்ட நோய்களைக்கூட தனது அமானுஷ்ய மூலிகைகளால் குணமாக்கி, தன்னை ஒரு சித்த புருஷராக அடையாளப்படுத்தினார்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி.ஏ.ஆனர்ஸ் படிக்க ஆரம்பிக்கும்போது சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர் கல்யாணம் ராமசாமி அவர்களின் துணையோடு ஓலைச்சுவடிகள் ஆராய்ச்சியிலும், அஷ்டமா சித்துக்கலையிலும் மிக உயர்ந்த நிலையை நெருங்கினார். இயற்கையிலுள்ள தாதுக்கள், மூலிகைகளின் மூலம் தமது உடற்கூறுகளை உறுதியாக்கி, உணவு, உறக்கம், நோய், மரணமில்லாத காயகல்ப உடலாக்கி, காற்றை மட்டுமே சுவாசித்து வாழும் வேதித்தல் எனும் அற்புதக் கலையை தன்வசப்படுத்தினார்.

'உணவு உண்டால் பசி நீங்கும், உடல் வளரும், வேலை செய்ய சக்தி வரும். இது நமக்குத் தெரியும். ஆனால் அந்த உணவின் தன்மையிலிருக்கும் பித்த வாத சிலேட்டுமம் என்பவை நம் உடலுக்கு சில நன்மை தீமைகளை ஏற்படுத்தும். அதைப் போலவே ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் எனும் கர்மங்களின் சம்பாத்யமாம் நமக்குக் கிடைக்கப்போகும் மறுபிறவி பற்றியே வேத, புராணம் இன்னுமுள்ளவை சொல்லும். ஆனால் இந்த உடம்புக்கு தமிழில் 'மெய்' என்று பெயர். அது ஏன் பொய்யாகிப் போகிறது? இந்த மண்ணுக்குள் போகிறது? இதை நிறுத்த வேண்டும். உடல்நிலை நிறுத்த வேண்டும். அதைக் கெடாமல் பார்த்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும்' இது சித்தர்கள் வாக்கு. ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகானும் இதையே அறிவுறுத்த

ஆரம்பித்தார்.

வினைகளைச் சம்பாதித்துத் தருவது மனம், சொல், செயல் ஆகியவையே. அவைகளை அடக்கி நம் வசப்படுத்தினால், அவைகள் நமக்கு தீவினைகளைச் சம்பாதித்துத்தர வழியில்லை. நாம் கடைத்தேறலாம். நல்ல நினைப்பு, இனிய சொல், இல்லாதவர்க்கு உபசரித்தல், புறங்கூறாமை, இறை சிந்தனை இவைகள்தான் நல்வினை கூட்டும். அப்போது இறைவனை உணரலாம், அடையலாம், அவனாகவே ஆகலாம் என்பது உண்மை. ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகானும் இதையே முயன்றார். மனத்தை வென்றார். இறைநிலையை அடைந்தார்.

பெற்ற மகன் தம்மைவிட்டு இறைநிலையோடு செல்வதற்கு எந்தத் தாய்தந்தையர் அனுமதிப்பார்கள்? ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகானின் அம்மாவும் அப்பாவும் அவரை அன்பெனும், பாசமெனும் இல்லற வாழ்க்கையில் ஈடுபடுத்தினால், அவரது நிலை மாறும் என திருமணம் முடித்துவைத்தனர். ஆனாலும் அவர், குடும்பத்துணைவியின் ஒப்புதலோடு துறவறம் மேற்கொண்டு உலக உயிர்களின் நன்மைக்காக தன்னை அர்ப்பணித்தார்.

வள்ளிக்குகை, மூவர் சமாதி, திருச்செந்தூர், விருதாச்சலம், வடலூர், திருப்பதி என ஒரு பித்தனைப் போன்று சுற்றித் திரிந்தவர் கடைசியில் 1951ம் ஆண்டு தமக்கான தவக்குன்று இதுதான் என உணர்ந்து திருக்கழுக்குன்றம் வந்தார். அங்கே மலைமீது சிறிய குகையில் தவம் மேற்கொள்ள ஆரம்பித்தார். திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலையில் வடமேற்குத் திசையில் பட்சிகள் உணவருந்திச் செல்லும் பாறைக்கு மேற்கில் அமைந்த சிறு குகைதான் அவரது தியான பீடமாகியது. ஸ்ரீலஸ்ரீ சுப்பைய சுவாமிகளின் தவத்தை அறிந்த அவரது பக்தர்கள் சிலர், 'சுவாமி! இவ்வளவு உயர மலையில் பாறைகளும் காடுகளும் சூழ்ந்த வனாந்திர மலையில், இரவில் அடர்ந்த இருளில் விஷ ஜந்துக்கள், புலி, சிறுத்தை நடமாடும் இந்த ஆபத்தான இடத்தில் எப்படி இருப்பீர்கள்?' என்று கேட்க, சித்தர் அவர்களைப் பார்த்து புன்முறுவலுடன் 'இல்லாமல் இருப்பேன்' எனும் ஒற்றை வார்த்தையை பதிலாகச் சொன்னார்.

பகல் நேரத்தில் பட்சிதரிசனத்திற்காக வரும் பல நூறு பேர்களும் வெளிநாட்டினரும், பலமொழி பேசும் மக்களும் சித்தரின் மகிமையை அறிந்து அவரைத் தரிசித்து அவரின் அருள்பெற்றுச் செல்வார்கள். எப்பொழுதாவது மிக பிரச்னைக்குரிய நபர்கள் தன்னைத் தரிசிக்க வந்தால், அவர்களின் கண்களை கூர்மையாக உற்றுநோக்கி, 'சரியாகிடும் போ' என்பார். அது ஒருதேவ வார்த்தை. அடுத்த நிமிடமே அந்த பிரச்னைக்குரிய மனிதர் அளவில்லா ஆனந்தத்துடன் அங்கிருந்து நகர்வார்.

பல வருடங்களாக தீராத வயிற்றுவலியால் துடித்த ஒரு பக்தர் அவர்முன் கண்ணீரோடு நிற்க, அவரது கண்களை ஊடுருவிய சித்தர், ஒரு மூலிகைக் களிம்பை அவரிடம் தந்து, 'ஒரு மண்டலம் சாப்பிடு. ஜென்மத்திற்கும் வயிற்றுவலி வராது' என்று சொல்ல, 'சித்தர் எப்படி நம்முள் இருக்கும் பிரச்னையை உணர்ந்தார்?' எனும் ஆச்சர்யத்துடன் அந்த நபர் அங்கிருந்து நகர்ந்தார். பிரபாகரன் எனும் அந்த நபருக்கு அன்றுமுதல் வயிற்றுவலி என்பதே இல்லாமல் போக, அவர் சித்தரின் பக்தனாகி அவரை வணங்கி ஆனந்தப்பட்டார்.

பகலில் பல்வேறு மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் அருளாளராக அம்மலையில் வீற்றிருக்கும் மகான், இரவில் அந்த அடர்ந்த இருளில், தனிமையில் எப்படியிருப்பார்? என்று யோசித்தால், நம்முள் வியப்பு எழுகிறது.

இரவில் அவர் கடுந்தவம் புரிவாரா? யோகத்தில் இருப்பாரா? நிஷ்டையா? சமாதி நிலையில் இருப்பாரா? இறைவனுடன் உலக மனிதர்களைப் பற்றி உரையாடுவாரா? சிந்தனைத் தெளிதலா? யாரால் அறிய முடியும்? சித்தரும் சிவமும் குணத்தளவில் ஒன்றேயல்லவா?

உடற்பிணிக்காக தம்மை நாடி வருபவர்களுக்கு மூலிகைகளை நசித்துக்கொடுத்த சித்தர், உயிர்ப்பிணியாம் மரணத்திற்கு மூலமங்களை நசிக்கும் உபாயத்துடன் தவம் கொண்டார். அதனால் பேசுவதை நிறுத்தி மௌன சுவாமியாக, மௌன மகானாக உருமாறினார்.

'பேசுவதால் சில நேரங்களில் அதிலுள்ள குற்றங்களால் ஆன்மாவிற்கு வினை கூடலாம். உடல் எழுந்து நடமாடும் போது அதனால் ஏற்படும் குற்றங்களால் வினை கூடலாம். இவற்றைப் போக்க சித்தர்களுக்கு நேரமிருக்காது. எனவே நடமாடுவதும் இல்லை. மனத்தால் ஏற்படும் வினைகட்கு முடிவாக சிந்தனையை சிவன்பால் வைத்துவிட்டால் வினை நசியும். ஏற்கெனவே உள்ள வினையைத் தொலைக்க, உயிர்கள்மீது இரக்கம் கொண்டு, கருணையுடன் அவர்கள் கடைத்தேற வழிகாட்டி, பிணி போக்கி, துன்பம் போக்கி, துயர் போக்கி, சகஜ நிலையில் பிற உயிர்களுக்கு ஆசி கூறுவதால் இறைவனும் நன்மை, தீமை எனும் கடலுக்கு அப்பால் செல்லும் அக்கரையைக் காட்டுவார். கரையேற இது ஒன்றுதான் வழி. உயிர்நலப் பணி (ஜீவ காருண்யம்) ஒன்றே மோட்ச வீட்டின் திறவுகோல். அந்த மோட்சத்தை ஜீவ காருண்யத்தாலன்றி வேறு எதனாலும் பெறக் கூடாது' இது வள்ளலார் வாக்கு. இந்த வாக்கின்படியே தம் வாழ்வை உயர்த்திக்கொண்ட மகான் ஸ்ரீ சுப்பையா தமக்கு முன்பாக எப்போதும் வள்ளலாரின் 'திருவருட்பா' நூலை வைத்திருப்பார்.

தீராத பிணிகளுக்கு மூலிகையைத் தந்தருளும் மகான், வாழ்க்கைப் பிரச்னை என தம்மை அணுகி வருபவர்களுக்கு, தன்முன்னே யாரோ வைத்துவிட்டுச் சென்ற சிலேட்டில் இரண்டு வார்த்தைகள் எழுதிக் காட்டுவார்.

பெரும்பாலான மனிதர்கள் அந்தக் கரும் சிலேட்டில் வரும் தெய்வ வார்த்தைக்காக பலமுறை மலை ஏறி இறங்குவார்கள். அவரது தீர்க்க தரிசனம் அத்தனை சக்தி வாய்ந்தது. அவர் எழுதினால் அது நடக்கும். அந்த வார்த்தைகள் சத்திய வார்த்தைகளாக நம்முள் நம்பிக்கையை விதைக்கும்.

ஒருமுறை திருக்கழுக்குன்றத்து மலைமீது படிக்கட்டுகள் கட்டும் பணி ஆரம்பித்தது. இருநூறு படிக்கட்டுகள் கட்டப்பட்ட பின், ஒரு பெரிய பாறை தடைக்கல்லாக இருந்தது. நெட்டுக்குத்தாகக் கட்டப்பட்ட படிகளின் முடிவில் அந்தப் பாறை இருந்ததால், வெடி வைத்து அந்தப் பாறையைத் தகர்த்தால் அது சிதறி, அடிவாரம் வரை உருண்டு வரும். அதனால்

கட்டப்பட்ட அத்தனை படிகளும் சேதமாவதுடன் சாலையில் செல்வோருக்கும் மலையடிவாரத்தில் வசிப்பவர்களுக்கும் ஆபத்து ஏற்படும். இதுதான் இயல்பு அன்றைய சூழலில். அதனால் சித்தர்மீது மிகுந்த பக்தி கொண்ட ஊர் மக்களும் தேவஸ்தான அதிகாரியும் அவரை வணங்கி பிரச்னையைச் சொல்ல, அது தமக்குத் தெரியும் என்பதுபோல் புன்முறுவலிட்ட சித்தர், ஒரு நொடி கண்மூடி தியானித்துவிட்டு, பாறையின் எந்த இடத்தில் எத்தனை துளைகள் எவ்வளவு ஆழத்திற்குப் போட்டு வெடிவைக்க வேண்டும் என்றும், மூன்று படிகள் மட்டும் சிறிது உடையும் என்றும், உடைக்கப்படும் பாறையிலிருந்து 60 படிகளுக்கு மேல் கட்டுமளவிற்கு கற்கள் கிடைக்கும் என்றும், பாறைகள் படிக்கட்டுகளுக்கு வெளியில்தான் விழும் என்று எழுதிக் காட்டினார். அந்த வார்த்தைகள் நிஜமானது. அது தெய்வ வார்த்தைகளல்லவா! அத்தனையும் உண்மையானது. யாருக்கும் எதற்கும் தீங்கில்லாமல் படிகள் விண்ணைத் தொடும் அளவில் உயர்ந்தது வளர்ந்தது. இன்றும் மலையேறும் பாதையின் படிக்கட்டுகளில் மூன்று படிகள் மட்டும் அவர் சொல்படி லேசாக உடைந்த நிலையில் இருப்பதைக் காணலாம்.

சித்தமுள்ளவர்களிடம் சென்று தமது பசி நீங்க, நோய் நீங்க, குறை நீங்க கோரிக்கை விடுத்தால் அவர்கள் அதைச் செய்வார்கள். உலகிலுள்ள அத்தனை பெருவியாதிக்காரர்களின் நோயையும் தீர்த்தால் என்ன? எனக் கேட்காமல், அவ்வப்போது எதிர்ப்பட்டவர்கட்கு, தம்மை அணுகி வருவோருக்கு யோகிகள், ஞானிகள், சித்தர்கள் இதைச் செய்வதுண்டு. அப்போது அவர்கள் இறைவனுக்கு ஒப்பாக ஏற்றி வைக்கப்படுவார்கள். கொடுத்துக்கொண்டே இருப்பதுதான் இறைவன் தொழில். அதை ஸ்ரீலஸ்ரீ சுப்பைய சுவாமிகளும் செய்தார்.

'சாமி! என் சொத்தையெல்லாம் பங்காளிங்க பிடுங்கிக்கிட்டாங்க. இப்ப நான் நடுத்தெருவுல நிக்கறேன். நீதிமன்ற வழக்கு என் பக்கம் தீர்ப்பாகணும் சாமி' என்று ஒரு மூதாட்டி கண்கலங்க, அந்த மூதாட்டியின் கண்களை ஆழமாக ஊடுருவியவர், 'போய் வா, சரியாகும்' என சைகையில் சொல்ல, மறுநாள் புன்னகை முகமாய் அந்த மூதாட்டி சித்தரின் முன் நிற்க, அவரைப்

பார்த்து லேசாகப் புன்னகைத்து 'இனி பிரச்னையில்ல, போய் வா' என சைகை செய்தார்.

'ஒரு வாரமா என் அம்மாவுக்கு புத்தி சுவாதீனம் இல்ல. படுத்த படுக்கையா இருக்காங்க. பெரிய ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போற அளவிற்கு பண வசதி இல்லே. என் அம்மாவை நீங்கதான் பிழைக்க வைக்கணும்' ஒரு இளைஞன் கண்ணீருடன் சித்தரின் முன் நிற்க, அவனிடம் ஒரு மூலிகைச் சாறைத் தந்து, 'நல்லாயிடும். கவலைப்படாம போ' என சித்தர் தலையசைக்க, மௌனமாக நகர்ந்த இளைஞன் பத்தாவது நாள் அவனது அம்மாவோடு மலையேறி வந்து சித்தர் முன்பாக கரம்கூப்பி நின்றான். கண்கலங்கி சித்தரின் பாதங்களை நமஸ்கரித்தான். இப்படிப் பலப்பல நிகழ்வுகள், ஆச்சரியங்கள். 'பிள்ளை படிக்கவில்லை', 'வியாபாரம் படுத்துவிட்டது', 'கோயில் கட்டி பாதியில் நிற்கிறது, மீதிக்கு வழி சொல்லுங்க' இப்படி அன்றாடம் அவர் குகையின்முன் நின்று கோரிக்கை வைத்தோருக்கு, வேண்டுதல் செய்தோருக்கு ஆபத்பாந்தவனாக அருள்பாலித்தார் அந்தப் புனித மகான். சித்துக்களைச் செய்யாமல் ஞானத்தால் எதிர்காலத்தை அறிந்து அவர்களுக்கு வழிகாட்டினார், வினைகளைப் போக்கினார்.

இது எவ்வளவு காலம் தொடரமுடியும்? எங்கேயோ உள்ளவர்களுக்கும் பரு உடலை ஓரிடத்தில் வைத்துக்கொண்டு எப்படி அருளாசி வழங்குவது? எனவேத், இந்த உடல் அப்படி எங்கும் நிறைந்து அருளாசி வழங்க தடையாக இருக்கிறதே. இதற்கு வழியென்ன? நாம் அதுவாக மாறிவிட்டால் அதை நடத்த முடியும். உணவு அடங்கிவிட்டது. உறக்கம் அடங்கிவிட்டது. உள்ளம் அடங்கிவிட்டது. உலக மக்களுக்கு உதவுவதில் நாட்டம் வந்துவிட்டது. சகஜப் பழக்கம் இருக்கிறது. சமாதிப் பழக்கம் கைகூடிவிட்டது. எனவே இறைவனுடன் ஐக்கியப்பட்டு அருவ வடிவில் உலக மக்களுக்கு ஆசி வழங்கவும், கூப்பிட்டால் வரவும், கேட்டால் தரவும் தருணம் வந்துவிட்டது. இம்மண்ணில் வள்ளலார் உலவியது 51 ஆண்டுகள். தமக்கும் 51 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதனால் தான் வாழ்ந்துவந்த உடலைக் காயமாக்கி வைத்திருந்ததால்,

அதை திருக்கழுக்குன்றத்திலேயே விடுத்து ஜீவன் முக்தராய் வாழத் தொடங்க ஒரு நாளைக் குறித்தார். மார்கழி மாதம் சதய நட்சத்திரம் உதய காலத்தில் இப்பூவுலகில் வில்லிமுத்துக் கோனார் நாராயண வடிவு மூலம் ஓர் உடலை திருச்செந்தூர் முருகன் அம்சமாக, நவ திருப்பதி பெருமாள் அருளால் உருவான அந்த உடலைக் காயமாக்கி, அழிக்க முடியாததாக்கி, ஆன்மாவைப் பிரித்தெடுத்து இறைவனுடன் 3.1.1960. அன்று ஐக்கியமானார்.

வாழும்போது நமது உடலை பத்துவிதமான வாயுக்கள்- பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என செயல்பட்டு, பல காரியங்களைச் செய்து பராமரிக்கும். இதில் தனஞ்செயன் என்ற வாயு மட்டும் உயிர் பிரிந்த உடலை மூன்று நாட்களில் சிதைத்து கபாலம் திறந்து வெளியேறும். இது சாதாரண மனிதருக்கான நியதி. 40 நாட்கள் கொண்டது ஒரு மண்டலம். மகான்கள் சமாதியானால் அதை 40 நாட்கள் பூஜை செய்து, பிறகு திறந்து பார்த்து அது கெடாமல் இருந்தால் அதன்மீது கோயில் எழுப்புவார்கள். அப்படி திறந்து பார்க்கும்போது, தனஞ்செயன் உடலைச் சிதைக்க முடியாமல் கபாலம் திறக்கும் முயற்சியில் ஈடுபடும்போது அதிலுள்ள முடியெல்லாம் மேல்நோக்கி நெட்டுக்குத்தாய் நிற்கும். உடலும் சாயாது, சரியாது, நாற்றமெடுக்காது. அதன்மீது கோயில் அமைப்பது உத்தமம்.

ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகானின் சமாதிக்கும் இந்த மண்டல பூஜை நடந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சித்தர்களின் ஜீவ சமாதிகளிலும் இதுபோன்ற உச்சி பார்த்தல் எனும் மண்டல பூஜை நிகழ்ந்திருப்பதற்கு சான்றுகள் உள்ளன. ஆனால் இது சென்ற நூற்றாண்டில் நடந்த நிகழ்வு என்பதால், அரசின் அனுமதியோடு காவல் துறை, மருத்துவத்துறையினரின் முன்னிலையில் 'உச்சி பார்த்தல்' நிகழ்வு நடந்தது. மனித குலம் எதை எதிர்பார்த்ததோ அது நடந்தது. 'சித்தர் நிஜமானவர்' என்பதே அனைத்து அதிகாரிகளின் ஒட்டுமொத்த வாக்குமூலம். ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகானின் உடல் அப்படியே இருந்தது. முடி

மேல்நோக்கி இருந்தது. பார்த்தவருக்கு பயம், வியப்பு, நா எழவில்லை.

பார்த்தவர்கள் பாக்கியவான்கள்! கல் அப்படியே மூடப்பட்டு பூஜைகள் தொடர்ந்து பத்து மாதம் நடைபெற்றது. மீண்டும் அதே நிகழ்வு! பிறகு மேற்கல் மூடப்பட்டு கோயில் அமைக்கப்பட்டு வழிபாடு நடந்து வருகிறது.

ஸ்ரீலஸ்ரீ சுப்பைய மகான் சூட்சும உடலோடு இந்த பிரபஞ்ச வெளியில் ஒளி அலையாய் பரவி நிறைந்து ஒவ்வொரு நொடியும் தம்மை நினைத்து தன்னருள் கோரும் பக்தர்களுக்கு ஆபத்பாந்தவனாக திருவருள் புரிந்து காத்து வருகிறார். இதற்கு உதாரணமாக,

1967ம் ஆண்டு மாணிக்கவாசகம் எனும் சாது ஸ்ரீ சுப்பைய மகானின் குகையில் தீபம் ஏற்றிவிட்டு வரும்போது, கால் பெருவிரலை விஷப்பாம்பு கடிக்க, உடல் முழுதும் விஷம் பரவி கீழே சரிந்தார். இன்னும் ஐந்து, பத்து நிமிடங்களில் அவர் மரணமுறுவார் என முடிவு செய்து அவரை கட்டிலில் கட்டி மலையிலிருந்து ஸ்ரீ சுப்பைய மகானின் சமாதிக்குத் தூக்கி வந்தனர். அப்போது சமாதியில் ஒரு சத்தம் கேட்டது. வெண்புகை சூழ்ந்தது. சாதுக்கள் வெளியே போய்விட்டனர். சிறிது நேரம் கழித்து அவர்கள் வந்து பார்த்தால் ஏதும் நடந்திடாதது போன்று பாம்பு விஷம் உடலில் பாய்ந்த மாணிக்கம் புன்னகை முகமாய் எழுந்து உட்கார்ந்திருந்தார். கோயிலின் கதவு திறக்கப்பட்டு ஸ்ரீ சுப்பைய மகானின் உருவம் வெளியில் சென்றதையும் அவர்கள் பார்த்து வியந்திருக்கிறார்கள். இதை தனது சுயக் குறிப்பாக மாணிக்கவாசகம் அவர்களே தமது புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இப்படி பலநூறு ஆச்சர்யங்கள், அற்புதங்கள் மகிமைகளை திருக்கழுக்குன்றம் மலையடிவாரத்தில் பஸ் நிலையத்திற்கு அருகே இருக்கும் தனது சமாதி திருக்கோயிலிலிருந்து தினம் தினம் நிகழ்த்திக்கொண்டே இருக்கிறார் அந்த அற்புத மகான், அருளாளர், கருணைப் பிரபு. நீங்களும் திருக்கழுக்குன்றம் சென்று மகானின் திருவருளைப் பெற்று நலமடையுங்கள்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 6

# ஸ்ரீலஸ்ரீ அருணாச்சல சித்தர்

இப்போது நீங்கள் அறியப்போகும் ஸ்ரீலஸ்ரீ அருணாச்சல சித்தர் சென்ற நூற்றாண்டில் நம் தமிழக மண்ணில் அவதரித்து ஒரு தெய்வீக புருஷராக, சக்தி மிகுந்த மகானாக பல்வேறு மகிமைகளைப் புரிந்தவர்.

பார்ப்பதற்கு ஒரு சாதாரண மனிதரின் தோற்றத்தில் வெண்மையான உடையுடன் நெற்றி நிறைந்த திருநீறுடன், வெண்மைத் தாடியுடன் காட்சியளிப்பார். அவரின் கண்கள் அளவிட முடியா சக்தியாய், ஒளி வெள்ளமாய் நம்மை ஒரு சில நொடிகளில் ஊடுருவி, நம்முள் இருக்கும் பிரச்னைகளை அவருக்கு உணர்த்திவிடும்.

தீராத நோய்களும் வினைகளும் வறுமையும் அவர் தம்

தலையில் கைவைத்து ஆசிர்வதித்த நொடியில் நம்மைவிட்டு விலகிவிடும்.

சாந்த சொரூபமாக, அமைதியின் உருவாக திருக்காட்சி புரியும் அருணாச்சல சித்தரை அணுகி, நம் குறைகளைச் சொன்னால் போதும். ஆபத்பாந்தவனாக தாயுள்ளத்தோடு நம் பிரச்னைகளைத் தீர்த்து சுக வாழ்வளிப்பார் அந்தக் கருணை மனிதர்.

அரக்கோணத்திலிருந்து வேலூர் செல்லும் நெடுஞ்சாலையில் நெமிலி எனும் நகரத்திற்கு முன்பாக கறியாக்குடல் எனும் கிராமத்தில் ஒரு சக்தி ஸ்வரூபமாக வாழ்ந்து பலநூறு அன்பர்களின் வாழ்வை வளமாக்கி நல்லருள் புரிந்த அந்தப் புனித மகான் இன்றும் தனது சூட்சும உடலோடு தன்னை நாடி தனது ஜீவ சமாதி ஆலயத்திற்கு வரும் அன்பர்களின் குறைகளைத் தீர்த்து, நல்வாழ்வையும் ஆனந்தத்தையும் தந்து கொண்டிருக்கிறார். சித்த புருஷர்களுக்கே உரிய அஷ்டமா சித்துக்களில் மிகவும் தேர்ச்சி பெற்ற நிலையிலும் அமானுஷ்ய சக்தியில் மிக உயர்ந்த நிலையையும் பெற்றிருந்த அருணாச்சல சித்தர் அந்தச் சித்துக்களையும், அமானுஷ்ய சக்தியையும் உரிய நேரத்தில் மட்டுமே பயன்படுத்துவார். அவர் கை பட்ட திருநீறை நெற்றியில் நாம் பூசினாலே போதும். அடுத்த நொடி உடல் முழுதும் மின்சாரம் பாய்ந்த புத்துணர்ச்சியால் உடல் ஆரோக்கிய நிலைக்கு மாறிவிடும்.

‘எனக்கு பத்து வயசு இருக்கும்போது என் கை கால்கள் செயலிழந்து போச்சு. சாப்பிடவே வசதியில்லாத வறுமையான குடும்பத்தில் பிறந்த என்னை என் பெற்றோர்களே கை விட்டுட்டாங்க. ஆனால் அருணாச்சல சாமிதான் என் உடல் முழுதும் திருநீறு பூசி ஏதோ மந்திரம் சொன்னாரு. எனக்கு தூக்கம் வருகிறா மாதிரி இருந்தது. தூங்கிட்டேன். மறுநாள் காலையில எழுந்து பார்க்கிறேன். என் கை கால்கள் எல்லாம் பலமாக வலிமையா இருக்கு. நானே எழுந்தேன். நடந்தேன். ஓடினேன். நேரே அருணாச்சலம் சாமிகிட்டே போய் கண்கலங்கி நின்னேன். அவர் என்னைப் பார்த்து சிரிச்சுட்டு, ‘இனி உன் உடம்புக்கு ஒரு பிரச்னையும் வராதுன்னு சொன்னாரு. ‘இப்ப

எனக்கு எண்பது வயசாகுது. இதுவரைக்கும் எந்தப் பிரச்னையும் இல்ல. அந்த அருணாச்சல சித்தர்தான் என்னை வாழவச்ச தெய்வம்' இப்படி நெகிழ்வோடு சொல்கிறார் கறியாக்குடலைச் சேர்ந்த பெருமாள் எனும் முதியவர்.

இது மட்டுமல்ல. அவரால் நல்வாழ்வைப் பெற்று அவரை தெய்வமாக வணங்குபவர்கள் பலரும் இன்று அவர் ஜீவ சமாதியை கோயிலாகத் தொழுகிறார்கள்.

மனம்தான் சிவம். சிவம்தான் ஜெயம். ஜெயம் வீரனுக்கும் விவேகிக்கும் வேறுபடும். அன்பை அடை அதனால் அறிவை யும், அறிவினால் அரியையும், அரியினால் இவ்வுலகையும் அடையலாம் என்ற சித்தர், மனத்தூய்மையும் அன்பும்தான் இறைவனை அடையும் நல்வழி என்றார்.

காஞ்சிபுரம், வேலூர், கறியாக்குடல் என அவரது அமானுஷ்ய நிகழ்வுகளை அறிந்தவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

பற்றுநிலை கடந்து இறைநிலையோடு உலக நன்மைக்காக மட்டுமே வாழ்ந்த அந்த மகான் 29.12.1946 அன்று சதய நட்சத்திரம் நிறைந்த பஞ்சமி திதியில், விதேஹ முக்தியுடன் கூடிய தற்பரஞ்சமாதி நிலை எனும் ஜீவசமாதி நிலை யடைந்தார்.

இன்றும் அவர் தனது ஜீவசமாதியில் சூட்சும உடலோடு வீற்றிருந்து தம்மை நாடிவரும் அன்பர்களின் துயர்களைத் தீர்த்து நல்வாழ்வளிக்கும் கருணைப் பிரபுவாக அருள்பாலிக்கிறார்.

அருணாச்சல சித்தர் எங்கே பிறந்தார்? எப்படி இந்த கிராமத் திற்கு வந்தார் என அவரைப்பற்றி முழுமையாக அறிய முற் பட்டபோது உறக்கமில்லா சூன்ய நிலையில் தோன்றிய அந்த மகான், தன்னைப்பற்றி தாமே தமது பக்தர்களின் மூலமாக சூட்சும நிலையில் தெரிவிப்பதாக அருளினார். அதன்படி அவரது பக்தர்கள் பாண்டுரங்கன், கோபி அவர்களின் மூலம் உறக்க நிலையில் சூட்சுமத்தில் ஸ்ரீலஸ்ரீ அருணாச்சல சித்தர் தம்மைப்பற்றி தாமே அருளிய வார்த்தைகளைப் படியுங்கள். அவரின் கருணையை, அருளைப் பெற்று நல்வாழ்வை உணருங்கள்.

"தொண்டைநாடு"

சுவாமிகள் பிறந்த நாடு தொண்டை நாட்டின் உட்பகுதிக்கு உட்பட்ட மாமாம்பாக்கம். இவ்வூர் காஞ்சிக்கு தெற்கேயும், அண்ணாமலைக்கு கிழக்கேயும் இருந்து வந்தது. இந்த ஊர் இவ்வூர் சோழர் காலத்தில் மருவி சூரினின் சொந்த ஊர் ஆனது. (குறிப்பு : சுவாமிகளின் ஊர்ப் பெயர் சூட்சுமம்)

"சுவாமிகளின் பிறப்பு

வேளாளர் குலத்தில் தாய் தந்தையர்க்கு மூன்றாவது மகனாக பிறந்தார். ஆனாலும் தன் ஐந்தாவது வயதில் தன் குடும்ப வறுமையின் பொருட்டு பிறப்பின் ரகசியத்தை அறியா காரணத்தினாலும் சுவாமிகளை அவர் தாய் தந்தையர் தன் குடும்ப நட்பின் காரணமாகவும், இடையர் குலம் சார்ந்த எஜமான் ஒருவனுக்கு சுவாமிகளை தத்து கொடுத்தனரே! இங்குதான் சுவாமிகளுக்கு பெரும் திருப்பமாக ஆதி சங்கரர் வழி வந்த பாசகன் ஒருவன் பார்வை பட சுவாமிகளின் முன் கதை அறிந்த அவன் சுவாமிகளை தொட, உணர்வுமூலம் உட்கருத்தை கூறிட உணமையானது உறங்கும்படி உத்தரவிட்டுச் சென்றான்.

சுவாமிகளின் பூர்வீகமும், பிறப்பும் இது நாள் வரையில் யாரும் அறிந்தார் இல்லை. இவர்கள் சுவாமிகளின் ஊரும், பெயரும் எவ்வாறாக இந்நிலை அடைய, அவர் எவ்வாறு முயன்றார் என்றும், மாயையை வென்றார் என்றும் எவருக்கும் சுவாமிகள் கூறியதும் இல்லை. சுவாமிகளின் பூர்விகம் பற்றியும் இவ்வுலகத்தில் சுவாமிகளின் பெருமைகளையும், அருமை களையும், சுவாமிகளின் அடியவர்கள் அறிய வேண்டியும் அறிந்து நல்வழி நடந்து இவ்வுலகில் உண்மையுடனும், நடந்திட வேண்டியும், சுவாமிகளே அடிபணிந்து பரிகாரம் கேட்டும் சுவாமிகள் அனுமதி அளிக்கா காரணத்தால், சுவாமிகளின் பெருமைகளை சுவாமிகளின் அடியார்களிடம் கேட்பவரிடம் சுவாமிகளைப் பற்றி, சுவாமிகளின் பூர்வீகத்தை கூற வழியின்றி வாடி வந்தனர். ஆனால் வேண்டுபவரின் வேண்டுதலை ஏற்று சுவாமிகளின் பூர்வீகமும் அவர் பிறப்பும், சமாதிநிலை அடையும் அவர் செய்த நன்மைகளும் விளையாட்டுகளும்,

ஏகியவனை தண்டித்தும் நகையாடியவரை நட்புடன், வாழ்வதனை வாழ்ந்திட நல்வழிப்படுத்தியதையும், இந்நால்வரை சுவாமிகளின் பெருமைகளை பறைசாற்ற காலமது இன்றுதான் நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் சுவாமிகளின் அறியா பருவத்தில் நிகழ்வு வளர்ப்பு தாய் தந்தையர்க்கு தெரியும். அத்தாய் தந்தையர் இறைத் தொண்டிலும அடியவர் தொண்டிலும் அளப்பறியா ஈடுபாடு கொண்டவர். அவ்வாறாக வாழ்ந்து வரும் காலத்தில் தாய் தந்தையருடன் காஞ்சி மாநகருக்கு யாத்திரை வந்தார். அச்சமயம் சுவாமிக்கு வயது 13. தன் 13வது வயதில் காஞ்சியில் சுவாமிக்கு பெரும் திருப்பமாக தன் பால்ய வயதில் கண்ட பரதேசி உரு தாங்கியவர் எதிர்பட, இவர் அவரை நோக்க, அவர் இவரை நோக்க, சிறிது நேரத்தில் சுவாமிகள் பார்த்தவர் காணாமல் போக, மனதில் திடீர் பிரளயமாக அவரைக் காண மனம் ஏங்கியது.

ஆனாலும் அவர் பெற்றோர் அவரை அழைத்துக் கொண்டு வீடு சேர்ந்தனர். அவர்கள் அறியாமலே சுவாமிகளை இறை வழியில் நாட்டம் கொண்டவராக வளர்த்தனர். வளரும் பருவத்தில் சுவாமிகளுக்கு திருமண வயது வந்தது. இங்குதான் சுவாமிகளுக்கு வாழ்வின் பெரும் திருப்பம் ஏற்பட்டு தாய் தந்தையரோ சுவாமிக்கு திருமணம் செய்ய வற்புறுத்தி தன் வழியில் பெண்தேட சுவாமிகளின் நிலை சங்கட நிலையானது. இந்நிலையில் தான் சுவாமிகளின் பூர்வ புண்ணியம் செயல்படத் தொடங்கியது. இந்நிலையில் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினார். வெளியேறியவர் எங்கு செல்வது என்று அறியாமல் பித்துப் பிடித்ததுபோல் வடக்கு நோக்கி நடந்தார்.

இவ்வாறு நடந்து வரும்காலத்தில் ஆரணி என்ற இடத்தில் தான் காஞ்சியில் கண்டவர் நினைவுக்கு வர காஞ்சி நோக்கி நடந்தார். ஆனால் சுவாமிகளிடம் உடுத்த உடையேதும் இல்லாது போக பசிவரும் நேரத்தில் உணவிற்காக ஏங்கினார். யாசகம் பெறவோ கையேந்தியோ பழக்கம் இல்லாத செல்வச் செழிப்பில் வாழ்ந்த சுவாமிகளுக்கு பசியும் தாகமும் சேர்ந்தாற் போல் தள்ளாடி நடந்துவரும் போது மேற்கொண்டு நடக்க

இயலாமல் ஒரு தர்ம சத்திரத்தில் இரவு தங்க நேர்ந்தது. அங்கு சுவாமிகளுக்கு உணவு அளிக்க ஒருவன் எதிர்பட்டான்.

அவனேதான் காஞ்சியில் கண்ட பரதேசி உருதாங்கிய ஆள் என்பது சுவாமிகள் அறிந்தார். அங்குதான் அற்புத செயல்புரிய அநேகர் எதிர் நோக்கியும் காண்பதற்கு அறிதானவரும் ஆதிசங்கரருமான அந்த பரதேசி உருதாங்கியவர் யார் என்று யாரும் அறியார். ஏன் சுவாமிகள் கூட அறியவில்லை. அன்றிரவு விடியற்காலை பரதேசி உருதாங்கியவர் சுவாமிகளை எழுப்பி அவரின் பிறப்பின் ரகசியத்தையும் சுவாமியின் முன்பிறப்பை எடுத்துரைத்து சுவாமிகளிடம் உறங்கிக் கிடந்த எண்வகை செயல்களையும் (அட்டமாசித்திகள்) விளக்கி சுவாமிகள் எக்காலத்தில் இல்லறத்திலிருந்து விடுபட வேண்டும் என்றும், இல்லறத்தின் நிலைப்பாட்டை விளக்கியும், சுவாமிகளை ஆசிர்வதித்து மறைந்தார். பின் சுவாமிகள் உறக்க நிலைக்குச் சென்றார். உறக்கம் தெளிந்த சுவாமிகள் தன் சித்தம் தெளிந்து நடந்தவற்றை அசைபோட்டார். பின் ஒரு முடிவுக்கு வந்து, தன் ஊருக்குத் திரும்பினார். அச்சமயம் அவர் பெற்றோர் ஒன்று சேர்ந்து சுவாமிகளை காணாது ஏங்கினர்.

அச்சமயம் அந்த பரதேசி உரு தாங்கியவர், அவர்களின் பெற்றோரிடம் யாசகம் கேட்பது போல் நெருங்கி அவர்கள் துயர் யாது? என்று கேட்க, சுவாமிகளின் திருமணத்தைப் பற்றி கூறினார்கள். அந்த பரதேசி உருதாங்கியவர் சுவாமிகள் வருவார் என்றும் பெற்றோரின் சம்மதத்தின் பேரில் திருமணம் செய்து கொள்வார் என்றும் கூறினார். ஆனால் அப்பரதேசி யின் பேச்சை சுவாமிகளின் பெற்றோர் ஏற்கவில்லை. சிறிது நாள் கழித்து சுவாமிகள் வீடு வந்து சேர்ந்தார். தன் பெற்றோர் கள் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தினார்.

இவ்வாறாக சுவாமிகள் வாழ்ந்து வர தன் கடன்களும், கடமை களும் நினைவுக்கு வர காலத்தை எதிர்நோக்கி காத்திருந்தார். அக்காலமும் கனிந்தது. தன் கடமைகள் பற்றியும் தான் செல்ல வேண்டிய இடத்தைப் பற்றியும் தன் மனைவியிடம் எடுத்துக் கூறி அவர்களுக்கு உண்டான அளவுகளை வகுத்தும், ஒரு

நன்னாளில் தன் இல்லறம் விட்டு வெளியேறினார்.

இவ்வாறாக வெளியேறிய சுவாமிகள் பரதேசியின் நினைவுவர காஞ்சி நோக்கி நடந்தார். காஞ்சி வழியே வரும் வழியில் கடிவாய் பட்ட ஒருவனைக் காப்பாற்ற வழியின்றி புலம்பினார். அச்சமயம் கடிவாய்ப்பட்டவனை கால் தொட்டு "கடியது கடாரம் போக" கட்டளையிட்டார். கடிவாய்ப்பட்டவன் கண் விழிக்க புலம்பியவர்கள் புன்முறுவல் பூக்க சுவாமிகளின் புகழ் ஏணியின் முதல்படி ஆரம்பம் ஆனது. (இது சாத்தியமா? இல்லறம் தாங்கியவன் வார்த்தைக்கு வலிமை உண்டா? என்று அறிஞர்கள் கேட்கலாம்! ஆனால் அவனின் ஒளிவட்டம் ஒன்றாகச் சேருமாயின் ஆணைக்கு அனைத்தும் அடங்கும்!)

அவ்வூரார் சுவாமிகளை வழிப்போக்கன் என்று எண்ணி யார் என்றும் எவ்வூர் என்றும் அன்புடன் வேண்டியதன் பொருட்டு தான் செல்லும் வழி இதுவென்று கூறினாரே அன்றி ஊரை வந்தத் தெரிவிக்கவில்லை. அவ்வூரில் சிலகாலம் தங்கினார். அவ்வூர் பின்னாளில் பெருநகர் என்று பெயர் பெற்று விளங்கியது. அவ்வூரில் தங்கிய சுவாமிகள் தங்கிவரும் காலத்தில் சித்து என்னும் பேரில் அறிவற்ற செயல் செய்து ஒரு மூடன் அநேகம் பேரை ஏமாற்றி, ஏழ்மை நிலை அடையச் செய்தான். அவர்கள் சுவாமிகளிடம் முறையிட, சுவாமிக்கு பரதேசியின் நினைவுவர பரதேசி உரைத்ததும் நினைவுக்கு வந்ததே! (அஷ்டசித்து) அறிவற்றவனின் அகங்காரத்தை அடக்கிட அரிநாமம் பெயர் தாங்கிய ஒருவனை அழைத்து அவன் காதை அறுத்து வரச்சொன்னார்.

காது அறுத்தவன் கலைகளை பல செய்தும் காது அது அறுந்ததே! கலங்கிய காது அறுந்தவன் தன் காதை கேட்க, அறுத்தவன் சுவாமிகளை காட்ட "சுவாமிகள் எதிர்கொண்டவனை நோக்கி 'வழியது வசப்படாது வேதனையில் வாடுபவனே! மூடனே! முடிந்தது உன்கதை' என்றுகூற அவனோ, அவனையறியாமல் சுவாமிகளின் பாதம் பணிந்தான். மூடனை முழுமையானவனாக மாற்றி அவ்வூருக்கு அவனை அடையாளம் காட்டி நற்செயல் புரிய நல்வழிகாட்டி நடந்தார். இவர் வழிதேடி, தேடிய இடமது தெற்கே அல்ல, வடக்கே

என்று வரும் வழியில் மீண்டும் காஞ்சியில் கண்டார் அந்த பரதேசியினை!

அப்பொழுது அந்த பரதேசி உருதாங்கியவர் சங்கரரின் இருப்பிடமான வீடு அதனை அடைந்தார். (இந்நாளில் அதனை சங்கரமடம் என்று அழைக்கப்படுகிறது). அங்கு சுவாமிகள் சிலகாலம் சிவனடியார்க்கு சிவ தொண்டாற்றினார். ஆனாலும் சுவாமிகளின் எண்ணம் வடதுருவம் நோக்கியே பயணப்பட்டது. காலம் தன் கடமை செய்ய, சுவாமிகள் பரதேசியை நினைக்க, பரதேசி பரம்பொருளை, சுவாமிகள் செல்லும் திசையை, தங்குமிடம், இவருக்கு உண்டான செயல்களை வகுத்து ஆசி கூறி வழியனுப்பினார்.

சுவாமிகள் தன் இடம் தேடி புறப்பட்டார். இவ்வாறாக வரும் வழியில் அந்தணர்கள் ஐவர் இவருடன் வழிநடக்க, சுவாமிகளை எங்கு செல்கிறீர் எனறு கேட்க, சுவாமிகள் வடக்குச் செல்கிறேன் என்று கூறினார். அவர்களும் நாங்களும் வடக்கு தான் செல்கிறோம் என்று கூறினர். இவ்வாறாக சிறிது தூரம் வர அருகிலிருக்கும் அப்பனை தரிசித்து செல்லலாம் என்று கூற இவரும் சம்மதித்து குரு உருதாங்கிய அப்பனை (அகரம் தட்சிணாமூர்த்தி கோவில்) தரிசிக்க சென்றனர். அங்கு சுவாமிகளுக்கு சிறு சங்கடம் நேர்ந்தது! இயற்கை உபாதை ஏற்பட்டதின் பொருட்டு அவர்களை முன் செல்லுமாறு கூறி பின் இவர் சென்றார். ஆனால் அங்கு அந்த ஐந்து அந்தணர்களையும் காணாது தேடினார்.

அருகிலிருந்த அன்பர்களிடம் கேட்டதற்கு அவ்வாறு யாரும் வரவில்லையென அவர்கள் கூறினர். அவ்வூரில் சுவாமிகள் தங்க அவர் வழி திசை மாறியது. அவ்வூரில் சிலர் சுவாமிகள் அருகில் அமர்ந்து அவர்களாக திருமாற்பேறு பெற்ற கதையை கூற, அத்தலத்தை தரிசிக்க சுவாமிகள் அவா கொண்டார். பின் அவ்வூர் எங்குள்ளது என்று கேட்க அருகில் ஒரு காத தொலைவு என்றுகூற, வடக்கு செல்ல வேண்டிய சுவாமிகள் மேற்கே பயணப்பட்டார். இவ்வாறாக திருமாற்பேறு ஊரில் சுவாமிகள் ஆண்டிச் கோலத்தையும் அழுக்கு உடையையும் கண்டு ஏளனமாக பேசினர். ஏசினவர் எதிர்பட எவ்வுடையும்

தாங்காமல் தான் அகல, சுவாமிகளின் அம்மணத்தை அநேகர் காண, அநேகரின் ஏளனப் பார்வையும், ஏச்சும் கண்டு சுவாமிகள் அவ்வூருக்கு பாடம் கற்பிக்க அம்மணத்துடன் அப்பனை தரிசிக்க பயணப்பட்டார்.

இவ்வாறாக அவ்வூரை விட்டு வெளியேறிய ஒரு ஜாமம் கழித்து நாற்பது வேளாளர் நாரும் தோளுமாய் நகர் வலம் வந்த அவ்வூரார் காரணமறிந்து சுவாமியை தேடி உபயம் கேட்க, ஏகாந்த பரம்பொருளின் ஏட்டிற்கு போட்டியார் எதிர்வினை புரிந்தவர் புண்ணியம் தான் கழிய பத்தியம் செப்பிடுவேன் என்று கூறி பார்ப்பனர் அல்லாதார் இல்லத்தில் ஒரு நாள் உபவாசம் இருக்கக் கடவது என்று கூறி இவ்வாறு வடக்கு நோக்கி பயணப்பட்ட சுவாமிகள் நெமிலி வரும் நேரம் ஆற்றின் இரு கரையும் இரைச்சலுடன் நீரோட தயங்கினார் சுவாமிகள். அவ்வாறு அக்கரையில் சுவாமிகள் தங்கினார்.

***

இவ்வூரில் தங்கும் சுவாமிகள் தனது நித்திய கடமைகளைச் செய்ய ஒரு நிலையான இடத்தை ஏற்படுத்திக் கொண்டார். இவ்வாறாக ஏற்படுத்திய பின் சுவாமிகள், இவ்வூரில் சிறிதுகாலமும் அருகிலுள்ள ஊரில் சிறிது காலமும் தங்கி வரலானார். சுவாமிகள் தினசரி கடமைகளை செய்தபின் தான் யார் என்பதையும் தான் எங்கிருந்து, எங்கு சென்று வடக்கு நோக்கி செல்ல வேண்டியவன் இவ்வூரில் ஏன் தங்கினேன் என்று நடந்ததை நினைத்ததும் பரதேசி உருதாங்கியவர் சுவாமி களின் நினைவுக்கு வந்தார். அவரை நினைத்து நினைத்து தியானித்த போது அவர் சுவாமிக்கு அசரிரீயாக சுவாமிகளின் கடந்த கால நிகழ்வுகளையும் சுவாமிகள் இவ்வூரில் தங்க வேண்டிய காலத்தின் கணக்கையும் சுவாமிக்கு எடுத்துக்கூறி சுவாமிகள் இவ்வூரில் தான் தங்கவேண்டும் என்று இவரை நாடி இவரின் முன் கணக்கில் செய்யத் தவறியதை சரி செய்து இவ்வூரில் தங்கி இவ்வூரையும் இவ்வூரில் உள்ளோரையும் தன் கணக்கில் கொண்டுவர வேண்டுமென்றும், இவ்வூருக்கு சுவாமிகள் ஆசானாக இருந்து அறவழி தவறுவோரை நல்வழிபடுத்துப் வேண்டுமென்றும், சுவாமிகளுக்கு கட்டளை

யிட்டார். அக்கட்டளைக்கு சுவாமிகள் எதிர்ப்புக் கூறினார்.

எனக்கு கட்டளையிட நீங்கள் யார் என்றும், தான் சிறிது காலமே இங்கு தங்குவேன் என்றும், எனக்கு இதுவல்ல வேலை என்றும் கூறி எதிர் விவாதம் செய்தார். ஆனால் பரதேசி உருதாங்கியவர் தங்களால் செல்ல முடியாது என்றும் முடிந்தால் செல் என்றும் கூறி செல்லமுடியாத சூழ்நிலை ஏற்படும் பொழுது சில ஆண்டு கழித்து நானே நேரில் வருவேன் என்றும் அதுவரை இவ்வூருக்கு நன்மை பயக்குமாறு கூறி சுவாமிகளிடம் தன்னை நாடி வரும் நபர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கூறினார்.

இவ்வாறாக அவ்விருவருக்கும் விவாதம் நடந்தது. அன்றிரவே சுவாமிகள் உறக்க நிலை கொண்டு அப்பனை வேண்ட அவனே இவன் என்று அறிந்தார். பின் சுவாமிகள் மனம் தெளிந்து இவ்வூரில் நிரந்தரமாக தங்க முடிவெடுத்து தங்கினார். அதுநாள் வரை சுவாமிகளை அணுகி தாங்கள் யார் என்றும், எவ்வூர் என்றும், தாங்கள் இவ்வூர் வர யார் காரணம் என்றும் கேட்கும் அன்பர்களுக்கு தான் மேற்கூறிய அன்பரை தவிர மற்றவர்களுக்கு தான் ஒரு பரதேசி என்றும் க்ஷேத்திரம், க்ஷேத்திரமாக செல்கிறேன் என்றும், தன் உண்மை நிலையை மறைத்தும் பொய் கூறாமல் மறைத்தும் மழுப்பலான பதிலையே கூறிவந்தார்.

பொதுவாக ஒருவர் இறைநிலை பற்றி அறிந்து கொள்வதும் தெரிந்து கொள்வதும் எளிது அல்ல. ஒருவர் அறிஞர் ஆவதோ இறைநிலை சிந்தனை இறுதிவரை நெறி தவறாது நடத்தவோ? எளிதல்ல! என்னவென்றால் ஒருவருக்கு முன் பிறப்பின் நன்மை தீமையை வகுத்து இப்பிறவி வகுக்கப்படுகிறது. இப்பிறவியில் தனவான் ஆவதையோ, நாத்திகள் ஆவதையோ வகுக்கப்படுகிறது. ஆனால் இவறைப் பற்றியும் இறை சிந்தனை பற்றியும் சாமான்யமானவர்கள் அறியும்படியும், அவர்களுக்கு இறையொன்று உள்ளதா? உள்ளதென்றால் அதை அறியும் வழியையும், அதை அடைவது எவ்வாறு என்றும் தெரிவிப் பதற்கு முற்பிறப்பில் ஒருவரது உயிரானது இறையிடம் இருந்தால் மட்டுமே இறை பற்றியும் இவ்வுலகில் இப்பிறப்பில்

ஒருவருக்கு அமையப் பெறும். இவ்வாறாக சுவாமிகள் இந்நிலை அடைய இப்பிறப்பிற்கு முன் பிறப்பு அதற்கு முன் பிறப்பும் ஆதாரமாக அவனடிபற்றி வந்தது.

சுவாமிகள் இப்பிறப்பிற்கு முன் இறைநிலை அடைய முயன்றார். ஆனால் சுவாமிகள் தன்னுடைய சம்பாத்தியத்தை (சித்து என்பார்கள்) மாய்மால வித்தைகளால் அனேகர்களை மகிழ்வித்ததின் பேரில் இறைவா நிலையுடன் பேரின்ப நிலையும் அடைய முடியாமல் போக நேர்ந்தது. அதனாலேயே சுவாமிகள் இப்பிறவியின் இறுதி நிலையாக இருக்க வேண்டுமென்றும் தனக்கு அந்நிலை அடைய ஒரு இடம் வேண்டுமென்றும், அது இப்புவியில் எங்கு என்றும் கையேந்த் சுவாமிகளுக்கு சூட்சுமத்தை இறை விளக்காமல் சுவாமிகளுக்கு இப்பிறப்பில் இறைவா நிலை கொண்டும் பேரின்ப நிலையுடன் ஆக்கும் நிலையும் அளிப்போம் என்றும் அறிவித்தது.

ஆனால் எங்கு எப்போது என்றும் கூறாமல் இப்பிறவியில் சுவாமிகளின் கணக்கை வகுத்து இந்நிலையடைய முடியுமா? முடியாதா? என்று இறை இவரின் கணக்கை கூறாமல் சூட்சுமமாக வைத்தது. ஆனால் சுவாமிகள் இவ்வூரில் வந்து தங்கிய பின் தன்னுடைய சூழ்ச்சும கணக்கை அறிய வேண்டிய காலம் வந்தது. அதனாலேயே சுவாமிகள் தமக்கென்றும் தன்னுடைய அடியவரென்றும் கூறி திரிபவர்க்கும் எவ்வித இருப்பும் (பொருள்) இல்லாமல் இறுதி நிலை அடைய மன வைராக்கியத் துடன், சதா தன் நிலைப்பாட்டை இறைமீது செலுத்தி தனக்கு வேண்டியதைத் தர தாங்களே பொறுப்பு என்று கூறி தன்னை தனக்கு முன்னோரிடம் தலைவணங்கி வேண்டியதின் பொருட்டு சுவாமிகளுக்கு முன், இந்நிலையடைந்தோர் ஒன்றுகூடி நாளொரு விதம் சுவாமிகள் வேண்டுவதையும், வேண்டும் பொழுது பொதுவானவர்களிடமிருந்து செயல்படத் தொடங்கினர்.

இக்காலம் வரை சுவாமிகள் இவ்வூர் வந்து சேர்ந்து (கறியாக்குடல்) மூன்று ஆண்டு காலம் நிறைவுற்றது. அக்காலம் வரை தன்னை ஆதாரப்படுத்திக் கொள்ளவே சுவாமிகளுக்கு காலம் சரியானது. இவ்வாறாக சுவாமிகள்

தன்முன் கணக்கையும் தானே வகுத்துப் பார்த்து தன் கணக்கு சரிபார்த்தார். தன் கணக்கில் தடையேதும் இல்லாமல் போக அடுத்தவர் கணக்கை கூட்டிக் கழிக்க காலம் மீதம் இருக்க முன் கூறியது போல் தன் முன்னோடிகளின் சந்ததிகளை வழி நடத்த நல் வழிபடுத்தத்தான் தயாரானார். அது நாள்வரை சுவாமிகள் அங்கு செல்வதும், அவரைப் பார்ப்பதும், இங்கு வருவதும், இவரைப் பார்ப்பதும், வழி கண்டோரை வழிபடுவதுமாக தன் காலத்தை கனகச்சிதமாகவும், கண்ணியத்துடனும் வழி நடத்தினார். இக்காலகட்டத்தில் சுவாமிகளுக்கு இவ்வூரில் உள்ளோர் அனேகர் சுவாமிகளின் அன்பிற்கும் அடைக்கலத் திற்கும் ஆளாகினர். அதனால் சுவாமிகள் எது கேட்டதும் கொடுக்க எண்ணுவர். ஆனால் சுவாமிகள் காலம் வரும் பொழுது, தான் தங்களிடம் வேண்டியதை கேட்டு பெறுவேன் என்றும் அதுவரை தன்னை தொந்தரவு செய்யாதீர் என்றும் அன்புடன் கடிந்து கொண்டார்.

தன் பிறப்பின் ரகசியத்தையும் தான் இவ்வூரில் ஏன் தங்கினேன் என்றும், தன் கதையை தரணியில் உள்ளோர் அறிந்து அவரவர் மனம் பேசும் மகிழ்ச்சியுடன் இப்புவியில் உள்ள அனைத்து சுகங்களையும் அனுபவித்து இறைத்தொண்டு செய்வதற்கு இக்கதையை நாம் அறிவதுடன் சுவாமிகள் இந்நிலை அடைய எவ்வாறு கடினப்பாதைகளை கடந்து வந்துள்ளார் என்பதை வாசிப்பவரும், வாசித்ததை கேட்பவரும் பெரு மகிழ்ச்சியுடன் சுவாமிகளின் வாழ்க்கை பாதை பற்றி அறிகிறோம்!

இப்பிறவில் பல்வேறு நன்மைகள் கிடைக்கப் பெறுவீர். இப்போது நீங்கள் வாசித்து ஓரளவிற்கேனும் உங்களுக்கு புரிய வந்திருக்கும் என நம்புகிறேன்... இல்லையேல் அரக்கோணத் திற்கு அடுத்த நெமிலி எனும் நகரத்திற்கு அருகே இருக்கும் கறியாக்குடல் கிரமத்திலிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அருணாச்சலத் சித்தரின் ஜீவசமாதியை தரிசித்து விளக்கம் கேளுங்கள். உங்களுக்கும் சூட்சுமமாக தன்னை உணர வைப்பார் அப்புனித மகான்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 7

# ஸ்ரீலஸ்ரீ சதானந்த சித்தர்

'தியானம் வளர்ந்தால் யோகமாகும்
யோகம் வளர்ந்தால் தவமாகும்
தவம் வளர்ந்தால் இறையாகும்'
என்றார்கள் சித்தர்கள்.

மனிதனின் புலன்களால் இயங்கும் வெளி மனதில் ஏற்படுவதுதான் தியானம். உள் மனதில் அல்லது ஆழ்மனதில் ஏற்படுவதுதான் யோகம். உயிரில் ஏற்படுவதுதான் தவம். இது சித்தர்களின் தத்துவம்.

காற்று, நீர், நெருப்பு, ஆகாயம், பூமி எனும் பஞ்ச பூதங்களால் ஆன தூல தேகமானது இறுதியில் உயிர் பிரிந்த

பின்பு பஞ்ச பூதங்களோடு கலந்துவிடுவதால் அது அழியும் அனித்திய தேகமாகும். ஈசனின் பாகமான சூட்சும தேகம் அழிவற்றது. ஆகையால் அது நித்திய தேகமாகும். இந்த இரண்டு எதிர்மாறான தேகங்களைக் கொண்ட மனிதன் அவற்றுக்கான கடமைகளைச் சரிவர செய்யத் தவறினால் இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல. அடுத்துவரும் பிறவிகளும் அவனுக்கு நீசப் பிறவிகளாகவே அமைந்து பிறவிப்பயன் அடையாமல் பிறவிகளை வீணாக்கிச் சென்றுவிடுவான் என்கிறது சித்தர்கள் நூல்.

அதனால் பரமாத்மா உறையும் உடலை ஒரு கோயிலாக நினைத்து பரிசுத்தமாக வைத்துக்கொண்டு பஞ்சபூதங்களின் சக்திகளை உடலில் ஒழுங்குபடுத்தினால் அதற்குள்ளே உறையும் தெய்வத்தின் சக்திகள் வளரும் சூழ்நிலை அமையும். அந்த நிலைகளைத்தான் ஆத்மயோகம் உருவாக்கித் தரும்.

சித்தர்கள் ஆத்ம யோகத்தை மூன்று வகையாக அறிந்தார்கள்.

1. 'குண்டலினி சித்தி யோகம்' இது நெற்றிக்கண்ணைத் திறந்து செயல்பட வைக்கும் யோகமாகும்.

2. 'வான சித்தி யோகம்' இது கபால வாயிலைத் திறந்து சர்வேஸ்வரனின் சர்வ சக்திகளை உடலில், உள்ளத்தில் மற்றும் உயிரில் ஏற்றுக்கொள்ளும் யோகமாகும்.

3. 'பிரம்ம சித்தி யோகம்' இது உடலில் இருந்து உயிரை தனியே பிரித்து இயங்கச் செய்யும் யோகமாகும்.

இதில் குண்டலினி சித்தி யோகம் என்பது இரண்டு புருவங் களுக்கு மத்தியில் கபாலத்திற்குள் அமைந்திருக்கும் அகக் கண், ஞானக் கண், அமுதசுரபி என்று அழைக்கப்படுகிற நெற்றிக் கண்ணைத் திறக்கும் சித்தி யோகமாகும். இதற்கு உடலிலுள்ள எல்லா முறுக்குகளையும் அழுக்குகளையும் அகற்றி, உடலை முழுமையாக தளர்வுநிலைக்குக் கொண்டுவந்து பிரணவ மந்திரத்தால் உடலில் இருந்து உயிரை தனியே அசையச் செய்து உடல் உறுப்புகளின் ஒவ்வொரு அணுவிலும் செயல் பட்டுக் கொண்டிருக்கும் உயிர்ச்சக்தியைப் பிரித்து ஒன்று

திரட்டி நெற்றிக்கண்ணில் கொண்டுவந்து குவித்து குலுக்க வேண்டும். இதுதான் குண்டலினி. குண்டலினியானது எவ்வளவுக்கு எவ்வளவு குறுகுகிறதோ அவ்வளவு சக்தியானது பெருகிக்கொண்டே இருக்கும். இந்த யோகத்தின் மூலம் குண்டலினி காந்த சக்தியாக உருமாறி பிரபஞ்சத்தில் நிறைந்திருக்கும் இறை சக்தியை ஈர்த்து ஆத்மாவோடு சேர்த்து அதை வேகமாக வளரச் செய்யும். இந்த குண்டலினி யோக சக்தியைப் பழகினால் மனிதனுக்குள்ளே இருக்கிற கோபம், விரோதம், பயம், பேராசை போன்ற தீய குணங்கள் மறைந்து, அமைதி, கருணை, அருள், தர்மம், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் மனநிலையும், எப்போதும் உற்சாகமான, சாந்தமான, சந்தோஷமான மனநிலை உருவாகும்' என்கிறார்கள் சித்தர்கள்.

அடுத்து வான சித்தி யோகம் என்பது கபால வாயிலைத் திறந்து அதன் வழியாக பஞ்சமா பூதங்களில் ஒன்றான ஆகாய சக்தியை உடலில், உள்ளத்தில், உயிரில் ஏற்றுக்கொண்டு வளர்ச்சி பெறும் நிலையாகும். இந்த யோகத்தால் ஜீவாத்மா வழியாக பரமாத்மாவை உணரும் பேற்றைப் பெறலாம். ஜீவாத்மா தூண்டப்படுவதாலும், சக்தியுடையதாக மாறுவதாலும், ஜீவாத்மாவில் இருக்கும் மற்ற சக்திகளையும் சித்தியாக வெளிப்படுத்தும் யோகம்தான் வான சித்தி யோகம். இதுதான் சித்தர்கள் தத்துவம்.

அடுத்து பிரம்ம சித்தி யோகம் என்பது மிகுந்த மன திடமுள்ள, தூய்மையான எண்ணங்களுடைய மனிதர்களால் மட்டுமே செய்ய முடிந்த யோகமாகும். இந்த யோகம் என்பது தூல உடலிலிருந்து சூட்சும உடலை தனியே பிரித்தெடுக்கும் யோகமாகும். அதாவது அனித்தியமான உடலிலிருந்து நித்தயமான உயிரைப் பிரித்து அவ்வுயிரை தனியே செயல்பட வைக்கும் யோகமாகும். இந்த யோகத்தின் மூலமாகத்தான் 'கூடுவிட்டு கூடு பாய்தல்' என்கிற சித்தியை நிகழ்த்தினார்கள் சித்தர்கள். பொதுவாக மனிதனின் உடலில் இருந்து செயல்படும்போது ஆறு புலன்களின் சக்தியாக மட்டுமே செயல்படும் உயிருக்கு, எண்ணிலடங்கா புலன்களின் சக்தியாகச்

செயல்படும் வல்லமை இருக்கிறது. அவ்வுயிரை தனித்து இயக்கும்போதுதான் அந்த சக்திகளின் வல்லமை வெளிப்படும். முதலில் நிமிடக்கணக்கில் உயிரை உடலிலிருந்து பிரித்துச் செயல்பட வைக்கும் சித்தர்கள், யோகத்தன்மையில் சக்தி வளர வளர, பல நாட்கள், மாதங்கள் கணக்கில்கூட உடலிலிருந்து உயிரை தனியே பிரித்தெடுத்துவிட்டு மீண்டும் தனது உடலோடு உயிரை இணைத்துக்கொள்வார்கள். இந்த யோகத்தின் மூலமாக பல்வேறு சித்துக்களையும் பல உயிர்களுக்கு நன்மைகளையும் அளித்து ஆச்சர்யமூட்டியிருக்கிறார்கள் சித்தர்கள்.

இப்போது நாம் அறியப்போகிற சதானந்தர் சித்தரும் இந்த யோகத்தில் மிகவும் வல்லமை பெற்றவராகத் திகழ்ந்தார். மதுரை மாநகரில் பிறந்து வளர்ந்து அங்கே ஏகப்பட்ட சித்தாடல்களையும் அமானுஷ்யங்களையும் நிகழ்த்திய சதானந்தச் சித்தர் சென்ற நூற்றாண்டில் நம்முடன் வாழ்ந்தவர். இப்போதும் அருள்வடிவாய் ஆன்ம உடலோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்.

மதுரையில் திருமலை நாயக்கர் மஹாலுக்கு அருகே பால்மால் குறுக்குத் தெருவில் 9.1.1843ம் வருடம் ரங்கார்யர்-லட்சுமிபாய் என்கிற புனிதத் தம்பதியருக்கு மகனாக அவதரித்தார் சதானந்தர். பெற்றோர்கள் இவருக்கு இட்ட பெயர் ராமபத்ரன். சாதாரண நெசவுத் தொழிலாளியின் மகனாகப் பிறந்த இவர், மிகச் சிறந்த வேத விற்பன்னரின் மகன் போன்று, கேட்கும் ஒவ்வொரு ஆன்மிகக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியாமல் பள்ளிக்கூட ஆசிரியர்கள் திணறினார்கள். இது சாதாரண பிள்ளையல்ல, தெய்வப்பிள்ளை என்று நெகிழ்ந்தார்கள். அப்போது குடும்பம் மிகவும் ஏழ்மையான நிலையிலிருந்ததால் பத்தாவது வயதிலேயே அவரது பள்ளிப்பாடம் நிறுத்தப்பட்டு, கடையில் கணக்கெழுதும் வேலைக்கு அனுப்பினார் அவர் தந்தை. அங்கேயும் அவரது ஆன்மிகத் தேடலுக்கும் ஆன்மிகக் கேள்விகளுக்கும் விடை கிடைக்காமல் போக, தனது அப்பாவோடு நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். அதிலும் மனம் ஈடுபடாததால், தனது பதினாறாவது வயதில் வீட்டாரிடம் சொல்லாமல் திடீரென புறப்பட்டவர் நேரே

திருப்பரங்குன்றம் சென்று அங்குள்ள குகையில் யோக சாதன நிஷ்டையில் அமர்ந்தார். தனது மகனைக் காணாது தவித்த அவரது பெற்றோர்கள் திருப்பரங்குன்றத்தில் அவர் யோக சாதன நிஷ்டையில் அமர்ந்திருப்பதை அறிந்து அவரை அணுகி, வீட்டுக்கு வரும்படி அழைத்தனர். அப்போது அவர் அம்மாவிடம் ஒரு வேண்டுகோள் விடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்றார்.

வீட்டில் எல்லோரும் அவர் திரும்பிவந்த சந்தோஷத்தில் இருக்க, அவர் தனது அம்மாவிடம் தான் கேட்ட வேண்டுகோளை நிறைவேற்றும்படி கேட்டார். உடனே அவர் தாய், கண்களில் ஆனந்தக் கண்ணீரோடு ஆதி சங்கரருக்கு அவரது தாயே சந்நியாசம் அளித்தது போன்று, தனது மகன் ராமபத்ரனுக்கு திருவோடு அளித்து சந்நியாசம் தர, தாயின் காலில் பணிந்துவிட்டு திவ்ய தேச யாத்திரையை அந்த நிமிடமே துவக்கிவிட்டார் ராம பத்ரர். இந்தியா முழுவதுமுள்ள ஆலயங்களைத் தரிசித்துவிட்டு மதுரை திரும்பிய அவர், திருப்பரங்குன்றம் குகாஸ்ரமத்தில் 12 வருடங்கள் தவம் புரிந்தார். அடுத்து முருகப்பெருமான் தனது கனவில் வந்து உணர்த்தியது போன்று பரமக்குடி சென்று அங்கு நாகலிங்க அடிகளார் எனும் மகானைச் சந்தித்து அவரது சீடரானார். நாகலிங்க அடிகளார் சித்துக்களிலும் யோகத்திலும் வல்லமை பெற்றவர். அவர் ராம பத்ரருக்கு தனது யோக மந்திரங்களையும் அமானுஷ்ய சித்தாடல்களையும் பயிற்றுவித்து சதானந்த சித்தராக உருமாற்றினார்.

சதானந்த சித்தர் மதுரை மண்ணிலும், ராமநாதபுரம், சிவகங்கையிலும் செய்த அமானுஷ்யங்கள் ஏராளமானவை. தீராத வியாதியஸ்தர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களை ஆச்சர்யமூட்டும் விதத்தில் குணப்படுத்தி நல்வாழ்வு அளித்தார். மதுரை, ராமநாதபுரம், சிவகங்கைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தினந்தோறும் நூற்றுக்கணக்கில் சித்தரைத் தேடிவந்து தங்கள் பிரச்னைகளைச் சொல்லி நலம்பெற்றுச் சென்றிருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் மட்டுமல்ல. ராமநாதபுரம், சிவகங்கை மன்னர்கள்கூட சித்தரின் யோக வலிமையைக் கண்டு அவரை

வணங்கி ஆசி பெறுவார்கள்.

சித்தரின் சித்தாடல்களையும் அமானுஷ்ய சக்தியைப் பற்றியும் சொல்வதென்றால் அதற்கு ஒருசில பக்கங்கள் போதாது. உதாரணத்திற்கு அவர் செய்த சித்தாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

'சித்தரின் அமானுஷ்ய சக்தியை உலகிற்குச் சொல்லவிரும்பிய சிவகங்கை மன்னர், பூமிக்கடியில் ஒரு சமாதி அறையைக் கட்டினார். சிவகங்கை மக்கள் நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் அந்தச் சமாதிக்குள் சதானந்த சித்தர் புகுந்து அமர்ந்துகொண்டார். உடனே அந்தச் சமாதி அறையை செங்கற்களால் அடைத்து கட்டிடம் எழுப்பினார்கள். நாற்பத்து ஐந்து நாட்களுக்குப் பிறகு இந்தச் சமாதி திறக்கப்படும். அதுவரை சித்தர் சமாதியில் இருப்பார் என்ற மன்னர், சமாதியைச் சுற்றிலும் காவலுக்கு காவலாளிகளை நியமித்தார்.

ஊர் மக்களும் மன்னரும் வியப்போடு அந்தச் சமாதியை விட்டு நகர்ந்தனர். மறுநாளிலிருந்து ஊரெங்கும் இதைப் பற்றி பேச்சு இருந்தது. ஒரு சிலர் சித்தர் உள்ளேயே சமாதியாகி இருப்பார் என்றும், ஒரு சிலர் அவர் மாயமாக மறைந்து வேறு இடத்தில் இருப்பார் என்றும் பேசத் துவங்கினர்.

நாற்பது நாட்களுக்குப் பிறகு சமாதியின் மேற்புறத்தில் ஒரு வெடிப்பு ஏற்பட, காவலாளிகள் மன்னரிடம் விஷயத்தைச் சொன்னார்கள். உடனே மன்னரும் ஊர் மக்களும் பதற்றத்துடன் சமாதி அருகே வந்தனர். அச்சமயம் கூட்டத்திலிருந்த ஒருவர், 'என்ன விஷயம்? இது யாருடைய சமாதி?' என்று கேட்க, எல்லாரும் சதானந்த சித்தருடைய சமாதி என்று சொல்ல, திகைப்படைந்த அந்த நபர், 'நேற்றுதான் அவரை மதுரையில் பார்த்தேன். நீங்கள் சமாதிக்குள் இருப்பதாகச் சொல்கிறீர்களே!' என்று சொல்ல, எல்லோரும் ஆச்சர்யமாக மதுரைக்குச் சென்றனர். அங்கே சிரித்த முகமாக அவர்களை வரவேற்ற சித்தர், 'என்ன! என்னை சமாதியில் அடைச்சிடலாம்னு பார்த்தீங்களா? எனக்கு இங்கே நிறைய வேலைகள் இருக்கிறது. உங்களுக்காக நான் வாழ வேணாமா? போங்கள். நிம்மதியாக இருங்க. நான் உங்களுடனே இருப்பேன்' என்று சித்தர்

சொல்ல, எல்லோரும் அவரை சிவகங்கைக்கு அழைத்தனர். அதற்கு மறுப்பு தெரிவித்த சித்தர், 'நான் அங்குதான் இருக்கேன். இங்கே வந்து என்னைக் கூப்பிட்டால் எப்படி?' என்றவர் அங்கிருந்து வேகமாக நகர ஆரம்பித்தார். மன்னரும் மற்றவர்களும் திகைப்பாக சிவகங்கை திரும்பினர். சரியாக, நாற்பத்து ஐந்தாவது நாள் சமாதி திறக்கப்பட, உள்ளே சிரித்த முகமாக சதானந்த சித்தர் அமர்ந்திருக்க, அத்தனை முகங்களும் ஆச்சரியத்தில் விரிந்தது. தூங்கி எழுவதுபோல் எழுந்த சித்தர், மன்னருக்கும் ஊர் மக்களுக்கும் அருளாசி வழங்கினார்.

சமாதிக்குள் இருந்தவர் எப்படி மதுரைக்குப் போனார்? மதுரையில் இருந்தவர் எப்படி சமாதிக்குள் வந்தார்? அதிலும் காற்றுப் புகமுடியாத அறைக்குள், இருளில் நாற்பத்து ஐந்து நாட்கள் எப்படி இருந்தார்? இது சாதாரண மனிதரால் செய்யமுடிகிற காரியமா? இவர் மனிதரல்ல, மகா சித்தர் என்று உணர்ந்த மக்கள், அவரை உளமார தொழ ஆரம்பித்தனர்.

இதேபோல் மற்றொரு சம்பவம். இவர் ஒருமுறை சாத்தூரில் நடந்துசென்றுகொண்டிருந்தபோது வழியில் சிலர் வழிப்பறி திருடர்களிடம் நகை பணங்களை பறிகொடுத்ததைச் சொல்லி, அவர்களுக்கு சரியான பாடம் புகட்டும்படி கேட்டுக் கொண்டனர். அதன்படி கழுத்து நிறைய நகை அணிந்த ஒரு குடும்பத்தாருடன் சித்தர் அவ்வழியாகச் சென்றார். சித்தர் தங்களை எப்படியும் காப்பாற்றுவார் என்கிற நம்பிக்கையில் அந்தக் குடும்பத்தினர் அவருடன் சென்றனர். வழியில் மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியில், திடீரென பத்துக்கும் மேற்பட்ட வழிப்பறித் திருடர்கள் அவர்களை வழிமறித்தனர். அந்தக் குடும்பத்தாரிடம் கழுத்தில் அணிந்திருக்கும் நகைகளை கழற்றித் தரும்படி மிரட்டினர். உடனே சித்தர் அவர்களைப் பார்த்து, 'உங்களுக்கு பளபளக்கும் இந்த நகைகள் மீதுதானே ஆசை. எங்கே நீங்களே இந்த நகைகளை எடுத்துக்கொள்ளுங்கள்' என்றவாறு அவர்களின் கழுத்திலிருந்த மொத்த நகைகளையும் ஒரு துணியில் சேகரித்து அந்த வழிப்பறி திருடர்கள்முன்னே நீட்டினார். அதைப் பிடுங்கும்விதமாக முன்னே வந்த திருடர்கள், நகைமீது கை வைக்க முனைந்த நொடியில், 'பளீர்' என மின்னல்

வெட்டியது போல் உணர்ந்து கண்களைக் கசக்க, அடுத்த நொடி உலகமே இருளில் மூழ்கியது. அவர்கள் அத்தனை பேர் கண்களும் இருண்டு போனது. நொடியில் பார்வை பறிபோன விபரீதம் உணர்ந்த அவர்கள், 'ஐயா! எங்களை மன்னிச்சுடுங்க. இனிமே வழிப்பறி செய்ய மாட்டோம். நேர்மையான முறையில் உழைச்சு வாழறோம். நீங்க எங்க தெய்வம். நீங்கதான் எங்களுக்கு கண் பார்வை தரணும்' என்று சித்தரின் பாதத்தில் வீழ்ந்து கதற ஆரம்பித்தனர்.

உடனே சித்தர் தனது கையிலிருந்த நகைகளை அந்தக் குடும்பத்தாரிடம் கொடுத்து அணிந்துகொள்ளும்படி சொல்லிவிட்டு, அந்த வழிப்பறி திருடர்களைப் பார்த்துச் சொன்னார்:

'சரி, எழுந்திருங்கள். உங்கள் கண்களை இரு கைகளால் இறுக மூடி ஒரு நொடிக்குப் பிறகு திறங்கள்' என்று சொல்ல, அவர்களும் அவ்வாறே செய்தனர். என்ன ஆச்சரியம்! இப்போது எதிரே நிற்கும் சித்தர் ஜோதியாக அவர்களுக்கு காட்சியளித்தார்.

'ஐயா! எங்க கண்ணைத் திறந்துட்டீங்க. இனி நாங்க நல்ல மனிதர்களாக வாழ்வோம்' என்று சொல்லிவிட்டு நகர்ந்தனர். நடந்ததை திகைப்பாகப் பார்த்துக்கொண்டிருந்த அந்தக் குடும்பத்தினர் சித்தரை நோக்கி கரம் குவிக்க, அவர் புன்னகையோடு அங்கிருந்து நகர ஆரம்பித்தார்.

இந்தச் சம்பவம் மட்டுமல்ல. மற்றொரு ஆச்சரியமூட்டும் சம்பவத்தையும் சித்தர் நிகழ்த்தியிருக்கிறார். ஒரு முறை மதுரையில் மிகுந்த களைப்பாக உணர்ந்த சித்தர் ஒரு தோப்பில் உறங்கிக்கொண்டிருக்க, அவரிடம் ஆசி வாங்கும்விதமாக அவரை நெருங்கிய பக்தர்கள் தூங்குபவர் எழுந்துகொள்ளட்டும் எனக் காத்திருந்தார்கள். அப்போது சித்தரின் முகத்துக்கு நேரே சுரீர் என வெயில் அடிக்க, திடீரென அங்கே ஒரு நாகம் தோன்றி அவர் முகத்துக்கு அருகே வந்து படமெடுத்த நிலையில் அவர் முகத்தின்மீது வெயில் விழாமல் நிழல் படும்விதமாக நிற்க, அதைக்கண்டு சுற்றிலும் இருந்தவர்கள் ஆச்சர்யத்தின் உச்சிக்குச்

சென்றார்கள்.

இதெல்லாம் நிஜமா, நடந்திருக்குமா என்று நீங்கள் யோசிக்கிறீர்களா? இவை அத்தனையும் நடந்த நிஜம், உண்மை.

அன்று சதானந்த சித்தராக பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தியவர், பின்னாளில் வைஷ்ணவ சிரேஷ்டர் வடபத்ராார்ய அரையர் சுவாமிகளிடம் நாம தீட்சை பெற்று ஸ்ரீராமானுஜரின் விசிஷ்டாத்வைதம், கீதா பாஷ்யம், பிரம்ம சூத்திர பாஷ்யம், ஸ்ரீமத் பகவத்கீதை, விஷ்ணு புராணம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலியவற்றைக் கற்றறிந்து 'ஸ்ரீமந் நடனகோபால நாயகி' என போற்றப்பட்டார்.

சித்தர்கள் உலக நன்மைக்காக மட்டுமே வாழ்பவர்கள் என்பதால், தனது ஆயுட்காலம் முழுதும் மற்றவர்களின் துயர் தீர்ப்பதற்காக இப்பூவுலகில் அருள்பாலித்துக்கொண்டிருந்த சித்தர், தான் முக்தி அடையப்போவதை உணர்ந்து, தனது பக்தர்களிடம் அழகர் கோயில் ரோட்டில் காதக்கிணறு என்னுமிடத்தில் தமது பிருந்தாவனத்தை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். சித்தர் தெரிவித்தபடி 1914ம் வருடம் ஜனவரி 8ம் தேதி, மார்கழித் திங்கள் வைகுண்ட முக்கோடி ஏகாதசியன்று, குரு வாரத்தில், கார்த்திகை நட்சத்திரத்தன்று தமது பூவுடலை விலக்கி ஆன்ம உடலோடு ஐக்கியமானார்.

இப்போதும் அந்த மகா சித்தர், அவர் விரும்பிய பிருந்தாவனத்துள் ஆன்ம உடலோடு தன்னை நாடிவரும் பக்தர்களின் குறை நீக்கி, நோய்களை விலக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

நீங்களும் மதுரை அழகர் கோயில் ரோட்டிலிருக்கும் காதக்கிணறு எனும் இடத்திலிருக்கும் அவரது சமாதிக்குச் சென்று அவரை வழிபடுங்கள். உங்களுக்கும் எல்லா நலமும் தந்தருள்வார் அந்த மகா சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 8

# ஸ்ரீலஸ்ரீ நாகநாத சித்தர்

'தியானம்' சித்தர்கள் கண்டறிந்து கூறிய பொக்கிஷம். சித்தர்கள் பொதுவாக மனதைச் செம்மைப்படுத்த வேண்டும். பயத்தை விட்டொழிக்க வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தினார்கள். இதற்காக, மனதை புத்துணர்ச்சியூட்டவும் சந்தோஷமாக மாற்றவும் தியானத்தை வலியுறுத்தினார்கள். தியானம் செய்வதென்றால் முதலில் மனதிலுள்ள குப்பைகளை வெளியே தூக்கி எறியவேண்டும். அடுத்து கடந்துபோன காலத்தையும் எதிர்காலத்தையும் யோசிக்காமல் நிகழ்காலத்தில் வாழப் பழகவேண்டும்.

நம் எண்ணத்தின் வேகம் என்பது ஒளியைவிட வேகம் அதிகமானது. ஒரே இடத்தில் அதைக் கட்டுப்படுத்துவது முடியாத காரியம். எப்போது மனம் கிணற்றில் இருக்கும்

தண்ணீரைப் போன்று உள்ளுக்குள்ளேயே நிகழ்காலத்தில் நிலைக்கிறதோ அப்போதுதான் தியானம் என்பது உங்களுக்கும் பழக்கப்படும்.

மனம் என்பது கடந்து போனவைகளால் ஆனது. அந்த மனதை எதிர்காலத்திற்குத் தாவவிடாமல் நிகழ்காலத்திற்கு நாம் பழக்கப்படுத்த ஆரம்பித்தால், உடலும் உள்ளமும் அமைதியில் திளைக்கும் என்றார்கள் சித்தர்கள்.

நம் உடலில் எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் ஓடுகின்றன. அதில் ஏழு சக்தி மையங்கள் இருக்கின்றன.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் என்கிற இந்த ஏழு சக்தி மையங்களும் தியானத்தினால் வலுவூட்டப்படுகிறது. இதனால் சுப்ரா ரீனஸ், கொனாட், அட்ரீனல், தைமாஸ், தைராய்டு, பிட்யூட்டரி, பீனியல் என்கிற நாளமில்லாச் சுரப்பிகள் தூண்டப்பட்டு சிறுநீரகங்கள், தண்டுவடம், குண்டலினி மையம், இனப்பெருக்க சக்தி, செரிவு மண்டலம், இதயம், ஈரல், நுரையீரல், இரத்த மண்டலம், தொண்டை, கழுத்து, பெருமூளை, நரம்பு மண்டலம், கண்கள், ஆன்ம சக்தி என உடல் முழுதும் பலப்படுகிறது, ஆரோக்கியமாகிறது

தியானம் எப்படிச் செய்வது? என்கிற கேள்வி உங்களுக்குள் எழுமானால் கீழே குறிப்பிடுவதை ஆழமாக வாசித்து அறியுங்கள்.

தியானம் செய்வதற்கு தனியாக ஒரு இடம் வேண்டும். அது உங்கள் வீட்டின் தனி அறையாக இருக்க வேண்டும். அங்கே அதிக நடமாட்டம், சப்தம், வெளிச்சம் இல்லாமல் நல்ல காற்றோட்டமான அறையாக இருக்கவேண்டும்.

தியானத்திற்கு அதிகாலை நேரம் மிகவும் உகந்தது. காலை சூரிய உதயத்திற்கு முன்பாக பிரம்ம முகூர்த்த நேரத்தைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் ஆடைகள் இறுக்கமில்லாமல் மென்மையாக, தளர்வாக உட்காருங்கள். அடுத்து நிமிர்ந்து உட்காருங்கள். உங்களுடைய கை விரல்களில் கட்டை விரலின் நுனியும், அதற்கடுத்த ஆள்காட்டி விரலின் நுனியும் ஒன்றை

யொன்று லேசாகத் தொட்டபடி வைத்துக்கொள்ளுங்கள்.

அப்படியில்லையெனில், உங்கள் இரண்டு கைகளையும் உங்கள் வயிற்றின் தொப்புளுக்கு ஒரு அங்குலம் கீழே இடது கையின்மீது வலது கையை வயிற்றில் ஒட்டியபடி வைத்துக்கொள்ளுங்கள்.

இப்போது உங்கள் மூச்சுக்காற்றை நன்றாக ஆழமாக மெதுவாக இழுத்துவிடுங்கள். உங்கள் எண்ணமெல்லாம் இப்போது நீங்கள் மூச்சுக்காற்றை உள்ளிழுப்பதில் மட்டுமே இருக்கவேண்டும். ஒன்று, இரண்டு, மூன்று என மூச்சுக்காற்றை உடம்புக்குள் செல்வதை மட்டுமே நினையுங்கள். அதை மட்டுமே உணருங்கள். இடையில் உங்கள் எண்ணத்தை எங்கும் அலைபாய விடாதீர்கள். திடீரென ஏதாவது எண்ணம் குறுக்கிட்டாலும் அதை மெல்ல தவிர்த்துவிட்டு, மீண்டும் உங்கள் மூச்சுக்காற்றில் எண்ணத்தைத் திருப்புங்கள். ஒரு நாளைக்கு குறைந்தது இருபது நிமிடமாவது பழக ஆரம்பியுங்கள். உங்கள் மனம் லேசாகும், ஆனந்தமாகும், உற்சாகமாகும்.

இந்த தியானமுறை உங்களுக்கு பழக்கத்திற்கு வந்ததும், அடுத்து நீங்கள் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றோடு 'ஓம்' என்கிற மந்திர ஒலியை நினைவூட்டிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு முறை மூச்சு இழுக்கும்போதும் 'ஓம் ஓம்' என்கிற சொல் மட்டுமே நினைவில் நிற்கட்டும். பழகப் பழக உங்கள் அடிவயிற்றிலிருந்து அந்த ஒலி மெலிதாகக் கிளம்பும். அதனால் உங்கள் உடல் முழுதும் ஒரு ஆனந்தமான அதிர்வலை பரவும். முடிவில் அந்த ஒலி எல்லாம் நின்று ஆழ்ந்த அமைதியான, நினைவுகளற்ற நிலைக்கு நீங்கள் வருவீர்கள். அப்போது உங்கள் உடலும் மனமும் லேசாகி காற்றில் ஆடும். உங்கள் மனதிலுள்ள கவலை, இறுக்கம், சோர்வு, வலி எல்லாமும் மறைந்து நீங்கள் புத்துணர்ச்சியான மனிதராக ஆனந்தத்தை நுகர்வீர்கள்.

இப்பொழுது நீங்கள் நம் தமிழக மண்ணில் பிறந்து இலங்கைக்குச் சென்று அங்கேயும் இங்கேயும் ஏகப்பட்ட சித்துக்களையும் அமானுஷ்யங்களையும் நிகழ்த்திய நாகநாத சித்தரைப்பற்றி அறியப்போகிறீர்கள்.

இவர் திருக்கோஷ்டியூரைச் சேர்ந்த வடகம்பட்டி கிராமத்தில் இராமகிருஷ்ணன் என்பவருக்கும் மீனாட்சி அம்மையாருக்கும் மகனாக அவதரித்தார்.

இளம் வயதிலேயே அவரது வாக்கு பலிப்பதும் அவரிடம் அமானுஷ்ய சக்தி நிறைந்திருப்பதையும் கண்டு அவரது பெற்றோர்கள் திகைப்புற்றார்கள். இருப்பினும் அவர் சராசரி மனிதராகவே வாழவேண்டுமென ஆசிரியராக்கினார்கள். ஆனால் நாகநாத சித்தர் உலக அமைதியும் உலக மக்களின் நன்மையும் மட்டுமே தனது எதிர்கால வாழ்வு எனக் கருதியதால் அந்த வேலையை விட்டுவிட்டு அமைதியை, பேரின்ப நிலையை நோக்கி நகர்ந்தார். அவரது இறை நிலைக்கும் அமானுஷ்ய சக்திக்கும் இலங்கை சரியான இடமாக இருக்கும் என்று கருதியதால் இலங்கையில் குயில்வத்தை எனும் இடத்திற்குச் சென்றார். அங்கேதான் அவரது சித்துக்களும் அற்புதங்களும் எல்லோரையும் அவர் பக்கமாகத் திருப்பி தங்கள் பாவங்களையும் கஷ்டங்களையும் அவரிடம் சொல்லி சாந்தியடைய வைத்தது. எண்ணற்ற பக்தர்களை பேய், பில்லி, சூன்ய பிரச்னைகளிலிருந்தும் பெரும் வியாதிகளிலிருந்தும் நாகநாத சித்தர் காப்பாற்றி நல்லருள் புரிந்திருக்கிறார் என்பதை அவரது ஈழத்து வரலாற்று நூல் சொல்கிறது.

ஒருமுறை 1910ம் வருடம் நாகநாத சித்தரும் அவரது சிஷ்யர் குமரகுருபரரும் கப்பலில் இந்தியாவிற்கு வந்தனர். அவர்களது நோக்கம் இந்தியாவில் வாழ்ந்து மறைந்த சித்தர்களின் ஜீவ சமாதிகளைத் தரிசிக்க வேண்டும் என்பதுதான். அப்படி அவர்கள் இந்தியாவிற்கு வரும்போது மதுரை திருப்பரங்குன்றம் பகுதிகளில் கடுமையான வறட்சி இருந்தது. ஆனால் சித்தர்கள் திருப்பரங்குன்றம் எல்லைக்குள் நுழைந்த நிமிடம் வானம் இருண்டுபோய் மழை பொழிந்தது. எப்படியோ இதனை அறிந்துகொண்ட சாதுக்கள் இருவர், சித்தரையும் அவரது சிஷ்யரையும் கண்ணீரோடு வணங்கினார்கள். அவர்கள் வணங்குவதைக் கண்ட இரண்டு நடுத்தர வயது ஆண்கள்,

'அவர்களென்ன அவ்வளவு பெரிய சாமியார்களா?' என்று கேட்டனர். அதற்கு சாதுக்கள், 'அவர்கள் சாமியார்கள் அல்ல,

சித்தர்கள். அஷ்டமா சித்துக்களும் கற்று மூச்சினை அடக்கி வாசியில் வாழ்பவர்கள். அவர்களால் நின்ற இடத்திலிருந்து மறைந்து தோன்ற முடியும்' என்று சொல்ல, அந்த இரண்டு ஆண்களும் கிண்டல் தொனியில் பரிகாசமாக, 'இவர்கள் தோன்றி மறைவார்களா? எங்கே மறையச் சொல்லுங்கள் பார்ப்போம்' என்றனர். அப்போது நாகநாத சித்தர் அவர்களைப் பார்த்து, 'ஐயா! நீங்கள் எங்களை நம்பவேண்டும் என்று யார் சொன்னது? நாங்கள் தோன்றி மறைவதால் எங்களுக்கும் உங்களுக்கும் இப்போது என்ன பயன் விளையப்போகிறது?' என்றவர், 'சரி. சற்று நேரத்திற்கு முன்பு அங்கே எங்களைக் கடந்து நடந்து வந்தாயே. அங்கே அந்தப் பாலத்தின்மீது கால் இடறி அதலபாதாளத்தில் விழ இருந்தபோது, உன்னை ஒருவர் நொடியில் தன் கையால் பிடித்து இழுத்துவிட்டாரல்லவா?' என்று சித்தர் கேட்க,

'ஆமாம். இவருக்கு எப்படி அந்த நிகழ்ச்சி தெரிந்தது? ஒருவேளை நமக்குப் பின்னாலிருந்து பார்த்திருப்பார்' என்று மனசுக்குள் நினைத்துக்கொண்ட அந்த ஆண், 'ஆமாம். அதற்கென்ன இப்போ?' என்று கேட்டார். உடனே சித்தர் சிரித்துக்கொண்டே, 'நீ திரும்ப அந்த வழியில்தானே போகப் போகிறாய்? அப்பொழுது உன்னை கைப்பிடித்து இழுத்துவிட்ட அந்த நபரை மீண்டும் அந்தப் பாலத்தின்மீது பார்ப்பாய். அப்போது நான் யார் என்று உனக்குப் புரியும்' என்று நாகசித்தர் சொல்லிவிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை நோக்கி நடந்தார்.

அந்த ஆண், 'சித்தர் ஏன் அப்படிச் சொன்னார்?' என்று யோசித்துக்கொண்டே நகர்ந்தார். அன்று மாலை தான் வந்த வேலைகளை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பியவருக்கு பாலத்தருகே வரும்போது சித்தர் சொன்னது நினைவிற்கு வந்தது. 'போகும்போது நம்மை இந்த கிடுகிடு பள்ளத்தில் விழாமல் காப்பாற்றிய மனிதர் இங்கே இருப்பாரா?' என்று பார்த்துக்கொண்டே வர, சித்தர் சொன்னதுபோல் பாலத்தின் நடுப்பகுதியில் அந்த நபர் நின்றிருந்தார்.

அந்த ஆணும் அவரது நண்பரும் அந்த நபரை நெருங்கி அவர் முகத்தை கூர்மையாகக் கவனித்தனர். அவர்தான் காலையில் அந்த ஆளைக் காப்பாற்றிய மனிதர். அவருக்கு நன்றி சொல்லும்விதமாக தங்களது கரங்களைக் கூப்பியவர்கள், அவரது கைகளைப் பார்த்து மின்சாரம் தாக்கிய உணர்வாய் அதிர்ந்தனர்.

ஏனெனில், அந்த நபருக்கு இரண்டு கைகளுமே இல்லை! அவர்கள் இருவரும் தனது கைகள் இல்லாததைக் கவனித்த அந்த நபர், 'சிறுவயதிலேயே தனது கைகள் விபத்தொன்றில் பறிபோய்விட்டதாகத் தெரிவிக்க, அவர்களுக்கு மேலும் அதிர்ச்சி மண்டையைப் பிய்த்தது. 'அப்படியென்றால், காலையில் கால் இடறி கீழே விழ இருந்த என்னை எப்படி கைப்பிடித்து இழுத்து நீங்கள் காப்பாற்றினீர்கள்?' என்று திகைப்பாய் அவரிடம் கேட்க,

'நான் காலையில் உங்களைக் காப்பாற்றினேனா? என்னப்பா சொல்றே! நான் நாகநாத சித்தர் இலங்கையிலிருந்து வந்திருப் பதை அறிந்து அவரைப் பார்ப்பதற்காக திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்குப் போயிருந்தேன். இப்போதுதான் வருகிறேன்' என்று சொல்ல, நாக சித்தர் என்கிற பெயரைக் கேட்ட அந்த இரண்டுபேருக்கும் சுரீர் என ஏதோ உறைத்தது. 'அப்படியென்றால், காலையில் இவர் ரூபத்தில் நம்மைக் காப்பாற்றியது அந்த மகான்தானா? அவரையா நாம் சந்தேகப்பட்டோம்?' சட்டென்று அந்த இருவரின் கண்களும் கலங்கியது.

அவர்கள் ஏன் கலங்குகிறார்கள் என்று புரிந்துகொண்ட அந்த கை இழந்த நபர், 'தம்பீ! நீங்க அவரை ஏதாச்சும் தப்பா சொல்லிட்டீங்களா?' என்று கேட்டார்.

'ஆமாம்யா' என்ற இருவரும் நடந்ததைச் சொல்ல, அந்த மூவருமே நாகநாத சித்தரை மனமுருக வேண்டிக்கொண்டு நகர ஆரம்பித்தார்கள்.

மதுரையிலிருந்த சித்தர்கள் அங்கிருந்து சிதம்பரத்திற்குப் புறப்பட்டபோது, அங்கேயிருந்த தாசில்தார் ஒருவர், 'நீங்கள்

இராமகிருஷ்ண பிள்ளையுடைய மகன்தானே? உங்கள் அப்பா காலமாகிவிட்டார்கள். ஆனால் உங்கள் தாய் உங்கள் நினைவாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒருமுறை அவர்களைப் பார்த்தால் மிகமிக சந்தோஷப்படுவார்கள்' என்று சொல்ல, அம்மாவைப் பார்க்க வடகம்பட்டிக்குச் சென்றார். அவர் அந்த கிராமத்தில் காலடி வைத்த நிமிடத்தில், வரவேற்பு போன்று மழை பொழிய, வறண்டுகிடந்த அந்த கிராம மக்கள் பேரானந்தம் அடைந்தனர்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு தனது மகனைக் கண்ட தாய் ஆனந்தக் கண்ணீர் வடிக்க, சித்தர் அவர் கால்களில் விழுந்து ஆசி பெற்றுவிட்டு உடனே புறப்பட்டார். 'இவர் தனக்கு மட்டுமல்ல. இந்த உலகிற்காகப் பிறந்த மகன்" என்று அகமகிழ்ந்து ஆசிர்வதித்த அவர் தாய், 'போகும் போது கும்பகோணம் வழியாகச் செல்' என்றார். 'தாய் ஏன் அப்படிச் சொல்கிறார் என்று புரிந்துகொண்ட சித்தர், அவர் சொன்னது போலவே கும்பகோணத்திற்குச் செல்ல, அங்கே பெரும் அம்மை நோய் தொற்று ஏற்பட்டு, தினமும் இருபது முப்பது பேர் மரணமடைந்து கொண்டிருந்தார்கள். அந்தச் சூழ்நிலையின் விபரீதத்தை உணர்ந்த சித்தர் அங்கேயிருந்த எல்லோரையும் அழைத்து, 'உடனே உங்கள் வீடுகளுக்குச் சென்று சாணியால் வீடு வாசல்களை மெழுகி சுத்தம் செய்துவிட்டு, மஞ்சள் தெளித்து வேப்பிலையை வீட்டின் வாயிலில் தொங்கவிட்டு இரவு முழுதும் ஒவ்வொருவர் வீட்டிலும் மாவிளக்கேற்றி தேவியை வழிபடுங்கள், ஊர் தப்பிக்கும்' என்று சொல்ல, அவர்களும் அவ்வாறே செய்தனர். என்ன ஆச்சரியம்! மறுநாளே இறப்பு என்பது அந்த கிராமத்தில் இல்லாமல் போனது. எல்லோரும் கண்ணீர் மல்க சித்தரை வணங்க, அவர் புன்னகை முகமாய் அங்கிருந்து நகர ஆரம்பித்தார்.

திருவண்ணாமலையில் ரமண மகரிஷியைக் கண்டு மகிழ்ந்த நாகநாத சித்தர் அங்கிருந்து மீண்டும் இலங்கைக்குச் சென்றார். அங்கே குயில்வத்தை சிவாலயத்திற்கு எதிரே காட்டுக்கொடிகளாலும் செடிகளாலும் மறைக்கப்பட்டிருந்த குகையைக் கண்டுபிடித்து அதனுள்ளே மாதக்கணக்கில்

நிலையில் இருந்து தன்னைத் தரிசிக்க வரும் பக்தர்களின் ர்களைக் களைந்து தனது அற்புத சக்தியால் அவர்களுக்கு லாசி வழங்கினார்.

அங்கு மட்டுமல்ல. இந்தியாவில் மேலூருக்கு அருகேயுள்ள சிங்கம்பட்டியில் உள்ள மலைக்குகையிலும் நாகநாத சித்தர் வருடக்கணக்கில் தவநிலையில் இருந்து எண்ணற்ற புதங்களும் சித்தாடல்களும் நிகழ்த்தியிருக்கிறார்.

1946ம் வருடம் தான் அவதரித்த இந்திய மண்ணில் சமாதி நிலையை அடைந்த சித்தர் இன்றும் இலங்கை குயில்வத்தை லயத்திலும் நரசிங்கம்பட்டி மலைக்குகையிலும் ஆன்ம லோடு வாழ்ந்து தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ங்கள் பிரச்னைகள், நோய்கள் தீரவேண்டுமானால் மகானின் பெயரைச் சொல்லி மனமுருக வேண்டுங்கள். டிப்பாக உங்களுக்கும் நலம் பல வழங்கி நல்லருள் புரிவார் த மகா சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு



# 9

# ஸ்ரீலஸ்ரீ அண்ணன் சுவாமிகள்

இப்போது நீங்கள் அறியப்போகும் ஸ்ரீலஸ்ரீ அண்ணன் சுவாமிகள் திருவாரூரிலிருந்து இருபதாவது கிலோ மீட்டரிலிருக்கும் புதூர் எனும் அழகிய கிராமத்தில் சக்கரபாணி - கமலம்மாள் எனும் இறைத் தம்பதிகளுக்கு மகனாக 12.01.1937 அன்று அவதரித்தார். திருவண்ணாமலையாரின் திருவருளால் அவதரித்தவர் இந்த மகான் என்பதால், இவரது பெற்றோர் இவருக்கு அருணாசலம் என பெயரிட்டு வளர்க்க ஆரம்பித்தனர்.

இளவயதிலேயே யோக, மந்திரங்கள் இவரது வசமானது. பதினைந்து வயதிலேயே இவர் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தினார். இவரது குருநாதர்களாக மருதூர் சுவாமிகளையும், ஆண்டாள்புரம் சுவாமிகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களிடம் எண்ணற்ற சித்துக்களை கற்றறிந்தார்.

ஆறரை அடி உயரத்தில், சடைமுடியுடன் இடுப்பில் வெண்மையான துண்டுடன் சிறிய வெள்ளை தாடியுமாக காட்சியளித்த சுவாமிகள் எப்போதும் புன்னகை முகமாய் வசீகரிப்பார். அவரது கண்கள் ஒளி பொருந்தியவை. நம்மால் ஒரு நொடிகூட அவரது பார்வையை நேருக்கு நேர் சந்திக்க முடியாது. அத்தனை தீட்சண்யம் அவரது விழிகளில் இருக்கும். நமது கண்களை ஒரு நொடி அவர் பார்த்தாலே போதும். நமது உள் உணர்வுகளும், மன நினைவுகளும் அவருக்குப் புரிந்துவிடும்.

அவர் ஒரு மாகாளியின் வடிவம். அன்னை காளியின் திருவருள் பெற்று அம்பாளின் தேஜஸை உள்வாங்கி... வெளியே பிரதிபலிக்கும் அவரது திருமுகத்தைப் பார்த்தாலே நமக்குள் இருக்கும் பிரச்னைகளெல்லாம் விலகிவிட்ட பேரானந்தம் ஏற்படும். திருவாரூரிலும், தமிழகத்திலும் அவரால் நல்லருள் பெற்று, அவரது பக்தர்களான பலநூறு பேர்கள் இன்னும் அவரது புகழினையும், அற்புதங்களையும், மனநிறைவோடு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீலஸ்ரீ அண்ணன் சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்களை அறியும்முன் அவரது குருநாதர்களான மருதூர் சுவாமிகளைப் பற்றியும், ஆண்டாள்புரம் சுவாமிகளைப் பற்றியும் முதலில் அறிவோம்.

மருதூர் சுவாமிகள்

மன்னார்குடியை அடுத்த தட்டாங்கோயிலுக்கு அருகேயுள்ள மருதூரைச் சேர்ந்த சிவப்பிரகாச சுவாமிகளே மருதூர் சுவாமிகள்.

சித்த மருத்துவமும், ரசவாதமும், அஷ்டமாசித்துக்களும் அறிந்த சக்தி மிகுந்த மகான் இவர். பிரச்னை என இவரை அணுகினால் "எனது பிள்ளைக்கு நான் உதவி செய்யலாமா?" என தாயன்போடு நம் பிரச்னைகளைத் தீர்ப்பார்... கடன், தொழில், நஷ்டம், வறுமை என சொல்பவர்களுக்கு... அவர்களின் உண்மையான பிரச்னைகளை அறிந்து ரசவாதத்தால் தங்கம் தயாரித்து தந்து ஆபத்பாந்தவனாக உதவிபுரிவார். எப்பொழுதாவது ரேக்ளா வண்டியில் ஏறி மாடு, கன்று இரண்டுக்கும் இடைப்பட்ட ஒன்றைப் பூட்டிக் கொண்டு மன்னார்குடி காசுக்கடைத்

தெருவிற்கு சென்று தான் ரசவாதத்தால் தயாரித்த தங்கத்தை கொடுத்து காசு வாங்கிவருவார். அப்படி அவர் காசோடு வருகிறநேரத்தில் வாழ்வின் கடைசி நிலையில் கண்ணீரோடு ஒரு அன்பர் காத்திருந்தால் 'உனக்குத்தான் வாங்கிட்டு வந்தேன் வாங்கிக்கோ' என அந்தப் பணத்தை அவருக்குக் கொடுத்து விடுவார்.

சித்த வைத்தியத்தில் மிகச்சிறந்து விளங்கிய அவரிடம் இறை அருளின் அடையாளமாக வாக்கு பலித சக்தி மிகுந்திருந்தது. அவர் சொன்னால் சொன்னதுதான் அவரது வார்த்தையை மீறி காலம்கூட நகராது. அத்தனை சக்திமிகுந்தவர். தனது சிஷ்யனை சந்திக்க புதூருக்குச் சென்று ஸ்ரீ அன்னை சுவாமிகளை ஆசீர்வதித்துவிட்டு வருவார்.

மொட்டை தலையுடன் புன்னகை முகமாய் காட்சியளித்த மருதூர் சுவாமிகள் மன்னார்குடியில் ஏகப்பட்ட அற்புதங்களை நிகழ்த்திவிட்டு 1969ம் வருடம் கார்த்திகை மாதம் திருவோண நட்சத்திரத்தில் சிவஜோதியில் கலந்தார்.

ஆண்டாள்புரம் சுவாமிகள்

ஆண்டாள்புரம் சுவாமிகள் என்ற திருப்பூண்டி ராஜகோபால் சுவாமிகள் நம் தமிழ் மண்ணில் நூற்றி ஐம்பது ஆண்டு களுக்கும் மேல் வாழ்ந்து.... எண்ணற்ற அற்புதங்களையும், மகிமையையும் நிகழ்த்தியவர்.

இவர்... திருப்பூண்டியில் 'சிந்தாமணி' எனும் கிராமத்தில் வாழ்ந்தவர் என்பதால் இவரை சிந்தாமணி சுவாமிகள் என்றும் பக்தர்கள் அழைப்பார்கள்.

இவர் அஷ்டமா சித்துக்கள் அறிந்தவர். சித்த மருத்துவத்தில் கைதேர்ந்து இருப்பினும் மூலிகை மருத்துவத்தை இவர் பயன்படுத்தியதில்லை.

இறையருளாலும் அமானுஷ்ய சக்தியாலும் தீராத வினைகளையும், பிணிகளையும் தீர்த்து வைப்பார். அவரிடம் 'நோய்' என்று சென்றவர்கள் அவர் அருளாள் பூரண குணமடைந்து நல்வாழ்வை பெற்றிருக்கிறார்கள்.

சக்தி மிகுந்த கண்களுடன், மெலிந்த தேகத்துடன்

தோற்றமளிக்கும் ஆண்டாள்புரம் சுவாமிகள், தனது கையில் எப்போதும் ஒரு துணிப்பை வைத்திருப்பார். அதில் வேட்டித்துண்டும் கடிதங்களும் இருக்கும். மடியில் ஒரு அலுமினிய டம்பளரையும், ஒரு மண் குடுவையையும் கட்டி வைத்திருப்பார். எங்கு சென்றாலும் நடந்தே செல்வார். நடையில் அத்தனை வேகமிருக்கும். தன்னைப் பின் தொடர்ந்து வருபவர்களால் அவரது வேகத்தைத் தொடர முடியாமல் திணறுவார்கள். சில நேரங்களில் அவர்களுக்கு முன்னால் வேகமாக நடந்து மறைந்தவர் திடீரென அவர்களுக்குப் பின்னால் நடந்து வர. அதைப் பார்த்து ஆச்சர்யத்தில் உரைந்துபோவார்கள்.

அவரிடமுள்ள மண் குடுவையில் ஒரு பிடி அரிசி, கிடைத்த அளவில் பருப்பு, காய்கறிகள், மிளகாய்ப் பொடி, புளி எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு அடுப்பில் தீ மூட்டி வேக வைத்து பொங்குவார். பிறகு பொங்கி வரும்போது கொஞ்சம் சாம்பிராணி எடுத்து அடுப்புக்குள் வீசிவிட்டு 'சமர்ப்பணம்' என்று சொல்லியபடி காகத்திற்குச் சிறிது பொங்கலை எடுத்து வைத்துவிட்டு சாப்பிடுவார். வெளியூர்களில் தங்கியிருந்தால் அவரது பக்தர்கள் யாராவது ஒருவர் தருகிற உணவைக் கொட்டி ஒன்றாக கலந்து... அதை மூன்று பாகங்களாகப் பிரித்து... அதில் நடுவே இருந்து சில விள்ளங்களை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு மீதியை அப்படியே வைத்துவிடுவார். எஞ்சிய சாதத்தை நோயுள்ளவர்கள் சாப்பிட்டால் அவர்களது நோய்கள் ஆச்சர்யமூட்டும் வகையில் பூரணமாகிவிடும் என்பதால் அவர்கள் சாப்பிட்டு எஞ்சியதை சாப்பிட... எண்ணற்றோர் காத்திருப்பர்.

'நம்ம ஒவ்வொருத்தர் உடம்பிலேயும் மின்சாரம் இருக்கு. நாம செருப்பு மொசைக், சிமெண்ட் அது இதுன்னு போட்டுட றோம். அதனால நம்ம உடம்புக்கும் பூமிக்கும் உள்ள தொடர்பு பாழ்ப்பட்டு போயிடுச்சு. இப்ப நம்மில் பலபேர் நோய்வாய்ப்பட்டு இருக்கிறதுக்கு இதுதான் காரணம். "பூமி நம்ம உயிர்சக்தி. அதனால மண்ல நடங்க. மண்ல படுத்து உறங்குங்க" என்பார் ஆண்டாள்புரம் சுவாமிகள்.

அதேபோல் "சுவைக்கு மனிதன் அடிமையாகக் கூடாது. தொண்டைக்குக் கீழே மண்ணைக் கரைச்சி ஊத்தினாலும் குடலுக்குத்தான் போகும். சுவைக்கு அடிமையாகிற மனுஷனைத்தான் நோய் நெருங்கிவிடும்" என்ற சுவாமிகள், தலைஞாயிறு எனும் இடத்திற்கு அருகே இருக்கும். 'மணக்குடி' எனும் ஊரில் பிறந்தார். இளவயதிலேயே அமானுஷ்ய சக்தியில் சிறந்துவிளங்கிய இவர். இலங்கைக்குச் சென்று அங்கேயும் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்திவிட்டு திரும்பினார். கேம்பிரிட்ஜ் பல்கலையில் பயின்ற இவருக்கு பலமொழிகளில் பேச, எழுத தெரிந்தாலும், மௌனமொழியை அதிகம் நேசித்ததால் எப்பொழுதும் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசுவார்.

ஒருமுறை அவரது அற்புதங்களை அறிந்து அவரை தரிசிக்க வந்த, தொண்ணூறு வயது முதியவர் ஒருவர் தனது சிறுவயதில் அவரைப் பார்த்தபோது எப்படி இருந்தாரோ அதேபோல் இப்பொழுதும் இருக்கிறார். கண்டிப்பாக இவருக்கு இப்போது 130 வயதிருக்கும் என்றார்.

ஒருமுறை கீழையூர் காவல் நிலையம் வழியாக சுவாமிகள் நடந்துவரும் போது, சுவாமிகளின் வெளித்தோற்றத்தைப் பார்த்து யாரோ சாராயக் கடத்தல் ஆசாமி என சந்தேகப்பட்டு அவரை காவல் நிலையத்தில் உட்கார வைத்துவிட்டார்கள். அப்போது அங்கே வேலையிலிருந்த சில போலீஸ்காரர்கள். "யார் நீ?" என்று மிரட்ட... "நான்தான் அவன்... அவன்தான் நான்' என்கிற ஒரு வார்த்தையை திரும்பத் திரும்ப சுவாமிகள் சொல்ல, அவர்கள் ஒன்றும் புரியாமல் இங்கேயே உட்காரு என உட்கார வைத்துவிட்டார்கள். அப்போது எதிர்பாரா விதமாக அந்த காவல் நிலையத்துக்கு காவல் துறை கண்காணிப்பாளர் விசிட் வர... உள்ளே உட்கார்ந்திருந்த சுவாமிகளைப் பார்த்ததும் பதற்றமாகி, அவசரமாக பூட்ஸ்களை கழற்றிவிட்டு, கால்களில் விழுந்து ஆசி பெற்றார். 'இப்பத்தான் உங்களை மார்க்கெட்ல பார்த்தேன். அதுக்குள்ளே இங்க வந்திருக்கீங்க...!" என்று கேட்க... சுவாமிகள் அர்த்தமாக சிரித்தபடி... 'உன் மனசுல நீ என்கிட்ட ஆசி வாங்கணும்னு நினைச்சேயில்லயா? அதுக்காகத்தான் இங்கே

வந்தேன்' என்று சொல்ல... உடனே அங்கிருந்த காவலர்கள்... கண்காணிப்பாளரிடம் "ஐயா மன்னிச்சிடுங்க. இவர் யாருன்னு தெரியாம... இவர்கிட்ட யார்னு கேட்டோம். இவர் சரியா பதில் சொல்லாம 'நான்தான் அவன் அவன்தான் நான்னு' சொன்னாரு. அதனால சந்தேகப்பட்டு உட்கார வச்சிட்டோம்' என்று சொல்ல, கண்காணிப்பாளர் அதிர்ச்சியில் உறைந்து போனார். 'இரண்டு மணிநேரம் இங்கே உட்கார்ந்திருப்பவர் அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி எப்படி நம்ம முன்னாடி வந்தார்? நான் இவர்கிட்ட ஆசி வாங்கணும்னு நினைச்சதை இவர் எப்படி உணர்ந்தார்? இதை முன்னாடியே இவங்கக்கிட்ட தெளிவுப்படுத்தத்தான் 'நான் தான் அவன்... அவன்தான் நான்'னு சொன்னாரா? கண்காணிப்பாளர் ஆச்சயர்மாக பார்க்க. சிறிய புன்னகையோடு சுவாமிகள் அங்கிருந்து புறப்பட்டார்.

இப்படி செய்யப்பட்ட அற்புதங்களை நிகழ்த்திய ஆண்டாள்புரம் சுவாமிகளின் அருளுக்கு பாத்திரமான சீடர்தான் நம் ஸ்ரீலஸ்ரீ அண்ணன் சுவாமிகள்.

ஸ்ரீ அண்ணன் சுவாமிகளும் தனது குரு ஆண்டாள்புரம் சுவாமிகளின் அற்புதங்களுக்குக் குறைவில்லாமல் எண்ணற்ற மகிமைகளை நிகழ்த்தி பல நூறு பக்தர்களுக்கு நல்வாழ் வளித்திருக்கிறார். இனி... ஸ்ரீ அண்ணன் சுவாமியைப் பற்றி அவரது பால்யகால நண்பரும், ஆஸ்தான சீடருமான சிவபிரகாசம் ஐயா சொல்வதை அறிவோம்.

நன்கு ஆறரை அடி உயரத்தில், ஆஜானுபாகுவான தோற்றத்தில், கறுமை நிறத்தில், நெருப்பு உமிழும் கண்களுடன், உறுதியான உடல் வலிமையோடு இருப்பார் ஸ்ரீ அண்ணன் சுவாமிகள்.

சின்ன வயசுல இருந்தே அவர் ஒரு தெய்வீகப் பிறவின்னு எல்லாரும் உணர ஆரம்பிச்சுட்டோம். காரணமே தெரியாம திடீர்னு ஒருத்தரைக் கூப்பிட்டு, "உன் வீட்ல இந்த பிரச்னை நடக்கப்போகுது, கொஞ்சம் விழிப்போடு இரு"ன்னு சொல்வாரு. எங்களுக்கு அந்த விஷயத்தோட ஆழம் புரியாததால அந்த விஷயத்தை பெரிசா எடுத்துக்கமாட்டோம். ஆனால், சம்பந்தப்பட்டவங்க சுவாமிகள் சொன்னமாதிரியே நடக்க

ஒருசில நாட்களில் சுவாமிகளைத் தேடிவந்து, "சுவாமி உங்களால பெரிய ஆபத்துல இருந்து நாங்க பிழைச்சோம்"னு அவர் முன்னாடி கண்கலங்கி, அழும்போதுதான் அண்ணன் சுவாமிகள் முக்காலமும் அறிந்த ஒரு தெய்வீக மகான்னு புரிந்தது.

அண்ணன் சுவாமிக்கு 44 வயசாகும்போது ஒருநாள் "எந்த காரணத்தினாலேயும் கதவை திறந்திடாதீங்க"ன்னு... சொல்லிட்டு தவம் இருக்க ஆரம்பிச்சிட்டாரு... கிட்டத்தட்ட நானூறு மாதத்துக்கு மேல் ஆகியும் அவர் வெளியில் வரல... நாங்களெல்லாம் பயந்துபோய் கதவை உடைச்சி திறந்துகிட்டு உள்ளே போனோம். அங்கே சுவாமிகள் எந்த சலனமும் இல்லாமல் படுத்துக்கிடந்ததைப் பார்த்து நான் அலறினேன். உடனே அண்ணன் சுவாமிகளோட முகத்துக்கிட்ட போய் பார்த்தேன். அவர் வாய்க்குள்ளே சிற்றெறும்பு கூட்டம் அப்பிக் கிட்டு இருந்தது. அவசர அவசரமாக ஒரு துண்டை எடுத்து, அவர் வாய் முகம் எல்லாத்தையும் சுத்தம் பண்ணிட்டு... அவரோட நெஞ்சுக்கூட்டுல கை வச்சு அழுத்திவிட்டேன். அப்பவும், சலனமில்லை... எனக்கும் கூட இருந்தவங்களுக்கும் கண்கலங்க ஆரம்பிச்சது. ஆனால் என்ன ஆச்சர்யம்! கொஞ்ச நேரத்துல சுவாமிகள் கண் திறந்து லேசாகப் பெருமூச்சுவிட்டு... என்னோட வந்தவங்ககிட்டே... "நான் இறந்து பல நாள் ஆச்சு... இந்த பஞ்சாயத்துதான் என்னை கிளப்பிவிட்டுடுச்சு. இது எனக்கு இரண்டாவது பிறப்பு"ன்னு சொன்னாரு.

"சுவாமி தவம் செய்றேன்னு வந்துட்டு. இப்படி ஆகிட்டீங்களே! எங்களுக்குன்னு யார் இருக்காங்க்ன்னு கூட வந்தவங்க கண் கலங்க. சுவாமிகள் அவங்களைப் பார்த்து...

"என்ன பண்றது... எங்களுக்குன்னு யார் இருக்காங்கன்னு நீங்க கேட்கிற மாதிரியே... என் உயிர் காப்பாற்றி, என் அம்மா உயிரை காப்பாத்துன்னு என்கிட்ட வந்து அழுதா என்னால தாங்க முடியல... அவங்க கஷ்டங்களையும், பாவங்களையும் நான் வாங்கிக்கிட்டு... அவங்களுக்கு சந்தோஷம் தர்றதுக்காகத்தான் நான் மாறி, மாறி பிறக்கிறேன்"னு சொன்னாரு. அப்ப எங்களுக்கு அந்த வார்த்தயோட அர்த்தம் புயரியல. ஆனால் அவர் வெளியே

வந்தவுடன். "சாமி என் உயிருக்கு உத்தரவாதம் இல்லேன்னு டாக்டர் சொல்லிட்டாரு... ஆனால் நீங்க கண்டிப்பாக என் உயிரை பிழைக்க வச்சிடுவீங்கன்னு உங்களையே வணங்கிட்டு இருந்தேன். நீதான் சாமி என்ன காப்பாத்தின தெய்வம்னு சில பேர் அவர் முன்னாடி வந்து நின்று கண் கலங்கும்போதுதான்... அப்போது அவர் சொன்ன வார்த்தைக்கான அர்த்தம் புரியும்.

"மனம் மாறி, மாறிப் பிறந்தால்தான், 'மாறுதலை'... விட்டு பிறந்தால்தான் மாறுதலைவிட்டு ஒருநாள் அது தானே இறந்துபோகும். அப்போதுதான் மனிதன் நிஜமான வீடுபேறு அடையமுடியும். இதுதான் உயிரின் மூலம்" என்று அண்ணன் சுவாமிகள் அடிக்கடி சொல்வார்கள்.

தவம் இருப்பது என்பது சுவாமிகளைப் பொறுத்தவரை ஒரு விருப்பமான உணவு என்று சொல்லலாம். சாப்பிடப் போறென்னு சொல்ற மாதிரி தவத்தில் உட்காரப் போறென்னு சொல்லிட்டு உடனே உட்கார்ந்திடுவாரு.

52 வயசுல அண்ணன் சுவாமிகள் இருந்த 'அக்னி தவம்' அவர் ஒரு மானிடப்பிறவியிலிருந்து வேறுபட்டவர், அவர் ஒரு இறையருளாளர் என்பதை உணர வைத்தது. அக்னி தவம்ங்கிறது உணவு உறக்கமில்லாம மனசை இறைவனிடம் அர்ப்பணித்து யோக நிலையில் உட்காருவது மட்டுமல்ல. ஒரு பெரிய இரும்புச் சட்டி நெருப்பில் எரிஞ்சுக்கிட்டே இருக்கும். அந்த நெருப்பு அணைஞ்சுப்போகாம இருக்க... குச்சுக்களைப் போட்டு எரிச்சுக்கிட்டே இருப்பாங்க... அந்த கொதிக்கும் சூட்டில் உட்கார்ந்த நிலையில் அண்ணன் சுவாமிகள் மூன்று மாதங்களுக்கும் மேலே தவமிருந்தார்கள். அவரது உடலில் இருந்த ஊன் உருகி ஓட்டடைக்குச்சி போல் ஆகிவிட்டார். 1989ம் ஆண்டு பிப்ரவரி 22ம் தேதி புதன் கிழமை மதியம் 2 மணிக்கு அண்ணன் சுவாமிகள் தவநிலையிலிருந்து கண் திறந்தார். அப்போது அவர் உடல் பழங்கால கோவில்களில் இருக்கும் கருமையான சிலைபோல் மாறியிருந்தது. சுமார் இருபது நிமிடங்கள் அவரது பார்வை வெட்டவெளியில் நிலைத்திருந்தது. அந்த நிமிடம் ஏதும் நடந்திடாதவர் போன்று எழுந்து நடந்தார். அந்த அற்புதத்தை இப்போது நினைத்தாலும்

உடல் சிலிர்க்கிறது" என்கிற சிவப்பிரகாசம் ஐயா...

அண்ணன் சுவாமிகள் மாகாளியின் வடிவம் என்பதை, விவரிக்கிறார். "அண்ணன் சுவாமிகள் மாகாளியின் அருள் வடிவமானவர் என்பதை முதன்முதலாக பார்த்தபோது என் உடல் சிலிர்த்தது... ஒரு நாள் என்னிடம்... 'ஊதுபத்தியை இப்போது கட்டாக கொளுத்து... அம்பாள் வருகிறாள்" என்றார். அப்போது நான் அவர் உடலை கூர்மையாக பார்த்தேன். அவருடைய கருமை நிறம் மறைந்து ரோஸ் நிறமானது. மீண்டும் அவர் என்னிடம், "இப்போது பார் மயான (ருத்ரி) காளி வருகிறாள்" என்றார். அப்போது அவர் உடல் மேலும் கறுப்பாக மாற... பற்களை உக்கிரமாகக் கடித்தபடி 'இப்போது பார் இந்த அத்தி மரத்து ஆச்சியே வருகிறாள்' என்றார். அப்பொழுது அவரது உடல் தாழம்பு நிறத்திற்கு மாறியதைக் கண்டு என் உடல் சிலிர்த்தது. "அம்மா தாயே" என பெருங்குரலில் சத்தமிட்டு அவர் பாதங்களில் நமஸ்கரித்தேன்.

அன்றிலிருந்து... மாகாளியின் அம்சம் அண்ணன் சுவாமியிடம் உறையும்போது, அவரது இயல்பு மாறி தெய்வ இயல்பு வருவதை அவருடனிருந்த நான் உணர்ந்திருக்கிறேன்" என்றார் சுவாமிகளின் சீடர் சிவப்பிரகாசம்.

மாகாளியின் அருள் உறையும் அண்ணன் சுவாமிகள் திருவாரூரில் நிகழ்த்தியிருக்கும் அற்புதங்களை அறியும்போது மனதிற்குள் வியப்பு நிறைகிறது. தீராத நோய்கள் ஆச்சர்யமூட்டும் வகையில் குணப்படுத்தியது வீடு, வேலை, திருமணம் வேண்டி வந்தவர்களுக்கு அவர்கள் விரும்பியபடியே நல்வாழ்வளித்து அருளியது... பில்லிசூனியம், வறுமை பிரச்னைகளுக்குத் தீர்வளித்தது என எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்திய அண்ணன் சுவாமிகள் 22.02.1989-ம் தேதி இரண்டு மணிக்கு 'அக்னி தவத்திலிருந்து கண் திறந்து சில நொடிகள் வெட்டவெளியை உற்று பார்த்துவிட்டு நடக்க ஆரம்பித்தார். பின்பு... கருமைச் சிலைபோலிருந்த அவர் உடல் மெல்ல தளர்ந்தது. சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து மெல்ல புன்னகைத்தர். பிறகு தான் அத்திமரத்து ஆச்சி காளியிடம்

ரென்று ஒன்றாகிவிடுதாக உட்கார்ந்தார்...

அவர் சொன்னதுபோலவே... அவர் உடல் அங்கேயே ஜீவசமாதி நிலை அடைந்தது.

இப்போதும் திருவாரூர் விளமல் பகுதியிலுள்ள அவரது ஜீவசமாதியிலிருந்து தன்னை நாடிவரும் பக்தர்களின் குறை தீர்த்து நல்வாழ்வளிக்கிறார் அண்ணன் சுவாமிகள்.

அதற்கு உதாரணமாக... தற்கொலை எண்ணத்தில் அவரது ஜீவசமாதிக்கு வந்தவரின் மனதை மாற்றி வெளிநாட்டில் வேலை கிடைக்கும் என அவரது சிஷ்யர் மூலமாக அருளாசி வழங்கி... இப்போது அந்த நபர் வெளிநாட்டில் கைநிறைய சம்பாதித்து சந்தோஷமாக வாழ்கிறார்.

திருவாரூரில் பணிபுரியும் செல்வராஜ் குடும்பத்தில் 12 வருடங்களாக குழந்தைபேறு இல்லாமல் அண்ணன் சுவாமிகளின் ஜீவசமாதிக்கு வந்து வேண்டுதல் செய்ய... இப்போது அழகிய ஆண் குழந்தை அந்த வீட்டில் தவழ்கிறது. இதேபோல் அவரது அருளின் சாட்சியாக நூற்றுக்கணக்கான பக்தர்கள் அண்ணன் சுவாமிகளை நாளும் மனமகிழ்வோடு தொழுதுவருகிறார்கள்.

நீங்களும் உங்கள் குறைகளை திருவாரூரிலிருந்து திருத்துறைப் பூண்டி செல்லும் வழியில் திருநெல்லிக்காவல் புதூர் எனும் இடத்திலுள்ள அவரது ஜீவசமாதிக்கு சொல்லுங்கள். உங்கள் குறைகள் யாவையும் தீர்த்து வைப்பார். அந்தப் புனித மகான் அண்ணன் சுவாமிகள்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 10

## ஸ்ரீலஸ்ரீ குழந்தையானந்த சித்தர்

சித்தர்கள் மனித உயிர்களுக்காக கண்டறிந்து கூறியிருக்கும் 'சக்கரம்' எனும் ஆறு ஆதார நிலைகள் மிகவும் பயனுள்ளவை. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தம், அஜ்ஜை என்கிற இந்த ஆறு சக்கர மையங்களிலும் மனதை ஒருமைப்படுத்தும் அழிவற்ற நிலையை வகுக்கும்.

முதல் சக்கரமான மூலாதாரம் முதுகெலும்பின் கீழ்ப்பகுதியான தண்டுவடத்தின் இறுதியிலும் இரண்டாம் சக்கரமான சுவாதிட்டானம் உயிர் இறப்பு என்கிற பிறப்புறுப்பிற்கு சமமான இடத்திலும், மூன்றாவது சச்கரமான மணிபூரகம் தொப்புள் மட்டத்திலும் நான்காவது சக்கர மையமான அநாகதம் இருதயப் பரப்பிலும், ஐந்தாவது சக்கர மையமான விசுத்தம் தொண்டைக்கு அடியிலும், ஆறாவது சக்கர மையமான அஜ்ஜை இரண்டு புருவங்களுக்கு மத்தியிலும் அமைந்திருக்கிறது.

இவை மட்டுமில்லாமல் ஏழாவதாக ஒரு சக்கர மையம் மண்டை ஓட்டின் உச்சியில் அமைந்துள்ளதாக சித்தர்கள் கண்டறிந்து கூறினார்கள்.

இந்த சக்கர நிலையில் சக்தி சுழல்வதை 'குண்டலினி சக்தி' என்று கூறிய சித்தர்கள் மூலாதாரத்தில் ஒரு நாகம் போல் சூன்ம சக்தி சுருண்டு கிடப்பதாகவும் சிவம் சகஸ்ராரத்தில் அதாவது ஆயிரம் இதழ்கொண்ட தாமரைபோல் அமைந் திருப்பதாகக் கூறினார்கள்.

மனிதனின் படைப்பு இயக்கம் என்பது இந்த ஆறு சக்கர நிலையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையிலான முனை களுக்குள்ளேதான் சுழல்கிறது என்று கண்டறிந்து சொன்ன சித்தர்கள். மூலாதார சக்தியை எழுப்பி சகஸ்ராராத்தில் கொண்டு சேர்ப்பதுதான் சிவசக்தி ஐக்கியம் என்கிறார்கள்.

அந்த மூலாதாரத்திலிருந்து எப்படி குண்டலினியை எழுப்புவது? அதற்குத்தான் பிராணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சியை கண்டறிந்து கூறினார்கள்.

மூச்சுச் சக்தி என்பது உணர்வின் உச்ச நிலைகளைக் தூண்டி விடும் சக்தியாகும். வலது நாசியின் வழியே நுழைகிற காற்று உடம்பின் வலப்பகுதியை சுறுசுறுப்பூட்டுகிறது. இந்த வலப் புறமாக காற்று செல்லும் பாதைக்கு பிங்கலை என்று பெயர்.

இதேபோல் இடப்புற நாசியின் வழியே நுழைகிற காற்று உடம்பின் இடப்பகுதியைச் சுறுசுறுப்பூட்டுகிறது. இதற்கு பிங்கலை என்று பெயர்.

இந்த இரண்டு நாடிகளும் சந்திக்கும் இடம் சுழுமுனை எனப்படுகிறது. இந்த வடகலை பிங்கலை எனும் நாடிகளை அதாவது மூச்சு செல்லுதலைக் கட்டுப்படுத்தினால் மனதும் உடலும் ஆரோக்கியமானதாக உருமாறும்.

அடுத்து மூலாதாரத்திலிருந்து உயர் சக்தியை மெல்ல மேலே எழும்பி புருவ மத்தியான அஜ்ஜைக்குக் கொண்டு வரும் குண்டலினி பயிற்சியை மேற்கொண்டால் உடல் மற்றும் மனம் இரண்டும் பேரின்ப நிலையை அடையும். நோய்கள் விலகும். ஆரோக்கியம் பெருகும். ஆயுள் அதிகரிக்கும் என்கிறார்கள் சித்தர்கள்.

இன்றும் 'குண்டலினி' பயிற்சி வழக்கில் உள்ளது. அதில் தேர்ந்த மனிதர்களைக் கண்டறிந்து அவர்களிடம் பயிற்சி பெற்று நலமடையுங்கள்.

இப்போது நீங்கள் மதுரையிலும், தென்காசியிலும், திரு வண்ணாமலையிலும் வாழ்ந்து பல அற்புதங்களை நிகழ்த்திய குழந்தையானந்த சித்தரைப் பற்றி அறியப் போகிறீர்கள்.

இவர் ஒரு தெய்வக் குழந்தையாய் அவதரித்தவர். இவரது தாய் தந்தை இருவருமே மதுரை மீனாட்சியம்மன்தான். இவர் மாய உருவாய் தெய்வ அருளாய், சுயம்புவாய் அவதரித்தவர்.

நான்குமுறை சமாதியடைந்து மீண்டும் அவதரித்து உலகம் வாழ பல அற்புதங்களை நிகழ்த்தியவர். குழந்தையானந்தரை நேரில் பார்த்தவர்கள் சிலர் இன்றும் வசிக்கிறார்கள். குழந்தையானந்த சித்தரைப் பற்றி அறிந்தாலே படித்தாலே அவர்களுக்கு சித்தரின் பூரண அருள் பிறக்கும் அவரைப் பற்றி சொன்னால் மகாபுண்ணியம் என நெகிழ்வோடு சொல்கிறார்கள்' அவரை அறிந்த சிலர்.

மதுரை மாநகரில் அன்னை மீனாட்சியின் தீவிர பக்தர்களாக வாழ்ந்தவர்கள் திரிபுரசுந்தரி அம்மாள், ராமாசாமி ஐயர். இவர்களுக்கு நீண்டநாட்களாக குழந்தையில்லை. இதனால் அம்மனிடம் மனமுருகி வேண்டியவர்கள் தனக்கு குழந்தை பிறந்தால் அதைக் கொண்டு வந்து மீனாட்சி அம்மனிடமே விட்டுவிடுவதாக வேண்டிக் கொண்டனர்.

அப்படி அவர்கள் வேண்டுதல் வைத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பியபோது அங்கே இரண்டு அழகான குழந்தைகள் கைகளில் ஒரு மரப்பாச்சி பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

வீட்டிற்குள், நுழைந்த திரிபுர சுந்தரியும், ராமசாமி ஐயரும் ஆச்சர்யமாய் அவர்களைப் பார்க்க... அவர்கள் இந்தப் பொம்மையைப் பத்திரமாக வைத்திருங்கள் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டனர். அந்தக் குழந்தைகள் யார்? என்று யோசித்துக் கொண்டே அந்த பொம்மையைப் பார்த்த திரிபுரசுந்தரி திகைப்புற்றார். "காரணம்" அந்த பொம்மையின் அடிபாதங்களில் சங்கும் சக்கரமும் வரையப்பட்டிருந்தது. அதைத்

துனது கணவரிடம் காட்ட, அவர் விஷயம் புரிந்தவராக "தெய்வ அருளால் நமக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கப் போகிறது. அதில் ஒரு குழந்தையின் கால்களில் சங்கு சக்கர ரேகைகள் இருக்கும். அதைத்தான் இந்த பொம்மை உணர்த்துவது போல் உள்ளது. உடனே இதை பூஜையறையில் வைத்து பூஜை செய்" என்று சொல்ல, திரிபுரசுந்தரி அந்த நொடியே பரபரப்பாகி பூஜையில் வைத்து பொரி நைவேத்தியம் செய்தாள்.

சற்று நேரத்தில் அந்தக் குழந்தைகள் மீண்டும் வீட்டுக்குள் வர, அவர்களை ஆச்சர்யத்தோடு பார்த்தபடி உள்ளே அழைத்தாள் திரிபுரசுந்தரி.

குழந்தைகள் பரபரப்பான தொனியில் "பொம்மையைக் கொடுங்கள் நாங்கள் புறப்பட வேண்டும்" என்று சொல்ல பொம்மையை கொடுக்கும் விதமாக பூஜையறைக்குள் சென்ற திரிபுரசுந்தரி திடுக்கிட்டாள். காரணம், சற்று முன்புவரை அங்கேயிருந்த பொம்மை இப்போது காணவில்லை.

குழந்தைகளிடம் பொம்மை காணவில்லையென எப்படிச் சொல்வது? என்ற அதிர்ச்சியில் தரையில் அமர்ந்தவள் கண்மூடி அம்மனை தியானித்தாள். அடுத்த நொடி அவள் அருகில் பொம்மை வந்தது! ஆச்சர்யமான முகத்தோடு பொம்மையை கையில் எடுத்தாள். இப்போது அந்த பொம்மையிலிருந்து தெய்வீகமான மணம் வீசியது. 'இது என்ன இப்படியொரு மணம்!' மேலும் ஆச்சர்யத்தோடு பொம்மையை எடுத்துக்கொண்டு வெளியே சென்றாள். ஆனால் அங்கே குழந்தைகள் இல்லை. 'எங்கே போனார்கள் அந்த குழந்தைகள்?' என்று கேள்வியாய் வீட்டுக்குள் வந்தால் இப்போது கையிலிருந்த பொமையும் மறைந்துபோய்விட்டது.

ஆச்சர்யமும் அதிர்ச்சியுமாய் கணவரிடம் ஓடிச் சென்று விஷயத்தைச் சொல்லஅவர், "நம் வீட்டுக்கு வந்திருந் குழந்தைகள் வேறு யாருமல்ல. மீனாட்சி அம்மனும் சோமசுந்தரப் பெருமாளும்தான். அவர்கள் உன் வயிற்றில் உருவாகப்போகும் ஒரு சக்தி மிக்க போரொளியைப் பற்றி சொல்லத்தான் வந்திருக்கிறார்கள்" என்றவர் அடுத்த நொடியில் பூஜை அறைக்குச் சென்று அம்மனின் சிலைக்கு முன்பாக விழுந்து மனமுருக வேண்ட ஆரம்பித்தார்.

இறைவனின் கட்டளைப்படியே கி.பி.1607-ம் வருடம் புஷ்ய மாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் குழந்தையானந்த சித்தர் அவதரித்தார்.

அதாவது திரிபுரசுந்தரிக்கு முதலில் ஒரு குழந்தை பிறந்தது. அடுத்தநொடி திரிபுரசுந்தரி, அவள் கணவர், மருத்துவ பெண்கள், சுற்றத்தினர் அனைவரும் உலகை மயக்கும் மணம் வீசுவதை உணர்ந்து தன்னிலை மறந்துபோக, தெய்வத்தின் குழந்தையான குழந்தையானந்தர் சுயம்புவடிவாய் அவதரித்தார்.

சற்று நேரத்தில் சுய உணர்வை அடைந்த திரிபுரசுந்தரியும், அவள் கணவரும் மற்றவர்களும் தனது அருகே இரண்டு குழந்தைகள் இருப்பதை ஆச்சர்யத்துடன் பார்த்தனர். குழந்தையானந்தரின் பாதங்களை திரிபுரசுந்தரி பார்த்தாள் திகைத்தாள். இன்ப அதிர்வடைந்தாள். தெய்வக் குழந்தையான சித்தரின் பாதங்களில் சங்கு சக்கர ரேகை இருந்தது. இதைக் கண்டு எல்லோரும் வியப்புற்றனர்.

குழந்தையானந்தருக்கு ராமன் எனவும் அவருக்கு முன்பாகப் பிறந்த குழந்தைக்கு லஷ்மணன் என்றும் பெயரிட்டு மகிழ்ந்தனர்.

தெய்வக் குழந்தையான சித்தரின் தெய்வீகச் சிரிப்பில் காண்பவர்கள் மயங்கினர். அவரின் தாய் தந்தைக்கு உலகையே அடைந்த மகிழ்ச்சியும், பூரிப்பும் ஏற்பட்டது.

ஆனால் குழந்தைகள் பிறந்த பத்தாவது நாள் அவர்கள் மீனாட்சி அம்மனிடம் குழந்தையைக் கொண்டு விடுவதாக வேண்டுதல் செய்தது ஞாபகத்துக்கு வந்தது.

தாயாகிற்றே... திரிபுரசுந்தரி மறுக்க, ராமசாமி ஐயர் தெய்வத்திடம் வேண்டுதல் செய்தது ஒரு குழந்தையைத்தானே அதனால் குழந்தையானந்தரை கோயிலில் விட்டுவிடலாம் என தீர்மானித்து காத்தவராயன் என்பவரோடு புறப்பட்டனர்.

அப்பொழுது மீனாட்சியம்மனின் கோயில் நடை சாத்தப்பட்டு வாயிலை அடைத்துவிட்டு அர்ச்சகர் கிளம்பி விட்டிருந்தார். 'இந்த குழந்தையை எங்கே விடுவது?' என்று அவர்கள் யோசித்தனர். அடுத்த நொடி கோயிலுக்குள்ளேயிருந்து பலமான மணியோசை கேட்க வாயில் கதவுகள் தானே திறந்தது.

மூவரும் உள்ளே சென்றனர் கர்ப்பகிருஹத்தில் மீனாட்சியின் வாலடியில் குழந்தையை விட்டுவிட்டு வெளியே வந்தனர். காத்தவராயனை மட்டும் அர்ச்சகர் வரும் வரை காத்திருந்து குழந்தையை ஒப்படைத்துவிடும்படி சொல்லிவிட்டு பெற்றோர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

மாலை கோயிலுக்கு வந்த அர்ச்சகர் பூட்டிய கதவுகள் திறக்கப்பட்டிருந்ததில் அதிர்ச்சியடைந்து உள்ளே வந்தவர் அம்மனின் காலடியில் குழந்தையானந்தர் இருப்பதைக் கண்டு மேலும் அதிர்ந்தார்.

காத்தவராயன் சித்தரின் பெற்றோரின் வேண்டுதலைச் சொல்லி அர்ச்சகரிடம் இனி இது அம்மன் குழந்தை என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். அன்று முதல் குழந்தையானந்தர் அம்பாள் மீனாட்சியின் தவப்புதல்வனாக கோவிலிலேயே வளர ஆரம்பித்தார்.

மாலையில் குழந்தையை கோவிலிலேயே விட்டுவிட்டு அர்ச்சகர் வெளியே செல்வார். ஆனால் உள்ளே தாயும் மகனும் பேசுவதுபோல் கேட்டு ஆச்சர்யமடைவார்.

அதேபோல் மீனாட்சியம்மனே குழந்தையானந்தருக்கு பாலும் அமுதும் ஊட்டி வளர்த்ததாக ஐதீகம் சொல்கிறது.

தெய்வத்தின் குழந்தையாக சித்தர் வளர ஆரம்பிக்க அவருக்குள் மனிதர்களின் பிணி மற்றும் கர்மவினைகளைப் போக்கும் மகாசக்தி வந்தது. பஷியோகம் என்கிற ஆகாயத்தில் பறக்கும் சக்தி வந்தது.

சித்தரின் முகத்தைக் கண்டாலே போதும் காண்பவர்கள் அளவில்லாத பேரானந்த நிலையை அடைவார்கள்.

இறைவன் சித்தருக்கு அருளிய நந்தி வித்தையின் மூலம் தன்னை அணுகி மனப்பிரச்னையும், உடல் பிரச்னைகளையும் சொல்லி அழுபவர்களின் நெற்றியில் விரல் பதித்து அவர்களுடைய பிரச்னைகளை அந்த நொடியே விலக வைப்பார் சித்தர்.

குழந்தையாக, மிகப்பெரிய சக்தியுருவாக அவரின் புகழ் பரவ ஆரம்பித்தது. இதைக் கேள்விப்பட்டு அன்றைய ராணி மங்கம்மாவிற்கு எரிச்சல் அதிகமானது. அவளது சூழ்ச்சியில்

சித்தரின் தந்தை கொலை செய்யப்பட அவரின் தாயார் உடன்கட்டை ஏறும் அளவிற்குப் போனது. ஆனால் சித்தரின் சக்தியால் அவளது ஆட்சியே முடிந்துபோக, 1706ம் ஆண்டு சொக்கநாத நாயக்கர் என்பவர் அரசரானார்.

அந்தச் சூழலில் தென்னகத்திலிருந்து பாபா என்கிற சித்தர் மதுரைக்கு வந்திருந்தார். அவர் அம்மனை தரிசிக்க கோவிலுக்கு வந்தபோது குழந்தையாக இருந்த குழந்தையானந்த சித்தரைப் பார்த்து திகைப்புற்றார். அடுத்த நொடி அவருக்குள் இது தமது சீடன் என்கிற உணர்வு ஏற்பட்டது. சித்தரும்..."ஐயா நான் உங்களைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் உங்களிடம் சேரவேண்டும் என்பது அம்மனின் கட்டளை வாங்க போகலாம்..." என்று பாபாவின் கையைப் பற்றி நடக்க ஆரம்பித்தார். பாபாவிடமிருந்தும் பல ஆன்ம சத்திகளைப் பெற்ற சித்தர். அவரோடு தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று எண்ணற்ற மக்களின் நோய்களையும், பிரச்னைகளையும் தீர்த்து வைத்தார்.

தமிழகம் முழுவதும் மட்டுமில்லாது விஜயநகர சாம்ராஜ்யத் திற்கும் விதர்ப்ப தேசத்திற்கும் சென்று எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தினார். அங்கிருந்து காசி சென்றவர் அங்கே அளவற்ற மக்களுக்கு நன்மை அறிக்கும் விதமாக வாழ்ந்துவிட்டு காசியில் சமாதி நிலையடைந்தார்.

அதன்பிறகு மீண்டும் அவதரித்து தமிழகத்தில் திருவண்ணா மலைக்கு வந்தார். இங்கேயும் பல சித்தாடல்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தி விட்டு ஜோதி வடிவமாக அண்ணாமலையுடன் கலந்தார்.

மீண்டும் இரண்டாவது சமாதியிலிருந்து உயிர்த்தெழுந்து காஞ்சிபுரம் வந்தார். சித்தர் இரண்டுமுறை சமாதியடைந்தார் என அறிந்து அவரிடம் எண்ணற்ற பக்தர்கள் வந்திருந்து தங் களது பிறவிப் பயனை அடைந்திட அருளும்படி வேண்டினர்.

காஞ்சிபுரத்தில் சிறிதுகாலம் தங்கியிருந்த சித்தர் அங்கிருந்து மதுரைக்கும் தென்காசிக்கும் பயணமாகி தன்னை நாடிவரும் பக்தர்களுக்கெல்லாம் நன்மை அளித்து நல்வாழ்வையும் புதிய திருப்பத்தையும் தந்தருளினார்.

தென்காசியில் மூன்றாவது சமாதி நிலையை அடைந்த சித்தர் அதிலிருந்து உயிர்த்தெழுந்து மீண்டும் மதுரை வந்து பலப்பல அற்புதங்களை நிகழ்த்தினார்.

1920ம் வருடம் மதுரை ரயில் நிலையத்திற்குச் சென்ற சித்தர் அங்கேயிருந்த ஒரு ரயிலில் ஏறி ஒரு வெள்ளைக்கார துரைக்கு ரிசர்வ் செய்யப்பட்டிருந்த முதல் வகுப்பின் இடத்தில் உட்கார்ந்துவிட்டார். துரை அங்கே வந்து சித்தரை எழுந்திருக்கும்படி சொல்ல, அவர் மௌனமாக இருந்தார். உடனே அவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று முறையிட, கல்யாண ராமய்யர் என்கிற அந்த ஸ்டேஷன் மாஸ்டர் சித்தரை வலுக்கட்டாயமாக அழைத்துவந்து இரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் விட்டுவிட்டார்.

சற்று நேரத்தில் வண்டி புறப்பட ஆயத்தமாகியது. ஆனால் வண்டி சற்றும் நகரவில்லை. டிரைவர் தன்னால் முடிந்தவரை முயற்சித்தார் முடியவில்லை. அடுத்து பொறியாளர்களை அழைத்து வர அவர்கள் வண்டி நல்ல நிலையில் இருந்தும் ஏன் புறப்படவில்லை என்று குழம்பினார். இந்த நேரத்தில் சித்தரைப் பற்றி அறிந்திருந்த பக்தர் ஒருவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று சித்தரை நீங்கள் வண்டியிலிருந்து இறக்கியதால்தான் நகர மறுக்கிறது. அவர் விரும்பிய இடத்தில் அவரை உட்கார வையுங்கள். தானே வண்டி நகரும் என்று சொல்ல. அவர் சித்தரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுவிட்டு துரையை இடம் மாற்றிவிட்டு அங்கே உட்கார வைத்தார். அடுத்தநொடி என்ன ஆச்சர்யம். வண்டி நகர ஆரம்பித்தது.

அதேபோல் இறந்த சிறுவனை உயிர்பிழைக்க வைத்த அதிசயத்தையும் சித்தர் நிகழ்த்தியிருக்கிறார்.

திண்டுக்கல் ரயில்வே ஸ்டேஷனில் வேலை பார்த்த கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்பவரின் பத்து வயது மகன் நண்பர்களுடன் விளையாடும்போது இறந்துவிட அவன் குடும்பமே நிலை குலைந்துபோனது.

சித்தரின் பக்தரான கிருஷ்ணமூர்த்தி சித்தரிடம் தன் மகனைக் காப்பாற்றும்படி முறையிட, அவரது வீட்டுக்குச் சென்ற சித்தர் "இறந்த சிறுவனுடைய உடலுடன் மூன்று நாட்கள் நான் ஒரு

தனி அறையில் தங்க வேண்டும். அதற்கு சம்மதித்தால் இவன் உயிர் பிழைப்பான்" என்றார். பெற்றோர் சம்மதிக்க சித்தர் இறந்த சிறுவனின் உடலோடு ஒரு தனி அறைக்குள் நுழைந்தார்.

நான்காம் நாள் அதிகாலை சிறுவன் உயிர் பிழைத்தானா? என்று பார்க்க ஊரே அந்த வீட்டின் முன்பாக கூடிவிட்டது.

சித்தர் தனது சக்தி முழுவதும் பயன்படுத்தி இறந்த சிறுவனின் உடல் முழுவதும் தனது கரங்களால் தடவியபடி வந்தார். அடுத்த நொடி என்ன ஆச்சர்யம்! அந்த சிறுவன் தூக்கத்திலிருந்து எழுபவனைப்போல் எழுந்து வெளியே வந்தான்.

உடனே சித்தர் அந்தச் சிறுவனிடம் 'அடேய் காவேரிக்கு ஓடு... குளிச்சிட்டு வா... பிறகு பழைய சாதம் சாப்பிடு" என்று சொல்ல அவன் சிரித்த முகமாய் ஓட ஆரம்பித்தான்.


சுற்றியிருந்தவர்கள் இது கனவா... நினைவா? என்று ஆச்சர்யமான முகத்துடன் சித்தரை வணங்க ஆரம்பித்தனர்.

மரணத்தையே மாற்றியமைக்கும் சக்தி படைத்திருந்த மகாசித்தரால் ஏராளமான பேர் புத்திர பாக்கியம் என்கிற அருளைப் பெற்றிருக்கிறார்கள். அவரை மனமுருகி வேண்டினாலே குடும்பம் ஆலமரம்போல் தழைக்கும். துன்பம் விலகும். பிணிகள் அகலும் என்று திருவண்ணாமலை சேஷாத்ரி மகானே எழுதியிருக்கிறார்.

1923ம் வருடம் மதுரையில் சித்தியடைந்த குழந்தையானந்த சித்தர் இப்பொழுதும் மதுரை கோச்சடை என்கிற அரசரடி பகுதியில் வளவாசல் எனும் இடத்தின் வடக்காக அமைந்துள்ள தனது சமாதியைத் தேடி வரும் பக்தர்களுக்கு அருள் பாவித்துக் கொண்டிருக்கிறார்.

இதெல்லாம் நிஜமா? சாத்தியமா? என்ற கேள்வி உங்களுக்கு எழுமானால் ஒருமுறை குழந்தையானந்த சித்தரின் சமாதிக்குச் சென்று உங்கள் கேள்வியை அவர் முன்னே வையுங்கள். இதில் குறிப்பிட்டுள்ள அத்துணையும் நிஜம் என்பார் அந்த மகாசித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 11

## ஸ்ரீலஸ்ரீ சித்தானைக்குட்டி சித்தர்

சித்தர்களை வேதியியலின் முன்னோடிகள் என்று சொல்லலாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூலிகைகளை ஆராய்ந்து அவற்றிற்கு ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றக்கூடிய வேதியியல் பண்பு இருக்கிறது என்று கண்டறிந்து எழுதி வைத்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு "பொன்னாவரை மூலிகையை வேரோடு பிடுங்கி வந்தது, ஒரு களஞ்சு உப்புவும் சேர்த்துத் தைலம் இறக்கி, அந்த தைலத்தை பித்தளையின் மேல் பூசினால் மாற்றுத்தங்கம் உருவாகும்" என்கிறார் போகர் சித்தர். அதே போன்று "பொன்னுமத்தை, முசுட்டை, வசளை, கறுப்புக் கையாந்தகரை, சிறியாநங்கை, பெரியாநங்கை போன்ற மூலிகைகளுக்கு செம்பை

தங்கமாக்கக்கூடிய பண்பு இருக்கிறது என்றும் கல்லுப்பு நூறு பலம், சீனம் பத்து பலம், வெடியுப்பு பத்து பலம் சேர்த்து நன்றாகப் பொடித்து, ஒரு செம்புப் பாத்திரத்தில் போட்டு, அதில் பழச்சாறும் தயிரும் விட்டுக்கலந்து, பூமிக்குள் குழிதோண்டி அதற்குள் குதிரையின் சாணத்தைப் போட்டு நன்றாக மிதித்து சமன் செய்துவிட்டு, அதற்கு மேலே மூலிகைக் கலவைச் செம்பு பாத்திரத்தை வைத்து மூடி, அதன் மீது குதிரை சாணத்தைப் போட்டு மூடி மண்ணில் புதைத்துவிட வேண்டும். ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த செம்பு பாத்திரத்தை எடுத்துப் பார்த்தால் மூலிகைக் கலவைகள் ஒன்று சேர்ந்து தங்கமாகியிருக்கும்" என்கிறார் போகர்.

இது போல் மூலிகைகளுக்குள் இருக்கிற வேதியியல் பண்புகளைப் போன்று கல், மண், பாறை அவற்றின் மீது உப்பு கலந்த காற்றும் நீரும் பட்டு அதனால் உருவாகியிருக்கும் பாஷாணங்கள், உப்புகள், பிராணிகளின் உறுப்புகளான நகம், பல், எலும்பு, தோல், முட்டை ஓடு, சிப்பி ஓடு என எல்லாப் பொருட்களையும் ஆய்வு செய்து அவற்றின் வேதியியல் பண்புகளை விளக்கியிருக்கிறார் போகர்.

அப்படியென்றால் இப்பொழுதும் செம்பை தங்கமாக்க முடியுமா? என்று உங்கள் மனதில் கேள்வி எழலாம். கண்டிப்பாக முடியும். ஆனால் அது சித்தர்களின் வழி வந்தவர்களால் மட்டுமே முடியும். நம்மால் அது முடியாது. காரணம், தங்கம் செய்வதற்கான பாடமுறைகளையும், மூலிகைக் கலவையின் சரியான பங்கினையும் நம்மால் அறிய முடியாது.

இப்பொழுது நீங்கள் நம் தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்த சித்தானைக்குட்டி சித்தரைப் பற்றி அறியப்போகிறீர்கள்.

இவர் ஒரு அரச குடும்பத்தில் பிறந்து, இல்லற வாழ்க்கையை உதறிவிட்டு துறவியானவர். இவரது தந்தை இராமநாதபுரம் தனிநாடாக இருந்தபோது அங்கே பெருநாளி சமஸ்தானத்தின் சிற்றரசராக இருந்தவர். ராஜபோக வாழ்க்கை, செல்வச்செழிப்பு, ஒரே மகன் என்கிற அதீத கவனிப்பு எல்லாவற்றையும் வேண்டாம் என ஒதுக்கிவிட்டு இறைவனும் மகானும் மட்டுமே தன் வாழ்க்கை என ஆன்மிகத்தில் மனதை திரும்பினார்.

ஒருமுறை பெருநாளி சமஸ்தானத்தில் பெரியதொரு தொற்றுநோய்ப் பரவி பல நூறு பேர் இறந்துபோனார்கள். இதில் சிலரின் ஒட்டுமொத்த குடும்பமும் அந்த நோய்க்கு பலியான கொடுமை நிகழ்ந்தது. ஒருவரை ஒருவர் பார்த்து பேசினாலோ, தொட்டாலோகூட நோய் கிருமிகள் அவர்களை தொற்றிக் கொள்ளும் அபாயம் இருந்தது. ஆனால் அந்தச் சூழலிலும் இரண்டு சித்தர்கள் பெருநாளி சமஸ்தானத்தின் ஒவ்வொரு தெருவாக வலம் வர ஆரம்பித்தனர். வீட்டுக்குள்ளே தொற்றுநோய்க்கு பயந்துகிடந்த மனிதர்களை அழைத்து உணவு தருமாறு கேட்டனர்.

பார்த்தாலே நோய் தொற்றும் என்று பயந்துகிடந்தவர்கள் வெளியே வரவே அஞ்சினார்கள். அதிலும் ஒரு சிலர் சற்று நம்பிக்கையோடு வெளியே வந்து அந்த இரண்டு சித்தர்களுக்கும் உணவு அளிக்க அந்தக் குடும்பத்தினருக்கு மட்டும் தொற்றுநோயின் தாக்கம் ஏற்படவில்லை. இதை அறிந்த அந்த சமஸ்தான மக்கள் தினமும் ஒவ்வொரு வீட்டுக்கும் அவர்களை வரவழைத்து உணவு பரிமாறினார்கள். சித்தர்களின் இந்த அற்புதங்களை அறிந்த பெருநாளி சமஸ்தான சிற்றரசர் தனது மகன் கோவிந்தசாமியிடம் அவர்களை தங்கள் வீட்டுக்கு அழைத்துவரும்படி அனுப்பி வைத்தார்.

தங்கள் முன்னே வந்து நின்ற அரசர் மகன் கோவிந்தசாமியை பார்த்த சித்தர்களுக்கு சட்டென்று மனதில் ஏதோ உணர்வு ஏற்பட்டது. அடுத்த நொடி அவரை வாரி அணைத்து உச்சந்தலையில் கரம் பதிந்து ஆசீர்வதித்தனர்.

வந்திருப்பவர்கள் மிகச் சிறந்த மகான்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் புகழ்வாய்ந்த சித்தர்களாக, கலியுலகக் கடவுளாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நவநாத சித்தர், பெரியானைக்குட்டி சித்தர் என்கிற அந்த சித்துப் புருஷர்கள் தன்னை வாரியணைத்து ஆசீர்வதித்ததில் ஆச்சர்யமடைந்த கோவிந்தசாமி 'நான் யார்?' என்று அவர்களிடம் கேட்டார். 'நீ இந்த ஊருக்கு மட்டும் பிறந்தவனல்ல. இந்த உலகிற்காகவும் உலக மக்களின் நலனுக்காகவும் வாழப் பிறந்தவன். அரசர் மகன் என்கிற குறுகிய வட்டத்திலிருந்து வெளியேறி உலகத்து மக்களுக்காக அற்புதங்களை நிகழ்த்த வா...' என்று அந்த

இரு சித்தர் பெருமான்களும் அழைக்க அடுத்த நொடி அரச உடையை கலைந்து துறவி போல் வேட்டியும் துண்டுமாக மாறினார்.

அந்த நிமிடம் முதல் அவரது எண்ணம், செயல், வாழ்க்கை எல்லாமும் எளியவர்களுக்காகவும் உலக நன்மைக்காகவும் மாறியது.

பெருநாளி சமஸ்தானம் அந்த மூன்று சித்தர்களால் மறுவாழ்வு பெற்றதும் நவநாத சித்தரும், பெரியானைக்குட்டி சித்தரும் இலங்கைக்குப் புறப்பட்டனர். அவர்களுடன் சித்தானைக்குட்டி சித்தரும் புறப்பட்டார். ஆனால் தூத்துக்குடியில் இருந்து புறப்பட்ட கப்பலில் சித்தானைக்குட்டி சித்தருக்கு இடம் கிடைக்கவில்லை. அதனால் 'நீ எங்களுக்கு முன்பாக இலங்கையில் இரு. அதற்கு நாங்கள் உனக்குச் சொல்லிக் கொடுத்த அமானுஷ்ய சக்தியை பயன்படுத்து' என்று அவர்கள் சொல்லிவிட்டு கப்பலில் பயணமானார்கள். அவர்கள் சொன்னதுபோலவே முதன் முதலாக தன்னிடமிருந்த அமானுஷ்ய சக்தியை பயன்படுத்தினார் சித்தர். என்ன ஆச்சர்யம், சட்டென்று ஒரே நொடியில் தன்னை ஒரு பெரு ஒளி ஒன்று தாக்கியது போலவும் அந்த ஒளியினுள்ளே தனது உடல் கரைந்துபோனது போலவும் உணர்ந்த சித்தர் அடுத்த நொடி அந்த பெருஒளியிலிருந்து மீண்டும் தனது உடல் வெளிப்பட்டு மண்ணில் நிற்பதுபோலவும் உணர்ந்தார். அந்த உணர்வுடன் அவர் தனது கண்களை திறக்க.. அவருக்கு எதிராக நவநாத சித்தரும், பெரியானைக்குட்டி சித்தரும் நின்றிருந்தார்கள்.

'அப்படியென்றால் நான் நொடிப்பொழுதில் மறைந்து தோன்றியது நிஜமா? இப்போது நிற்பது இலங்கை மண்ணிலா?' என்று அவர்களைப் பார்த்து கேட்க.. புன்னகைத்த அவர்கள் 'உன் மனோ வலிமை சக்தி பொருந்தியது. உன்னால் நினைத்த நொடியில் தோன்றி மறைய முடியும். இதை உலக நன்மைக்காக மட்டுமே பயன்படுத்து...' என்று சொல்லியபடி அவரை தங்களுடன் அழைத்து சென்றார்கள்.

இலங்கை மண்ணில் நவநாத சித்தர், பெரியானைக்குட்டி சித்தரின் சீடராக சித்தானைக்குட்டி சித்தர் ஏகப்பட்ட சித்துக்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தியிருக்கிறார்.

நெற்றியில் திருநீறும், வெண்மையான தாடியும் கனிவான பார்வையுடன் கொண்ட சித்தர் மிகச்சாதாரண மனிதர் போன்று ஒரு வெள்ளை துண்டை மட்டுமே உடுத்தியிருப்பார். அவரிடம் என்ன பிரச்னையோடு யார் நெருங்கினாலும் அவர்கள் மனதில் இருப்பதை கண்ணாடியில் பார்ப்பதை போன்று ஒரு நொடிப் பார்வையிலே உணர்ந்து அவர்களுக்குள் இருக்கும் பிரச்னைகளை சொல்லி அதை விரட்டியடிப்பார். தீராதநோய், பில்லிசூன்ய பிரச்னை மந்திர தந்திரங்கள் எல்லாமும் சித்தானைக்குட்டி சித்தரின் கைகள் தன் மீது பதிந்த நொடியே பறந்துவிடும்.

அவர் அங்கே நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளமானவை. ஒருமுறை கதிர்காமத்தில் முருகப்பெருமானை தரிசித்த சித்தர் அவரை நேரடியாக காணவேண்டும் என தவத்தில் ஆழ்ந்தார். அதையுணர்ந்து முருகப்பெருமானே நேரில் வந்து 'வா சித்தானைக்குட்டி... உன்னை எம்பெருமான் அழைத்து வரச் சொன்னார் என ஒரு சுரங்கப்பாதையின் வழியே அழைத்துச் சென்றார். சற்றுநேரத்தில் உலகையே ஒளி வெள்ளமாக்கும் மிகப்பெரிய ஒளிப்பிழம்பு தோன்ற முருகப்பெருமான் சிரித்த முகமாய் சித்தானைக்குட்டி சித்தருக்கு காட்சி தந்தார்.

உள்ளம் முழுதும் மகிழ்வாக... ஆனந்த கண்ணீரோடு சித்தர் முருகப்பெருமானை வணங்க. அவரது தவத்தையும் உண்ணாநோன்பையும் கலைக்கும் விதமாக ஏழு மலைகளிலிருந்தும் சுனைகளிலிருந்து நீரை விரலால் தொட்டு எடுத்து மூன்று சொட்டுகள் சித்தரின் வாய்க்குள் விட்டார்.

தேவ அமிர்தமாய் இனித்த அந்த நீரை ஆனந்தமாய் கண்மூடி சித்தர் ருசித்தார். அடுத்த நொடி அவர் கண்திறந்த போது கதிர்காமம் கோயிலுக்கு வெளியே நின்றிருப்பதை உணர்ந்தார்.

இறைவனை நேரில் கண்டுணர்ந்த பாக்கியம் அந்த மகாசித்தருக்கு கிடைத்தது. இதை எல்லோரும் அறிந்து அவரை நெருங்கி நல்லாசி பெற்றுச் சென்றனர்.

சித்தரின் மூச்சுக்காற்று பட்டாலே போதும் அவர்களது பிரச்னைகள் தீர்ந்துவிடும். அவரது உமிழ்நீர் பட்டாலே

நோய்கள் பல குணமாகிவிடும். கல்முனை என்கிற இடத்தில் வியாபாரியாக இருந்த வீரப்பச் செட்டியாருக்கு ஒரு கண்ணில் பார்வை குறைபாடு இருந்தது. எங்கெல்லாமோ வைத்தியம் பார்த்தும் குணமாகாதவருக்கு சித்தரின் உமிழ்நீர் ஏதேச்சையாக அவரின் கண்களில்பட அடுத்தநொடி கண் பார்வை பிரகாசமானதை ஈழத்து சித்தர் நூல் விவரிக்கிறது.

அதுமட்டுமல்ல. சித்தானைக்குட்டி சித்தரை தெய்வமாக வணங்கிய கன்னங்குடாவை சேர்ந்த கந்தப்போடியார் என்பவரது மனைவி உடல் நலமில்லாமல் இருந்து திடீரென்று ஒருநாள் இறந்துபோனார். தன் மனைவி மீது மிகுந்த பாசம் வைத்திருந்த கந்தப்போடியார் என் மனைவியை என் கடவுள் சித்தானைக்குட்டி சித்தர் காப்பாற்றி விடுவார் என் அவரை தேடிச் சென்று 'என் மனைவியை காப்பாற்றுங்கள்' என அழுதார். மனமிறங்கிய சித்தானைக்குட்டி சித்தர் அந்த பெண்மணி இறந்துகிடந்த வீட்டுக்குச் சென்றார். சுற்றிலும் கண்ணீருடன் கூடியிருந்த மக்கள் சித்தரின் வருகையை உணர்ந்து அமைதியானார்கள்.

சித்தர் தனது கையில் கொண்டுவந்திருந்த விபூதியை அப்பெண்ணின் நெற்றியில் பூசி விட்டு.. 'என்னம்மா.. இன்னும் தூக்கமா? எழுந்திரிங்க' என்று சொல்ல... அடுத்த நொடி மின்சாரம் தாக்கிய உணர்வாய் சராலென உடலை வெட்டியபடி அப்பெண் எழுந்து நிற்க. சுற்றிலும் இருந்தவர்கள் ஆச்சர்யத்தில் வாய் பிளந்தார்கள்.

இப்படியும்கூட நடக்குமா? மாண்டவர் உயிர் பிழைக்க முடியுமா? என எல்லாரும் ஆச்சர்யத்துடன் சித்தரை வணங்க, புன்னகை முகமாய் சித்தர் அங்கிருந்து நகர்ந்தார்.

அதேபோல் கதிர்காமக் கோயில் திருவிழாவில் தீப்பிடித்ததை தனது வேட்டியில் தீப்பொறியை உண்டாக்கி உணர்த்தியிருந்தார். அதுமட்டுமா? தன்னை தரிசிக்க வந்த குஞ்சன் என்வருக்கு உணவு வாங்கித்தரும் விதமாக கடைக்கு அழைத்துச் சென்றார் சித்தர். அது அசைவ உணவு விடுதி. ஆனால் குஞ்சன் அசைவ உணவு உண்ணாதவர். அங்கே பரிமாறப்படும் மீன், இறைச்சிகளைப் பார்த்து குஞ்சன் முகம் மாற... 'உங்களுக்கு சைவ சாப்பாடு வரும் கவலைப்படாமல் சாப்பிடுங்கள்' என்றார்

சித்தர். அதன்படி குஞ்சன் சாப்பிடத்துவங்க கடை ஊழியர் மீன்குழம்பை ஒரு பாத்திரத்தில் கொண்டுவந்தார். முதலில் சித்தருக்கு குழம்பை ஊற்ற அது மீன் குழம்பாக இருந்தது. அதே குழம்பை அவருக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த குஞ்சனுக்கு ஊற்றும்போது கத்தரிக்காய் குழம்பாக மாறியது. சுற்றிலும் இருந்தவர்கள் ஆச்சர்யத்துடன் பார்க்க... சித்தர் அவர்களிடம் கண் அசைத்துவிட்டு சாப்பிட ஆரம்பித்தார். குஞ்சனும் சித்தரின் மகிமையை உணர்ந்து கண்ணீரோடு கத்திரிக்காய் சாதத்தை சாப்பிட ஆரம்பித்தார்.

இந்த அதிசய நிகழ்வுகளைப் போலவே தண்ணீரில் விளக்கை எரியவிட்டது. முடவனை தன் கரம் பதித்து நடக்க வைத்தது. ஆஸ்துமா, கைகால்கள் செயலிழப்பு, புற்றுநோய் போன்ற தீராத நோய்களை தனது அமானுஷ்ய சக்தியால் குணப்படுத்தியது என ஏகப்பட்ட அதிசயங்களை நிகழ்த்திய சித்தர் 1951ம் வருடம் இம்மண்ணிலிருந்து தாம் விடைபெறப் போவதை முன்பாகவே தனது பக்தர்களுக்குத் தெரிவித்தார். 1951ம் வருடம் ஆகஸ்ட் மாதம் பத்தாம் தேதியன்று தான் ஜீவ சமாதி நிலைக்குச் செல்ல இருப்பதையும் தான் சமாதியான பின்பு மூன்றாவது நாளில் தனது அடி வயிற்றிலிந்து இரத்தம் பெருகும் என்றும் அப்போது தனது ஜீவன் உடலைவிட்டு பிரியும். அதன்பிறகு தனக்கு சமாதி எழுப்புங்கள் என்றார்.

அதன்படி சமாதியடைந்த அவருடைய உடலில் மூன்று நாட்கள் எப்படி இரத்தம் ஓட்டம் இருந்தது என அன்றைய மருத்துவர்களே வியந்துபோனார்கள். அவர் சொன்னபடியே மூன்றாம் நாள் அவரது அடிவயிற்றில் இரத்தம் பெருக அதன் பிறகு பக்தர்கள் அவரது பூவுடலுக்கு சமாதி செய்வித்தனர்.

இன்னும் அம்மகா சித்தர் காரைத்தீவிலுள்ள அவரது சமாதியிலிருந்து தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

நீங்களும் இலங்கைக்குச் செல்லும்போது அவரது சமாதியை தரிசித்துவிட்டு வாருங்கள். உங்களுக்கும் நலம் பல வழங்கி ஆனந்தம் அளிப்பார் அப்புனித மகான் சித்தானைக்குட்டி சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 12

## ஸ்ரீலஸ்ரீ தெய்வத்திரு சர்க்கரையம்மன் சித்தர்

சென்னை திருவான்மியூரில் வாழ்ந்து பல சித்தாடல்களையும், அற்புதங்களையும் நிகழ்த்திய குருதேவ சர்க்கரை அம்மன் என்கிற சித்தரைப் பற்றி இப்போது அறியப்போகிறீர்கள்.

தெய்வத்திரு சித்தர் அம்மா அவர்கள் 1854-ம் வருடம் இப்பூமியில் அவதரித்தார்கள். பிறந்தபோது இவரது அருட்பொருந்திய கண்களின் ஒளியைப் பார்த்து இவரது தந்தையான சேஷக் குருக்கள் பிரமித்துப் போனாராம். அன்றே தனது மகள் மிகச்சிறந்த சித்தராக உருவாவார் என்பதை அவருக்குள் உணர்ந்திருந்தார். அதனாலேயே சர்க்கரை அம்மாவை மிகவும் அன்புடன் கவனிப்புடன் வளர்த்து வந்தார்.

திடீரென்று ஒருநாள் சர்க்கரை அம்மாவின் தாயார் இறந்துவிட சேஷக்குருக்கள் சுப்பம்மாள் என்பவரை இளையதாரமாக

மணந்தார். அந்த சுப்பம்மாள் என்பவர் சர்க்கரை அம்மனின் தெளிவையும் அமானுஷ்ய சக்தியையும் அறிந்து அவரை தனது பெற்ற மகளாகவே பாவித்து வளர்த்தார்.

எட்டு வயதிருக்கும்போதே சர்க்கரை அம்மனுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதாவது அவர் அப்பாவின் இளைய தாரமான சுப்பம்மாளின் சகோதரர் சாம்பசிவன் என்பவரை மணமுடித்தார். அவருக்கும் இவருக்கும் வயது வித்தியாசம் அதிகம். இருப்பினும் தனது கணவனின் சொல்லுக்கும், செயலுக்கும் ஏற்ற குணவதியாக வாழ்க்கையை நடத்தினார்.

சித்தரம்மா, அந்த இளவயதில் இல்லற வாழ்க்கையை துவக்கினாலும் மனம் முழுவதும் இறைபக்தியிலும் உலக நன்மையிலும் மட்டுமே இருந்தது. எப்போதும் ஸ்படிக லிங்கம் ஒன்றை வைத்தபடி தியான நிலையில் பூஜித்துக் கொண்டிருப்பார். ஒரு நாள் அந்த ஸ்படிக லிங்கத்தில் சிறியதாக பின்னம் ஏற்பட... உடனே துடிதுடித்துப் போன சர்க்கரையம்மன் தனது தொடைப்பகுதியை அறுத்து... உள்ளிருந்த எலும்பை அறுத்து ஓட்ட வைக்க முயன்றாராம். அச்சமயம் அவரது தந்தை அதை அறிந்து துடித்தபடி மகளிடம் “என்னம்மா இது?” என்று கேட்க... அம்மன் சிரித்துக் கொண்டே “என் ஈஸ்வரனுக்கு சின்ன காயம் ஏற்பட்டது. அதற்குத்தான் இந்த வைத்தியம். எனக்கு ஒன்றும் ஆகாது” என்றாராம். அவர் சொன்னபடியே அவர் தொடையில் அறுபட்ட இடம், கண் இமைக்கும் நேரத்தில் மூடி... சாதாரண சதைப்போன்று மாறிவிட... அவரின் அப்பா ஆச்சரியத்தின் எல்லைக்கே போனார்.

அம்மாவின் அமானுஷ்ய சக்தியும் ஆசிபெறுபவர்களுக்கு எல்லாவித நலன்களும் கிடைக்கும் விஷயமும் மெல்ல மெல்ல பரவ ஆரம்பிக்க... அம்மாவைத் தேடிவந்து அருள் ஆசி பெற பலர் காத்திருக்க ஆரம்பித்தனர்.

அன்று மலர்ந்த தாமரைப் போன்று எந்த நிமிடமும் முகமலர்ச்சியும் தெய்வீகமான தோற்றத்திலும் இருக்கும் அம்மனைப் பார்த்தாலே நமக்குள் இருக்கும் பிரச்னைகளெல்லாம் பறந்துவிட்ட மகிழ்ச்சியும் பேரானந்தமும் ஏற்படும்.

சிறுவர், பெரியவர், ஏழை, பணக்காரர் என்கிற எந்த வித்தியாசமும் இல்லாமல் தன்னை நாடி வருபவர்களை முகம் மலர வரவேற்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அருளாசி வழங்குவார் அன்னை.

அம்மாவின் முப்பது வயதில் ஒருநாள் உலகமே வியக்கும் விதமான ஒரு பேரானந்த நிலை ஏற்பட்டது. அன்று அவர் கண்மூடி தியானத்தில் இருந்தபோது... பத்தாயிரம் வாட்ஸ் மின்னல் ஒளியைப் போன்று சக்தி மிகுந்த ஒரு பேரானந்த ஒளியைக் கண்டார்கள். "பர ஒளி பர ஒளி" என்கிற ஒளி தரிசனம் மிகச் சிறந்த ஞானிகளுக்கும் சித்த புருஷர்களுக்கும் மட்டுமே கிடைக்கும். சக்தி அம்மாவிற்கு அந்த தரிசனம் கிடைத்தது.

'ஆகாயத்திற்கும் மேலே உள்ள வெற்றிடமான 'இன்னர் ஸ்பேஸ்'க்கு அடுத்து சந்திர, சூரிய நட்சத்திரங்களைத் தாண்டிய வெற்றிடவெளிதான் பரவெளி... அதை ஆன்மாவினால் மட்டுமே தரிசிக்க முடியும். வெறும் கண்களால் தரிசிக்க இயலாது. அதிலும் அப்படி ஒளியை தரிசிப்பதற்கு பத்தாண்டுகளுக்கும் மேலான தவவலிமை வேண்டும்" என்கிறார்கள் வேதாந்திகள். அம்மா அந்த ஒளியை தனது ஆன்மாவினால் தரிசித்து ஆனந்தப்பட்டார்கள்.

அம்மா ஒருநாள் திடீரென்று தனது இருப்பிடத்தை கோளளீஸ்வரர் மடத்திற்கு மாற்றிக்கொண்டார். அங்கே குளிர், பனி, வெயில் என எந்த சூழ்நிலைகளையும் உணராமல் மொட்டை மாடியில் சம்மணமிட்டு உட்கார்ந்தபடி தியான நிலையில் இருப்பார்கள்.

ஒருநாள் தேவராஜன் என்பவர் அம்மாவை தரிசிக்கச் சென்றபோது அம்மா தனது கை, கால், தலை என அங்க அவயங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்துப் போட்டிருந்தார்கள்.

அதைக் கண்டு திடுக்கிட்ட தேவராஜன், 'அம்மாவிற்கு ஏதோ ஆகிவிட்டது' என்று கத்த முயன்றாராம்... ஆனால் அதற்குள் அம்மா தனது அங்க அவயங்களை ஒன்றாக்கி எழுந்து சிரித்துக்கொண்டே... "இது ஒரு சாதாரண சித்து விளையாட்டு.

நீ பயப்படாமல் போ..” என்று சொல்ல’ தேவராஜன் திகைப்பான முகத்துடன் அம்மாவை தரிசித்துவிட்டு வந்தாராம்.

இதுபோன்ற சித்துக்களை நிறையவே செய்திருக்கிறார் அம்மா. ஒருமுறை அம்மா அவர்கள் வான்வெளியில் பறந்து திரிந்ததை தான் நேரில் ‘கண்டதாக தமிழறிஞர் திரு.வி.க அவர்கள் தனது உள்ளொளி எனும் நூலில் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல் அம்மா தவநிலையில் உட்கார்ந்துவிட்டால் மாதக்கணக்கில் உணவு, நீர் இல்லாமல் காற்றை மட்டுமே சுவாசித்துக் கொண்டிருப்பார். பலநாட்களுக்குப் பிறகு அவர் தியான நிலையிலிருந்து சமநிலைக்குத் திரும்பும்போது உணவின்மையால் அவரது உடலில் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் இயல்பான உடல்நிலையில் இருப்பதைக் கண்டு பிரபல மருத்துவர் எம்.சி. நஞ்சுண்ட ராவ் அவர்களே பிரமித்துப் போவார்களாம்.

“அம்மாவின் கண்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அவர் யார் ஒருவரைப் பார்த்தாலும் அடுத்த நொடி அந்த மனிதருக்குள் இருக்கும் பிரச்னைகள், நோய்கள் எல்லாவற்றையும் அம்மா உணர்ந்துவிடுவார்கள். அந்தப் பிரச்னைகளை அந்த மனிதர்கள் உணர்வதற்கு முன்னே அவர்களின் உடலிலிருந்து வெளியேற்றிவிடுவார்கள். அவ்வளவு சக்தி மிகுந்தவர் சர்க்கரை அம்மா..” என்று தனது குறிப்பேட்டில் எழுதி வைத்திருக்கிறார் மருத்துவர் நஞ்சுண்டராவ்.

அதேபோல், அம்மா அவர்களின் பறக்கும் சக்தி அன்றைய காலகட்டத்தில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டாலும், அம்மாவின் இந்த சக்தியை சென்னையில் வசித்த சில விஞ் ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். அன்று சென்னை மியூசியத் தலைவராக இருந்த ஒரு ஐரோப்பியர் அம்மாவின் அமானுஷ்ய சக்தியையும் பறக்கும் வல்லமையையும் உணர்ந்து கொண்டு, அம்மா அவர்கள் பறவை இனத்தைச் சேர்ந்தவர் என்று திகைப்புடன் கூறினாராம்.

அம்மா அவர்கள் ஒரு சித்த புருஷர். அஷ்ட சித்திக்களில்

லஹிமா சித்தியை மிகவும் அறிந்தவர் என்கிறார் திரு.வி.க.

அம்மா தியான நிலையிலிருக்கும்போது அவர் இடையை சுற்றி உயிருள்ள ஒரு நாகப்பாம்பு இருக்குமாம். ஆனால் அம்மாவை தரிசிக்க வருகிற பத்தர்களை பயமுறுத்தாத வகையில் மென்மையாகத் தவழ்ந்து சென்றுவிடுமாம்.

உலக உயிர்கள் எல்லாமே மென்மையானவை. அவன் என் சீடன் என்பார்களாம் அம்மா.

சென்னை மாநகர் முழுக்க அம்மாவின் தெய்வீக சக்தியின் மகிமை தெரிய ஆரம்பித்ததில் தினந்தோறும் நூற்றுக்கணக்கானோர் அம்மாவைத் தேடிவந்து அவரின் அருளாசியைப் பெற்று நலமடைந்தார்கள்.

குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள், தீராத வியாதியஸ்தர்கள் நடக்க முடியாதவர்கள், பேய், பில்லி சூனியம், ஏவல் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்கள் என எல்லாருடைய பிரச்னைகளையும் தீர்த்து வைத்து சுக வாழ்வளித்திருக்கிறார் அம்மா.

1901-ம் வருடம் பிப்ரவரி மாதம் 26-ம் நாள் அம்மாவின் ஆன்மா உடல் ஜீவசமாதி நிலையை அடைந்தது.

சென்னை திருவான்மியூர் கலாசேத்ரா காலனியிலிருக்கும் அம்மாவின் சமாதியில் பலர், தங்களது குறைகளைச் சொல்லி அம்மாவின் இறையருளால் நலம் பெறுகிறார்கள்.

ஸ்ரீமத் ஸ்யாமளா என்பவரின் சகோதரியின் மகள் சண்டீசர் நகரில் வசித்து வரும்போது கருவுற்றார். அப்போது கை, கால்களில் வீக்கம் அதிகமாகி ஆபத்தான நிலையில் சென்னை வந்தார். இங்கே சென்னையில் அவரை மிகப் பிரபல மருத்துவமனையொன்றில் பரிசோதித்தபோது எசிலி என்கிற கொடிய நோய் தாக்கியிருப்பது தெரிந்து அதிர்ந்து போனார்கள். உடனே சர்க்கரை அம்மாவின் பக்தையான ஸ்ரீமத் ஸ்யாமளா, அம்மாவிடம் வேண்டிக் கொண்டு மருத்துவமனையிலிருந்த அவரின் சகோதரி மகளுக்கு அம்மாவின் திருநீறைப் பூசி "அம்மாவிடம் முறையிடு அம்மா உன்னை குணமாக்குவார்"

என்றார். அதன்படி அவரும் மனமுருக வேண்டினார்.

என்ன ஆச்சரியம்... அம்மாவின் அருளால் அடுத்தவாரம் மீண்டும் அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஆச்சரியத்தில் படபடத்தார்கள். காரணம் எசிலி என்கிற கொடிய நோயின் தாக்கம் இப்போது எங்கே போனது என்றே தெரியவில்லை. திகைப்புற்ற மருத்துவர் குழுவே அம்மாவை மனமுருக வேண்டியிருக்கிறது.

அதேபோல் சீதா தேவராஜ் என்பவரின் குழந்தையில்லா குறையை நீக்கி அழகான பெண் குழந்தைக்குத் தாயாக்கியது.

உமாதேவி என்பவரின் மகனுக்கு வேலைவாய்ப்பை அருளியது. கே.விசாலாட்சியின் தொலைந்துபோன பணப்பெட்டியை திரும்பவும் கிடைக்க வைத்தது. பி.தேவகியின் மகளின் சருமநோயை குணப்படுத்தியது. கணபதி என்பவரின் மகனுக்கு மணவாழ்க்கை அமைத்து கொடுத்தது என ஏகப்பட்ட அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார் அந்த அன்புத்தாய்.

என்ன இது நிஜமா? சத்தியமா? என்ற கேள்வி உங்களுக்குள் எழுகிறதா. உடனே சென்னை திருவான்மியூர் கலாசேத்ரா காலனியிலுள்ள அம்மாவின் ஆலயத்திற்குச் செல்லுங்கள். நான் சொன்னது அத்தனையும் நிஜம் என உணர வைத்து உங்களுக்கும் அருளாசி வழங்குவார்... எல்லாம் வல்ல சர்க்கரை அம்மன் தாய்...

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 13

## ஸ்ரீலஸ்ரீ திருவலம் சித்தர்

**வே**லூருக்கு அருகே இருக்கும் திருவலத்தில் வாழ்ந்து ஏராளமான சித்துக்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திய திருவலம் சித்தரைப் பற்றி இப்போது நீங்கள் அறியப் போகிறீர்கள்.

அமைதியான முகமும், ஒளிமிகுந்த கண்களும், கருணை பொங்கும் தோற்றமுமாய் பார்த்தவுடன் நம்முள் பரவசத்தை ஏற்படுத்துவார் அந்த மகாசித்தர்.

இளவயதில் ஒரு சாதாரண சலவைத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததாக அறியப்பட்டவர் அவர். அவருக்குள் இருக்கும் தெய்வீகத்தன்மையும், பிறரின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் அற்புதத்தையும், தீராத நோய்களையும், தீர்த்து வைக்கும் அமானுஷ்ய சக்தியையும்

அறிந்த அந்த கிராம மக்கள் அவரை சித்த புருஷராக அறிய ஆரம்பித்தனர்.

சித்தர்... மிகுந்த பேராற்றல் உள்ளவர் என்றாலும் சாதாரண மனிதரைப் போலவே இருப்பார். தலைமுடி கலைந்திருக்கும். தாடி மீசையுடன் காட்சியளிப்பார். அவரின் கண்கள் மிகவும் சக்தியுள்ளதாக இருக்கும். ஒரு நொடி அவர் நம் கண்களை உற்று நோக்கினாலே போதும். நம்முள் இருக்கும் பிரச்னை அத்தனையும் அவர் அறிந்துகொள்வார்.

எளிமை, இயல்பு, யதார்த்தம் என்று மூன்றும் நிறைந்தவர் திருவலம் சித்தர். எப்பொழுதும் மண்சட்டியில்தான் சாப்பிடுவார். பணம், பொருள் என்பதை அறிந்திடாதவர் அவர். தூக்கம், சோர்வு இல்லாமல் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டே இருப்பார். தோட்டவேலை, மண்வேலை, செடிகொடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல் என எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்.

சித்தரின் மகிமை உணர்ந்து தினமும் அவரைத்தேடி நூற்றுக்கணக்கானோர் வந்திருந்து அருளாசி பெற்றுச் செல்வார்கள். தீராத நோய்களைக்கூட திருநீறு மூலமாகவும், வில்வஇலை மூலமாகவும் குணப்படுத்தியிருக்கிறார்.

திருத்தணிக்கு அருகே இருக்கும் நாகலாபுரத்தைச் சேர்ந்த கணபதி என்கிற நாற்பது வயது இளைஞருக்கு இரைப்பையில் புற்றுநோய் இருந்தது. சென்னையில் அவர் பரிசோதித்தபோது மருத்துவர்கள் ஹிமோதெரபி என்கிற மின்சார சிகிச்சையின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்றார்கள். ஆனால் உணவு செல்லும் பாதையிலும் புற்றுநோய் பரவி இருந்ததால் உணவு உண்ணமுடியாமல் கஷ்டப்பட்ட கணபதி தற்கொலை முடிவுக்குப் போக... அச்சமயம் யாரோ ஒரு பெரியவர் அவரை காப்பாற்றி, 'திருவலம் சித்தரிடம் போ உன் பிரச்னை சரியாகும்' என்று சொல்ல... அந்த இளைஞன் மனசுமாறி திருவலம் வந்திருக்கிறான்... அவன் கண்களை உற்றுநோக்கிய சித்தர்... "தம்பி உன்னால் சாப்பிட முடியல... வயிறு வலி கொல்லுது அதுதானே?" என்று கேட்க, 'நம் பிரச்னையை எப்படி ஒரு நொடியில் உணர்ந்துகொண்டார் இவர்?' என்ற கேள்வியோடு

பார்த்தான் அந்த இளைஞன். உடனே சித்தர், அவனை அருகே அழைத்து வயிற்றுப்பகுதியிலும் மார்பிலும் திருநீறு பூசிவிட்டு கையில் சிறிது வில்வ இலைகளைக் கொடுத்து... "இதில் தினம் ஒரு இலை விடியற்காலையில் சாப்பிட்டு வா. உன்னுள் இருக்கும் நச்சு அழிந்துவிடும்" என்று சொல்ல... 'அரங்கில் மருத்துவத்தால் தீர்க்கமுடியாத வியாதியை இந்த சிறுவில்வ இலை தீர்த்துவிடுமா?' என்ற சந்தேகம் இளைஞனுக்கு எழுந்தது. உடனே சித்தர் அவன் முகத்தைப் பார்த்து "தம்பி நீ நினைப்பது தவறு. இது உன்னை மாற்றும்போ..." என்றார். மனத்திற்குள் நாம் நினைக்கும் விஷயத்தை சித்தர் உடனே புரிந்து கொள்கிறாரே என ஆச்சரியமாய் அந்த இளைஞன் நகர்ந்தான். அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து மீண்டும் அவன் வயிற்றுவலி உணர்ந்தவனாய் ஆங்கில மருத்துவரிடம் செல்ல... அங்கே மறுபடி அவன் உடலை ஸ்கேன் செய்த மருத்துவர், முன்பு அவன் நுரையீரல் பகுதியிலும் தொண்டைப் பகுதியிலும் இருந்த புற்றுநோயின் தாக்கம் இப்போது முற்றிலுமாக மறைந்து போயிருப்பதைப் பார்த்து ஆச்சரியமாய் கேட்டார். 'என்னாச்சு எப்படி இது?' என்று அப்போது அவனுக்கு சித்தரின் முகம் சட்டென நினைவுக்கு வர நன்றியோடு கண்கலங்கினான்.

சாதாரண பூச்சித் தொல்லையினால் தற்போது உனக்கு வயிற்றுவலி வந்திருக்கிறது என ஆங்கில மருத்துவர் மருந்து எழுதித் தர... அந்த நிமிடமே திருவலத்திற்குப் புறப்பட்டான்.

சித்தரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கானவர் குழுமியிருக்க, அத்தனை பேர் முன்னிலையில் சித்தரின் கால்களில் நெடுஞ் சாண்கிடையாக விழுந்து அழ ஆரம்பித்தான்.

சித்தர்... அவன் தோள்களைப் பற்றி எழுப்பி... 'அதான் குணமாகிட்டே இல்ல... சந்தோஷமா இரு...' என்று சொல்ல அவன் நன்றியோடு கரம்கூப்பிவிட்டு நகர்ந்தான்.

சித்தர் இதுபோன்று ஏராளமானோரின் தீராத நோய்களைத் தீர்த்து வைத்திருக்கிறார். மனநிலை பாதிக்கப்பட்டவர், பிள்ளைபேறு இல்லாதவர்கள், கைகால் இல்லாதவர்கள் என பல நூறு பேர் சித்தரின் மகிமையால் குணமாகி நலமடைந் திருக்கிறார்கள். குறிப்பாக, கிளாரினட் இசை வித்வான்

ஏ.கே.சி.நடராஜன் அவர்களின் தங்கையும், சௌகார்பேட்டை ஈராலால் சேட் அவர்களின் மனைவியும் சித்தரின் பச்சிலையால் குணமாகியிருக்கிறார்கள்.

சித்தர் இதையெல்லாம் எந்தவித பிரதியுபகாரமும் இல்லாமல் இறையன்போடு செய்வார். இந்த உலகமும்... மனிதர்களும் இறைவனின் அருளால் மட்டுமே இயங்குகிறார்கள் என்று சொல்லும் சித்தர், அகில உலகத்தையும் காற்றினால் இறைவன் வழி நடத்துகிறான் என்பார்.

'உலகம் உயிர்வாழ்வதும், உலக உயிர்கள் வாழ்வதும் தோன்றல், வாழ்தல், மாறுதல், மறைதல் எல்லாமும் காற்று எனும் கருப்பொருளால்தான். சூரியன் சந்திரனுக்கு ஒரு பக்கம் உண்டு. மறுபக்கம் இல்லை. அதேபோல் நெருப்பும் அப்படியேதான். சமுத்திரத்திற்கும் ஒரு எல்லை உண்டு. மறு எல்லை இல்லை. ஆனால் காற்று எல்லையே இல்லாதது. அது இந்த உலகம்- பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிறது. காற்று சிவன்... வாசனை சக்தி இவை இரண்டும் ஒன்றாகக் கலந்து இருக்கின்றன. இதுவே தெய்வம்' என்று சொல்லுவார் சித்தர்.

சித்தரின் தத்துவமும், அற்புதமும் சென்னை வரை புகழ்பெற்றுத் திகழ்ந்தது. ஓய்வு பெற்ற முன்னாள் போலீஸ் கமிஷனர். பொன். பரமகுரு அவர்கள் சித்தரின் மகிமையை உணர்ந்து அவரின் சீடராக இருந்தார். சித்தரைப் பற்றி 'நான் கண்ட சித்தர்கள்' நூலில் அற்புதமாக எழுதியிருக்கிறார்.

உலக நன்மைக்காகவும், மனித உயிர்களுக்காகவும் ஏராளமான அற்புதங்களை நிகழ்த்திய சித்தர், 1988-ல் சமாதி நிலை அடைந்தார்.

இப்பொழும் திருவலம் வில்வநாததீசுவரர் ஆலயத்திலுள்ள அவரது சமாதி நிலையிலிருந்து தன்னை நாடிவரும் பக்தர்களின் பிரச்னைகளை ஜோதி வடிவமாய் தீர்த்துக் கொண்டிருக்கிறார் அந்த மகா சித்தர்.

நீங்களும் அவரின் அருளைப்பெற திருவலம் சென்று வாருங்கள்; எல்லா நலமும் அடைவீர்கள்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.

# 14

# ஸ்ரீலஸ்ரீ ரோட்டு சித்தர்

சித்தர்கள் மனிதர்களாக வாழ்ந்தாலும் கடவுளுக்கு இணையானவர்கள்.

அவர்களுடைய தேகம் அதிநுட்பமானது. நோய்களுக்கும், மரணத்திற்கும் அப்பாற்பட்டது அவர்களது தேக அமைப்பு. 'என்றும் மாறா இளமை' எனும் உடலைப் பெற்றிருந்தார்கள் சித்தர்கள்.

அந்த இளமை உடலைப் பெறுவதற்காக அவர்கள் அஷ்டாங்க யோகங்களை கடைப்பிடித்து வென்றார்கள். அஷ்டாங்க யோகம் என்பது எட்டுவிதமான நெறிமுறை களாகும். இவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு

வகைப்படும்.

1. இயமம் : அகிம்சை, களவு செய்யாமை, சத்தியத்தை கடைப்பிடித்தல், பிரும்மச்சரியம், பிரதிபலன் விரும்பாமை போன்றவற்றோடு வாழ்தல்.

2. நியமம் தேகசுத்தி, தேகாபிமானம், விடுத்தல், ஆத்மானாத்ம தரிசனம், ஈஸ்வர பிராணிதானம், கெடுதி செய்தோர்க்கும் கேடு நினையாமை.

3. ஆசனம் : சுவத்திகம், கோமுகம், வீரம், சிங்கம், பத்திரம், மயூரம், சிந்து, பதமம், சுகம் என்பனவாகும்.

4. பிராணாயாமம் : தேகம் மெலிந்து ஒடுங்கி வியர்த்து தன்னிச்சையாகப் பிரக்ஞையற்றுப் போதல்.

5. பிரத்தியாகாரம் : ஐம்புலனும் அடக்கி மனோ சலனமற்று தனியே இருத்தல்.

6. தாரணை : சுவாசபந்தனம், தேகத்தை அசைவற நிறுத்தல், எண்ணங்களைச் சுருக்குதல்.

7. தியானம் : இந்திரிய சலனம் கெடுத்து மனோலயப்படுத்தி நிர்க்குணம் வகித்து, சுவாசத்தை கட்டுப்படுத்தி நாடிகள் ஸ்தம்பிக்க நின்று ஆனந்தஜோதி கலந்திருக்கக் காணல். இதுவே ஆத்ம சொரூபம்.

8. சமாதி : சரீர வேதனைகளின் உணர்வற்று சுவாசம் கட்டி, பிரும்ம சொரூபத்தில் கலந்து நீடுழி நிற்றல்.

இந்த எட்டு நெறிகளையும் சித்தர்கள் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள்.

இப்போது நீங்கள் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு மேற்கே 12வது கிலோமீட்டரிலுள்ள மாதிரிமங்கலம் எனும் கிராமத்தில் வாழ்ந்த பல அற்புதங்களையும், சித்தாடல்களையும் நிகழ்த்திய ஸ்ரீராமகிருஷ்ண சுவாமிகள் என்கிற ரோட்டு சித்தரைப் பற்றி அறியப் போகிறீர்கள். இவர் பெரும்பாலான நேரம் ரோட்டில் நடந்துகொண்டே இருந்ததால் இவரை 'ரோட்டு சாமி' என்று எல்லோரும் அழைத்தனர்.

முன்புற வழுக்கையும் வெண்மையான தாடியும் சிறிய

கோவணமும், தீட்சணமான பார்வையுமாய் தம்மை நாடி வருபவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பார். சித்தரின் அருள் பொருந்திய கரம் நம்மீது பட்டாலே அடுத்தநொடி நம் உடல் சிலிர்க்கும். நம் உடலுக்குள் இருந்த எல்லா கெட்ட விஷயங்களும் பில்லி சூன்ய பிரச்னைகளும் ஓடிவிடும். சித்தர் அவ்வளவு எளிதில் மனிதர்களிடம் பேசிவிடமாட்டார். யார் தன்னை நெருங்கினாலும் அடுத்த நொடி புயலாய் ஓடி மறைந்துவிடுவார். ஆனால் நிஜத்தில் பிரச்னைகளோடு வாழ்பவர்களும் உணவு, பொய், சூது, ஏமாற்று, வஞ்சகம் இல்லாத மனசுடன் சித்தரை நெருங்கினால் அன்பொழுக அவர்களைக் கூர்ந்து கவனித்துவிட்டு ஆசி வழங்குவார்.

சித்தரின் இளமைக் காலம் சராசரி மனிதரின் இளமைக் காலமாகவே தொடங்கியது. மாதிரிமங்கலம் அக்ரஹாரத்தில் வாழ்ந்துவந்த சுந்தரேச அய்யர் தர்மாம்பாள் தம்பதியருக்கு மூன்றாவது குழந்தையாக 28.04.1899 அன்று வியாழக்கிழமை சப்தமி திதி கூடிய சுபதினத்தில் பூச நட்சத்திரத்தில் அவதரித்தார் சித்தர்.

பூவாய் மலர்ந்து சிரிக்கும் தன் பாலகனை பார்த்த தாய்க்கு அந்த விநாடியே விளங்கியது. இது தெய்வங்களுள் குழந்தை யென்று. சிறு வயதிலேயே அவர் சொல்லும் சொல் எல்லாம் அப்படியே பலிப்பது கண்டு பூரித்தனர். அவரது பெற்றோர் ஒருமுறை குத்தாலம் சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சி பெற்று பரங்கிப்பேட்டையிலும், திருக்கோவிலூரிலும் சில ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார். பின்பு திருவண்ணா மலைக்கு ஆசிரியராக பணி மாற்றினார்கள். திருவண்ணாமலை சித்தர்கள் பூமி என்பதால் அங்கே அவருக்குள்ளிருந்த அற்புத சக்தியின் எழுச்சி அதிகமாக, இல்லறத்தைத் துறந்து உலக நன்மையை நோக்கி அவர் நகர ஆரம்பித்தார்.

1930-ம் வருடம் ஒரு சித்த புருஷராக, அவதார நாயகராக திருவாரூருக்கு அருகேயுள்ள கொல்லுமாங்குடியில் எழுந்தளினார்.

அவரது அற்புத பலன்களும் அவரின் அருட்பார்வை தம் மீது பட்டாலே தமது துன்பங்களும், வியாதிகளும் தீர்ந்துவிடுகிறது

என்பது தெரிந்து பக்தர்கள் அவரை நாட ஆரம்பித்தார்கள். அதனாலேயே சித்தர் கொல்லுமாங்குடியிலிருந்து கும்பகோணம் ரயில்வே கேட் வரை கிட்டத்தட்ட தொண்ணூறு கிலோ மீட்டர் தூரம் தினமும் நடந்து செல்வதும் வருவதுமாக இருப்பார்.

வழியில் வியாபாரம் செய்பவர்கள் சித்தர் தனது கடைக்கு வருவாரா என ஏங்குவார்கள். ஏனெனில், அவர் கை நீட்டி கேட்டுவிட்டாலே போதும். அந்தக் கடையின் வியாபாரம் மிக சிறப்பாக இருக்கும். ஆனால், சித்தர் பெரும்பாலான நேரம் உணவு உறக்கம் இல்லாமலே நடந்து கொண்டிருப்பார்.

சில நேரங்களில் சொல்லுமாக்குடி ஆற்றிலும், சுடுகாட்டிலும் ரோட்டிலும் படுத்திருப்பார். சித்தருக்கு இரவு பகல் என்பதில்லை. எப்போதும் நடந்துகொண்டே இருப்பார்கள்.

ஒரு சில நேரங்களில் கும்பகோண ரோட்டிலுள்ள குளத்தில் மணிக்கணக்காக மல்லாந்து படுத்த நிலையில் மிதந்துக்கொண்டும், சில நேரங்களில் குளத்திற்குள் மணிக்காக மூழ்கி இருந்துவிட்டு எழுவார் என்றும் சொல்கிறார்கள் அவர் பக்தர்கள்.

ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றமளிக்கும் சித்துவேலையும் தனது அங்க அவலங்களை பல்வேறு பாகங்களாக பிரித்து சேர்க்கும் அற்புத சக்தியும் பெற்றிருந்தார் சித்தர்.

ஒரேநேரத்தில் சீழ்காழியிலும், மாதிரிமக்காலத்திலும் தோன்றிய சித்தரை டெலிபோனில் பேசியபடியே பார்த்துக் கொண்டிருந்த இருவர் திகைப்பாய் வணங்கியிருக்கிறார்கள்.

சித்தர் அற்புத சக்தி வாய்ந்தவர். அவரால் அநேகம் பேர் நலமடைந்திருக்கிறார். அதில் நலனும் ஒருவன் என்று சித்தரின் அற்புதங்களை குறிப்பிட்டு எழுதியிருக்கிறார் அவரது சீடர் கணபதியா பிள்ளை.

ஒருமுறை சித்தர் ரோட்டில் நடந்து கொண்டிருக்கும்போது அவரை காண ஒரு பெண்ணும் அவளது குழந்தையும் நடந்து வந்துக் கொண்டிருந்தனர். சித்தர் மிக வேகமாக நடந்து

சென்றுவிட அவரை பார்க்கும் அவசரத்தில் அந்த பெண் தனது குழந்தையை தோளில் சுமந்தபடி நடக்க ஆரம்பித்தார். அப்போது ஒரு பாலத்தின் மீது நடந்து வந்து கொண்டிருந்த வெள்ளை உடை இளைஞன் மின்னலாய் ஓடிவந்து தனது இரு கைகளாலும் அவளைப் பற்றி இழுத்து, அவளையும், அவள் குழந்தையையும் காப்பாற்றினான்.

அவள் நன்றியாய் வணங்க தனது கரங்களால் அவள் கரங்களைப் பற்றி தடுத்த அந்த இளைஞன். இந்த நன்றியை ரோட்டு சாமிக்கு சொல்லுங்கள். அவர்தான் என்னிடம் சற்று நேரத்தில் கிட்டே வரும் ஒரு பெண்ணும், குழந்தையும் தடுமாறி விழுவார்கள். நீ காப்பாற்று என்று சொல்லிவிட்டு போனார்..." என்றான் அந்த இளைஞன்.

அதேபோல் இன்னொருமுறை வயதான முதியவர் ஒருவர் மாட்டு வண்டியில் சென்று கொண்டிருந்தபோது, அவரை நெருங்கி வந்த கார் ஒன்று மாட்டு வண்டியில் மோத, அந்தப் பெரியவர் நிலை தடுமாறி ஒரு ரோட்டில் விழப்போக... ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு இளைஞன், சரேலெனத் தாவி நடுரோட்டில் பெரியவர் விழாமல் தனது கைகளால் பிடித்து இழுத்து ரோட்டின் ஓரத்திலிருந்து மைல் கல்லின்மீது நிற்க வைத்தான். அவர் நடந்த அதிர்ச்சியில் ஒருநொடி மெய்மறந்து நின்றார்.

சற்று நேரத்தில் அங்கே நடந்து வந்த ரோட்டு சாமியைப் பார்த்த முதியவர், 'சாமி நீங்கதான் என்னை காப்பாத்தினீங்களா...' என்று கேட்க சிரித்துக்கொண்டே சாமி. 'அந்த இளைஞன் தானே உங்களை கையை பற்றி இழுத்து இங்கே நிற்க வைத்தான். அப்படியென்றால் அவன்தானே உங்களைக் காப்பாற்றியதாக அர்த்தம்?' என்று கேட்க... முதியவர் திரும்பி அந்த இளைஞனைப் பார்த்தார். அடுத்த நொடி அதிர்ந்தார். காரணம், அந்த இளைஞனுக்கு ஒரு கை இல்லை. அப்படியென்றால் சற்று நேரத்திற்கு முன்பு தனது இரண்டு கைகளாலும் பற்றி என்னைத் தூக்கி இங்கே நிறுத்தினானே. இது என்ன மாயை? இது என்ன அற்புதம்? என்று ரோட்டு சாமியை அந்த முதியவர் பார்க்க, அவர் மௌனமாய்

புன்னகைத்தபடி நடக்க ஆரம்பித்தார்.

இப்போது முதியவர் அந்த இளைஞனை அழைத்து 'நன்றிப்பா' என்று சொல்ல... சற்றுமுன்வரை நடந்த நிகழ்ச்சியை அறிந்திடாத அந்த இளைஞன், 'என்ன எதுக்கு நீங்க வணங்கறீங்க?' என்று கேள்வியாய் பார்த்துவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

இப்படி பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார் சித்தர். ஒருமுறை ரோட்டில் நடந்து கொண்டிருந்த சித்தரை ஏதோ பைத்தியம் என நினைத்து ஒரு போலீஸ் அதிகாரி விரட்ட, அந்த போலீஸ் அதிகாரி லஞ்சம் வாங்கியது, அவமானப் பட்டது, செருப்படி வாங்கியது, எல்லாவற்றையும் தேதி, வருடம் குறித்து மிகச் சரியாக சொல்ல... மிரண்டுபோன அந்த போலீஸ் அதிகாரி, சித்தரின் கால்களைப் பற்றி மன்னிக்கும்படி கேட்டுவிட்டுப் போனார்.

இன்னொருமுறை ரோட்டு சித்தரைச் சந்தித்து ஒரு தம்பதி யினர் தனது மகனுக்கு பத்து வயதாகியும் பேச்சு வரவில்லை என்று கண்ணீரோடு வணங்க... ஒரு சிறு இலையொன்றைக் கொடுத்த சித்தர், 'வரும் வியாழக்கிழமை உங்கள் மகனை அழைத்து வாருங்கள் பேசுவான்' என்றார். அதேபோல் அவர்கள் தனது மகனை அழைத்துவர பஸ் மாதிரிமங்கலத்தில் நின்ற நொடியில் "அம்மா ரோட்டு சாமி ஊருக்கு வந்துட்டோம்." என்று அந்தச் சிறுவன் பேச, பெற்றோர் இருவரும் அதிர்ச்சியில் உறைந்து போயினர். இத்தனை வருடம் பேசாதவன் சித்தரின் இடத்திற்கு வந்த நொடியில் பேசுவது எப்படி? இது அற்புதமா? சித்தரின் மகிமையா? என வியந்து சித்தரின் பாதங்களில் விழுந்து ஆசிவாங்கினர். சித்தர் அந்தச் சிறுவனைப் பார்த்து புன்னகைத்துவிட்டு "நல்லா படி" என்று சொல்ல... அவன் கண்ணீரோடு அவரை வணங்கிவிட்டுச் சென்றான்.

இதேபோல கல்யாணமாகாதவர்களும், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களும் சித்தரை ஒருமுறை வணங்கினாலே போதும். திருமணம் கைகூடும். பிள்ளைபேறு உண்டாகும்.

இதுபோல் எண்ணற்ற சித்துகளை நிகழ்த்திய சித்தர், 1974-ம்

வருடம் நித்திரையடைந்தார். அவரது சமாதி ஆஸ்ரமம் மாதிரி மங்கலம் கிரா...லட்சுமி அம்மையாரின் மில்லுக்கு தெற்கே அமைந்துள்ளது. இப்போதும் அவர் சமாதிக்குச் சென்று மனமுருகி வேண்டுவோருக்கு அத்தனை நலன்களையும் தந்தருளுகின்றார் சித்தர்.

இது நிஜமா... சாத்தியமா? என்ற கேள்வி உங்களுக்கு எழுமானால், நீங்களும் சித்தரின் சமாதியை தரிசித்துவிட்டு வாருங்கள். உங்களுக்கும் நலம்பல வழங்குவார் அற்புத மகா சித்தர்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



# 15

## ஸ்ரீலஸ்ரீ பட்டினத்தார் சித்தர்

சித்த மருத்துவத்தில் ரசவாதத்திலும் சித்தர்கள் உலகிற்கே முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். இதில் ரசவாதம் என்கிற மூலிகைகளிலிருந்து தங்கம் தயாரிக்கும் முறை அவர்களது கண்டுபிடிப்புகளில் முக்கியமானது.

துத்தநாகத்தை வங்கமாக்கு, வங்கத்தை வெள்ளியாக்கு, வெள்ளியை இரும்பாக்கு, இரும்பைச் செம்பாக்கு, செம்பைத் தங்கமாக்கு என்றார் சட்டைமுனி. அதேபோல் நாகத்தை ஈயமாக்க, ஈயத்தை வெள்ளியாக்க, வெள்ளியைச் செம்பாக்க, செம்பைத் தங்கமாக்க மூலிகைகளால் முடியும் என்கிறார் போகர். இது எப்படிச் சாத்தியம் என்று யோசித்தால், பூமியின் உட்பகுதி இரும்பு, நிக்கல், துத்தநாகம் போன்ற உலோகக்

கலவைகளால் ஆனது. பல ஆயிரம், நூறு ஆண்டுகளுக்கு முன்பு பெருவெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றத்தால் பூமியிலிருந்த தாவரங்கள் புதையுண்டு அவற்றின் சத்துக்கள் பூமிக்குள்ளிருக்கும் உலோகக் கலவைகளின் மீது பட்டதால் தான் உலோகங்களின் தன்மைகள் மாறியிருக்கிறது. அப்படிப் பார்க்கையில் உலோகத்தை மாத்தி நிச்சயம் தங்கமாக்க முடியும் தானே? என்கிறார்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சித்தர்கள்.

தாவரங்களை மட்டுமில்லாமல், கல், மண், பாறை, அவற்றின் மேல் உப்புக் கலந்த காற்றும் நீரும் பட்டதால் ஏற்பட்ட பாஷாணங்கள், உப்புக்கள், பிராணிகளின் உறுப்புக்களான நகம், பல், எலும்பு, தோல், முட்டை ஓடு, சிப்பி ஓடு என எல்லா பொருட்களையும் ஆய்வு செய்து அவற்றின் வேதியியல் பண்புகளை ஆராய்ந்து கூறியுள்ள சித்தர்கள், பாஷாணங்கள் அறுபத்து நான்கு வகை என்றும் அவற்றில் முப்பத்து இரண்டு வகை பாஷாணங்களை செயற்கை முறையில் தயார் செய்ய முடியும் என்று கூறியுள்ளார். இது எவ்வளவு சிறந்த கண்டுபிடிப்பு?

இப்போது நீங்கள் பட்டினத்தார் சித்தரைப் பற்றி அறியப் போகிறீர்கள். சென்னையிலும், தமிழகத்திலும் மட்டுமல்லாது, இவரது புகழ் உலகம் முழுக்க அறிந்த விஷயமாக இருக்கிறது. இவர் செய்த அற்புதங்கள் இன்றும் பிரமிக்கத்தக்கதாக இருக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த சிவநேசன், நானகலை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் பட்டினத்தார். இளம் வயதில் மிகுந்த சிவன் பக்தி கொண்டவராக வாழ்ந்த பட்டினத்தாரிடம் ஒருநாள் ஒரு யோகி ஒரு பேழையில் சிவலிங்கமும், பிள்ளையார் விக்கிரகமும் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் செல்ல, மேலும் அவருக்கு சிவபக்தி அதிகமாகியது. சர்வசதா காலமும் இறைவனின் நினைவுடனே வளர ஆரம்பித்தார்.

வாலிப வயதிலும் அவர் தினம்தோறும் அவ்விரு விக்கிரகங்களையும் ஆக விதிப்படி பூஜித்து வந்தார். அவருக்கு ஏற்ற குணநலன்களோடு சிவகலை என்கிற மனைவி அமைய,

அவர் வாழ்க்கை ஆன்மீக மனத்தோடு நகர ஆரம்பித்தது. மருதவாணன் அவருக்கு மகனாகப் பிறந்ததும் மேலும் அவர் வாழ்வில் ஏற்றமாகியது. மகன் மருதவாணன் மகனாக இனிதே வளர்ந்ததும் தனது வணிகத்துக்குப் பெருமை சேர்க்கும் விதமாக வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்தார். ஆனால், மருதவாணன் சென்ற கப்பல் நடுக்கடலில் பயணிக்கும்போது சூறாவளிக் காற்றும், பேய் மழையும் தாக்க, கடுங்குளிரில் எல்லோரும் வேதனையடைந்தனர். அப்போது மருதவாணனுடன் பயணித்த சிலர் அவரிடமிருந்த அவலையும், எருவிராட்டியையும் தரும்படி கேட்க, அவர் இதை நான் உங்களுக்குத் தருகிறேன். ஆனால் கரை சேர்ந்ததும் நீங்கள் இதே மாதிரி எருவிராட்டியைத் திரும்பத் தருகிறேன் என்று எழுதிக்கொடுங்கள் என்று கேட்க, அவர்களும் எழுதிக் கொடுத்தார்கள்.

நல்லபடியாக கரைக்குத் திரும்பிய மருதவாணன் பட்டினத்தாரிடம் நடந்ததைச் சொல்லி அவர்கள் எழுதிக்கொடுத்த சீட்டையும் மீதமிருந்த மூன்று எருவிராட்டிகளையும் தர... கோபமடைந்த பட்டினத்தார், மருதவாணனிடமிருந்து அந்த மூன்று எருவிராட்டிகளையும் பிடுங்கி ஆவேசமாய் தூக்கி எறிந்தார். அடுத்த நொடி அந்த எருவிராட்டிகள் கீழே உடைந்து சிதற... அதனுள்ளிருந்து விலையுயர்ந்த வைர வைடூரியங்கள் கீழே சிதறிக் கண்ணைப் பறித்தன.

தன் மகன் மருதவாணன் இவ்வளவு விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டுவந்ததை உணராமல் கோபத்தில் திட்டிவிட்டோமே என்று கலங்கிய பட்டினத்தார், தன் மனைவி சிவகலையிடம் நடந்ததைச் சொல்ல, அந்த நிமிடம் திக் பிரமை பிடித்தவர் போன்று சிவகலை நின்று கொண்டிருந்தாள். கையில் ஒரு பெட்டி இருந்தது. அது தன் மகன் மருதவாணன் அப்பாவிடம் கொடுக்கச் சொன்னது என்று சிவகலை சொல்ல, திரும்பிய பட்டினத்தார் அதிர்ந்தார். அங்கே மருதவாணன் இல்லை. எப்போதோ மருதவாணன் காணாமல் போய்விட்டிருந்தான். சட்டென்று பெட்டியைத் திறந்தார் பட்டினத்தார். உள்ளே காதில்லாத ஊசியும், ஒரு ஓலைத்துணுக்கும் இருந்தது. அந்த ஓலைத்துணுக்கில்

'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்று எழுதப்பட்டிருந்தது. நொடியில் பட்டினத்தாருக்குள் ஏதோ மாற்றம் நிகழ, தன்னுடைய ஆடை அணிகலன்கள் எல்லா வற்றையும் களைந்துவிட்டு, இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே கட்டிக்கொண்டு துறவியானார். இதைக்கண்டு அவர் மனைவி யும், குடும்பத்தாரும் அதிர்ச்சியில் உறைய... அவர் புன்னகை முகமாய் நகர்ந்து அவ்வூர் மண்டபத்தில் தங்க ஆரம்பித்தார்.

பெரும் செல்வந்தரான அவர் இப்படி துறவுக் கோலம் பூண்டுவிட்டதில் அவரது உறவினர்களுக்கு அவர் மீது கோபத்தை உண்டுபண்ணியது. அதனால் அவளது சகோதரி பட்டினத்தாரை அழைத்து விஷம் தடவிய அப்பத்தைக் கொடுத்து சாப்பிடச் சொன்னாள். அதை தனது ஞானத்தால் உணர்ந்துகொண்ட பட்டினத்தார், "தன்வினை தன்னைச் சுடும். வீட்டப்பம் ஓட்டைச்சுடு" என்று சொல்லியபடியே வீட்டுக் கூரையில் அதனைச் செருகி விட்டுப்போக, அந்த வீடு குபீரென தீப்பற்றி எரிந்து சாம்பலானது.

அதைக்கண்டு திடுக்கிட்ட அவர் சகோதரி பட்டினத்தாரிடம் மன்னிப்புக் கேட்க, அவர் சிரித்தபடி மௌனமாக இருந்தார். அதேபோல் ஒரு நாள் பட்டினத்தாரின் தாயார் இறந்துபோக, அவர் மீதுள்ள கோபத்தால் அதைக் கண்டு அஞ்சிடாத பட்டினத்தார் வாழை மட்டையில் கிடத்தி பாடல் ஒன்று பாட ஆரம்பிக்க... இந்த பச்சை மட்டை குபீர் என தீப்பிடித்து எறிய ஆரம்பித்தது. தன் தாயாரின் ஈமக்கிரியையை முடித்துவிட்ட பட்டினத்தார் இனி இவ்வூரில் இருப்பது நலமல்ல என்று திருவாரூர் சென்றார்.

அங்கே அவரது புகழ் தெரிய ஆரம்பிக்க.. தினந்தோறும் பல நூறு பக்தர்கள் அவரை நெருங்கி அவரிடம் அருளாசி பெற்றுச் செல்ல ஆரம்பித்தனர்.

அங்கே ஒருநாள் அவரால் திருமணம் நடத்திவைக்கப்பட்ட ஒரு இளைஞன் திடீரென இறந்துபோக... அவனது மனைவியும் குடும்பத்தாரும் கண்ணீருடன் பட்டினத்தாரை அணுக, "ஐயா நீங்கள் இவனுக்கு கல்யாணம் செஞ்சுவச்சீங்க. இப்ப நீங்கதான் இவனைப் பிழைக்க வைக்கணும்" என்று கதற. ஒரு நொடி

அவர்களை சமாதானப்படுத்திவிட்டு தனது இறைவன் ஈசனிடம் வேண்டி பட்டினத்தார் மனமுருகி பாட ஆரம்பித்தார். என்ன ஆச்சரியம்! அடுத்த சில நிமிடங்களில் இறந்துபோன அந்த இளைஞன் தூங்கி எழுவதுபோல் கண் திறந்து எழுந்து உட்கார்ந்தான். அவன் குடும்பத்தார் ஆச்சரிய உணர்வுடன் பட்டினத்தாரை வணங்க. அவர் லேசாக புன்னகைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்து பேரையூர் எனும் இடத்திற்குச் சென்றார். அங்கே மௌனவிரதமிருந்த பட்டினத்தார் அங்கிருந்து மீண்டும் நகர்ந்து உஜ்ஜயினி எனும் நகரத்திற்குச் சென்று அங்குள்ள பிள்ளையார் கோயிலில் தியானத்தில் அமர்ந்தார். அப்போது அரண்மனையில் கொள்ளையடித்த கொள்ளையன் ஒரு பங்கை பிள்ளையார் கோயில் உண்டியில் போடும்விதமாகத் தூக்கி எறிய, அதிலிருந்த ஒரு தங்கப் பதக்கம் தியானத்திலிருந்த பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்தது. இதை அறிந்த பட்டினத்தார் தவநிலையிலேயே இருக்க, அப்போது திருடர்களைத் தேடியபடி வந்த அரண்மனைக் காவலாளிகள் பட்டினத்தாரின் கழுத்தில் அரண்மனைப் பதக்கம் இருப்பதைப் பார்த்து அவர்தான் திருடன் என்று முடிவு செய்து அவரை அந்நாட்டு மன்னன் பத்திரகிரியிடம் அழைத்துச் சென்றனர்.

அங்கே மன்னர் பத்திரகிரியர் ஏதும் விசாரித்தறியாமல் அவர்தான் அரண்மனையில் கொள்ளையடித்தவர் என கழுவில் ஏற்ற உத்தரவிட்டான். பட்டினத்தாரை கழுவில் ஏற்றும் நேரத்தில் 'என் செயலாவது ஒன்றுமில்லை' என்று பாட அந்த கழுமரம் தானே தீப்பற்றி எரிந்து சாம்பலானது.

அதனைக் கண்ட பத்திரிகிரியர்... பட்டினத்தார் மகா சித்தர் என்று உணர்ந்து அவர் காலில் விழுந்து மன்னிக்கும்படி அழுது புலம்பினான். பட்டினத்தார் அவன் கரம் பற்றி தூக்க... அவனது உடலில் மின்சாரம் பாய்ந்த உணர்வு ஏற்பட்டு சிலிர்த்தான். அடுத்த நொடி உலக மாயை வாழ்க்கையை உணர்ந்த பத்திரகிரியர் 'தானும் துறவறம் பூண்டு உங்களுடன் வந்துவிடுகிறேன்' என்று பட்டினத்தாரிடம் கேட்க அவர் 'நீர் முதலில் திருவிடைமருதூர் செல்லுங்கள்' என்று சொல்லிவிட்டு நகர ஆரம்பித்தார்.

அதன்பிறகு பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்று தரிசித்துவிட்டு திருவிடைமருதூருக்கு வந்தபோது, அங்கே மேற்கு கோபுர வாயிலில் கையில் திருவோட்டுடனும் ஒரு நாயுடன் பத்திரகிரியர் தங்கியிருப்பதை தனது ஞானக் கண்ணால் உணர்ந்தார். அப்போது ஒரு முதியவர் 'பசி' என்று பட்டினத்தாரிடம் கேட்க, 'நீ மேற்கு கோபுர வாசலுக்குப் போ' அங்கே ஒரு குடும்பஸ்தன் இருக்கிறான். அவனிடம் கேள் சாப்பிடத் தருவான், என்று சொன்னார்.

அந்த நபர் அப்படியே சென்று பத்திரகிரியாரிடம் கேட்க, பட்டினத்தார் வந்திருப்பதை உணர்ந்த பத்திரகிரியார் உடனே பட்டினத்தாரை நெருங்கி 'ஐயா நான்தான் துறவறம் பூண்டுவிட்டேனே! என்னை ஏன் குடும்பஸ்தன் என்று சொன்னீர்கள்?' என்று கேட்க,

"நீதான் திருவோடும் அதை காவல்காக்க ஒரு நாயும் சொந்தமாக வைத்திருக்கிறாயே, நீ அப்பொழுது குடும்பஸ்தன் தானே?" என்று பட்டினத்தார் சொல்ல, உடனே தன் தவறை உணர்ந்தபத்திரகிரியார் அந்த திருவோட்டை நாயின் தலையில் அடிக்க... ஓடு உடைந்தது, நாயின் மண்டை பிளந்தது; இறந்தது.

அந்த நாய் மறுபிறப்பாக காசி மன்னனுக்குப் புதல்வியாக ஞானவல்லியாகப் பிறந்தது.

ஞானவல்லி வளர்ந்து பருவம் அடைந்ததும் தனது முற்பிறவியின் ஞாபகம் வர... தனது தந்தையுடன் திருவிடை மருதூருக்கு வந்தவுடன் அங்கே பத்திரகிரியாளரை வணங்கி தனது முற்பிறவியின் ஞாபகங்களைச் சொல்ல... அவர் அதிர்வாய் அவளைப் பார்த்தார். உடனே அவள் தாங்கள்தான் எனக்கு முக்தி தரவேண்டும் என்று சொல்ல... அவர் பட்டினத்தாரைப் பார்க்க, உடனே உள்ளே கடவுளின் கருவறைக்குள் செல்லுங்கள் என்று பட்டினத்தார் சொல்ல, பத்திரகிரியாரும் ஞானவல்லியும் இறைவனின் சந்நதிக்குள் சென்றார்கள். அப்பொழுது மிகப்பெரிய ஜோதி பிரகாசமாய்த் தோன்ற அதற்குள் இருவரும் ஐக்கியமாகி நொடியில் மறைந்து போனார்கள்.

பட்டினத்தார் அவர்களின் மாயையை உணர்ந்து புன்னகைத்தபடியே சென்னைக்கு வந்தார். திருவொற்றியூரில் சில காலம் தங்கி எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தினார். ஒரு நாள் கடற்கரை மணலில் சிறுவர்கள் சிலர் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருக்க, தாமும் அவர்களோடு சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது பட்டினத்தார் ஓரிடத்தில் படுத்துக் கொள்ள... குழந்தைகள் விளையாட்டாக மணலால் அவரை மூட, மற்றொரு இடத்திலிருந்து வெளியே வந்தார். இப்படியே பல இடங்களில் புதைந்து வேறொரு இடத்தில் வெளிவந்து கொண்டிருந்தார். குழந்தைகள் ஆச்சரியத்தோடும், திகைப்போடும் விளையாடிக் கொண்டிருக்க முடிவில் ஓரிடத்தில் தோன்றியவர் வேறெங்கும் வெளிவராமல் போக... சிறுவர்கள் தாங்கள் மணல் போட்டு மூடிய இடத்தை கிளறிப் பார்க்க... அங்கே பட்டினத்தார் இல்லை. அங்கே மட்டுமில்லை, அந்த மணல் பரப்பில் எங்குமே அவர் இல்லை. மாயமாய் மறைந்து போயிருந்தார். முடிவாக அவர் மணலில் புதைந்த இடத்தில் கண்களை பளிச்சென்று கூசுமளவிற்கு ஒளிவெள்ளம் தோன்ற... அங்கே ஒரு சிவலிங்கம் தெய்வீகமாக காட்சியளித்தது.

ஒவ்வொரு நொடிப்பொழுதும் தன் வாழ்நாளில் ஈசனையே நினைத்து வாழ்ந்த பட்டினத்தார், அன்று சிவலிங்கமாய் ரூபமயமாகிவிட்டார். இன்றும் சென்னை திருவெற்றியூரில்... சிவலிங்க வடிவமாய் தன்னை நாடி வருபவர்களின் துயர்தீர்த்து ஆனந்தமும், மனத்தெளிவும், செல்வமும் அருளி நல்லருள் புரிந்து கொண்டிருக்கிறார், அந்த மகா சித்தர் பட்டினத்தார்.

சித்தன் போக்கு சிவன் போக்கு



# 16

## ஸ்ரீலஸ்ரீ தொள்ளக்காது சித்தர்

**தொ**ள்ளக்காது சித்தர் பாண்டிச்சேரியில் மிகவும் பிரசித்தி பெற்றவர். அங்கேயிருக்கிற ஸ்ரீமணக்குள விநாயகர் கோயிலில் அமர்ந்து ஏகப்பட்ட சித்துக்களையும், அமானுஷ்யங்களையும், நிகழ்த்திய சித்தர் இன்னும் ஜோதி வடிவமாய் ஸ்ரீமணக்குள விநாயகர் கோயிலில் வாழ்ந்து அங்கே வருகிற பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

பார்ப்பதற்கு திடகாத்திரமாகவும்.. தீட்சண்ய பார்வையோடும், கருணை பொருந்திய முகத்தோடும் காட்சியளித்த சித்தர்... திடீர், திடீரென உணர்ச்சி வயப்படுபவராக தன்னைத் தேடி வருபவர்களை விரட்டியடிப்பார். அதற்குக் காரணம் மனிதர்களிடமிருந்து சித்தர்கள் விலகி இருக்க நினைத்ததுதான்.

சித்தர் எங்கே பிறந்தார்? அவரது சொந்த ஊர் எது? என்கிற சரியான விவரம் தெரியாத போதும் மதுரையில் அவர் பிறந்திருக்கலாம் என்று சிலர் சொல்கின்றனர்.

இளம் வயதில் தாய் தந்தையை இழந்ததை சித்தர், தனக்குள் இருக்கும் பேராற்றலை, அமானுஷ்ய சக்தியை நன்மையளிக்கும் விதத்தில் மக்களுக்கு நோய்களைத் தீர்ப்பது... தீவினைகளை விலக்குவது என்று உதவி புரிந்தார்.

அதனால் அவரைத் தேடி தினம்தினம் நூற்றுக்கணக் கானவர்கள் வர ஆரம்பிக்க, மதுரையிலிருந்து புதுவைக்கு இடம்பெயர்ந்தார்.

புதுவை நகரில் அவர் 'ஓம்' என்கிற ஓங்கார ஒலியோடு தவநிலையில் இருக்க... அவர் முன்னே இறைவனே கொண்டு வந்து இரண்டு மாம்பழங்களை வைத்துவிட்டுப் போவாராம். யார் என்னவென்று தெரியாத சித்தர், முன்பு அமானுஷ்யமாய் தினமும் இரண்டு மாம்பழங்கள் தோன்றுவதையும், சித்தர் தண்ணீர், உணவு ஏதுமில்லாமல் அந்த மாம்பழங்களை மட்டுமே உண்டுவிட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்வதையும் பார்த்து அதிசயித்த மக்கள்... தங்கள் குறைகளைத் தீர்த்து வையுங்கள் என அவரின் முன் நின்று வேண்டி வணங்க... சித்தர் அவர்களின் நச்சரிப்பு தாளாமல் சட்டென்று எழுந்து நடக்க ஆரம்பித்தார். அடுத்த சில நிமிடங்களில் மணக்குள விநாயகர் கோயில் அவர் முன் தோன்ற ஒரு நொடி ஆனந்தமாக பிள்ளையாரை தரிசித்துவிட்டு அங்கேயும் தியானத்தில் அமர்ந்தார்.

அவரது தீட்சண்யமிக்க முகத்திற்குப் பின்னால் வட்ட வடிவமாய் ஜோதி தெரிய சுற்றிலும் இருந்தவர்கள் சித்தரை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

அங்கேயும் தன்னைத் தேடி வந்தவர்களுக்கு ஆசி வழங்கிவிட்டு... அங்கிருந்து முத்துமாரியம்மன் கோயிலுக்குச் சென்று... தியானத்தைத் தொடர்ந்தார்.

ஒருநாள் இரவு... சித்தர் தியான நிலையில் இருக்கும்போது ஸ்ரீ மாரியம்மன் அவர் முன்னே காட்சி ரூபமாய் தோன்றி

*தரிசனம் தர... சித்தர்... "தாயே இனி இதுதான் என் இடம். இனி மனிதர்களோடு நான் பேசமாட்டேன்" என்று மௌனத்தை கடைப்பிடிக்க ஆரம்பித்தார்.*

*தினமும் காலையில் மணக்குள விநாயகருக்கு பூஜை செய்வார். பிறகு மாரியம்மனுக்கு பூஜை செய்து மனமுருக வேண்டுவார். அதன்பிறகு முரட்டாண்டி என்கிற இடத்திற்குச் சென்றுவிடுவார்.*

*சித்தரின் அமானுஷ்ய சக்தி மெல்ல மெல்ல புதுவை முழுக்கத் தெரிய ஆரம்பித்ததில் தினம் தினம் பலர் அவரை நாடி வந்து அவருடைய அருளாசி பெறக் காத்திருந்தனர்.*

*சித்தர் தன் முன்னே நிற்பவரின் கண்களை ஒரு நொடி ஆழ்ந்து நோக்கினாலே போதும். அவரது பார்வையைச் சந்தித்த மனிதர் உடலுக்குள் மின்சாரம் பாய்ந்ததுபோல் திடுக்கென அதிர்வார்கள். அடுத்த நொடி அவர்களுக்குள் இருந்த பிரச்னை அனைத்தும் விடுபட்டதைப் போன்ற ஆனந்தத்தை உணர்வார்கள்.*

*தீராத வியாதியஸ்தர்களும் பெரும் பிணிக்கு ஆளானவர்களும் சித்தர்களை நெருங்கினாலே போதும். அவர்களின் நோயை அறிந்துகொள்ளும் சித்தர், அவர்களின் உச்சந்தலையில் தனது கரத்தைப் பதித்து மின் அதிர்வலை உண்டாக்கி தீராத நோயிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளிப்பார்.*

*இது என்ன மாயமா? மந்திரமா? அமானுஷ்யமா? என்று கேட்டால் 'எல்லாம் இறைவன் திருவிளையாடல். என் உடல் மூலமாக உன்னை குணமாக்கியவன் அவன்தான்' என பிள்ளையாரையும், அம்மனையும் நோக்கி கைகாட்டுவார்.*

*புதுவையில் அவர் நிகழ்த்திய சித்துக்கள் இன்னும் அம் மக்களிடையே ஆச்சரியமூட்டிக் கொண்டிருக்கின்றன.*

*காலையில் மணக்குள விநாயகர் கோயிலில் பூஜை செய்து கொண்டிருக்கும் சித்தர் சட்டென்று மறைவார். அதே நொடியில் அவர் மாரியம்மன் கோயிலில் பூஜை செய்வதைப் பார்த்து பலரும் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். அதேபோல்... ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் அவரைப் பார்க்க*

முடிந்ததாக பலர் ஆச்சரியத்துடன் சொல்கிறார்கள்.

சித்தர் முரட்டாண்டியில் தங்கியிருந்த குடிலை தீப்பற்றி எரிவதுபோல் காட்சி ரூபமாகக் காட்டுவார். ஆனால் நிஜத்தில் அப்படி ஏதும் நடந்திடாமல் இருக்கும்.

ஒருநாள் சித்தர் புதுவை கடற்கரையோரமாக நடந்து சென்று கொண்டிருக்கும்போது வேகமாக ஒருவர் சைக்கிளை மிதித்தபடி வந்தார். சித்தர் அருகே வந்ததும், அந்த நபரைப் பார்த்து 'போ உனக்கு முன்னால் நான் வருகிறேன்' என்று சைகையில் சொல்ல அந்த நபர் புரியாமல் சித்தரைப் பார்த்துக்கொண்டே சென்றார். அவர் வேகமாகச் சென்று ஒரு திருப்பத்தில் திரும்ப அவருக்கு எதிரே புன்னகை மூலமாக சித்தர் நடந்து வந்து கொண்டிருக்க, மிரண்டு போன அந்த சைக்கிள்காரர், சட்டென்று சைக்கிளை விட்டு இறங்கி "சாமி சொன்ன மாதிரியே எனக்கு முன்னோடி வந்துட்டீங்களே?" என்று கேட்க...

"நீ மிகப் பெரிய ஆபத்துல இருந்தே. அதோ அந்த திருப்பத்தில் உனக்கு பேராபத்து நிகழ்ந்திருக்கும், அதை உணர்ந்துதான் உனக்கு முன்னால் வந்து அந்த ஆபத்தை விளக்கினேன். அங்கே பார்" என்று சைகையில் சொல்ல அங்கே ஒரு வண்டி சாலையின் நடுவே குப்புற விழுந்து கிடந்தது. யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லாத அந்த விபத்து சற்று நேரத்தில் சரி செய்யப்பட, சைக்கிளில் வந்த இளைஞன் நன்றியாய் சித்தரை திரும்பிப் பார்க்க அவர் அங்கே இல்லை.

இப்படி தன்னை நாடி வருபவர்களின் ஆபத்தை உணர்ந்து அவர்களுக்கு நல்லருள் புரிவார் சித்தர்.

பிறவிப்பிணி, குழந்தைப் பாக்கியம் வேண்டுவோர், தீராத வியாதியஸ்தர், கடன் தொல்லையில் தவிப்பவர், மனநலம் பாதிக்கப்பட்டவர் என சித்தரை அணுகி அவர் அருளாசியால் குணமடைந்தவர்கள் ஏராளம்.

ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றுதல், உடலை மறைத்து நொடியில் தோன்றுதல்... அங்க அவயங்களை பிரித்துச் சேர்த்தல், வான்வெளியில் பறத்தல் என ஏகப்பட்ட

சித்துக்களை புதுவை மண்ணில் நிகழ்த்திய சித்தர் ஒரு நாள் நெருப்புக் கோளம் உருவாக்கி அதனுள் தியான நிலையில் அமர... எல்லோரும் அதிர்வாய் அவரை நெருங்கினர். சில மணி நேரத்தில் நெருப்புக்கோளம் மறைய உள்ளே கொதிக்கும் உடலோடு சித்தர் தியான நிலையில் அமர்ந்திருக்க பக்தர்கள் அவரை திகைப்பாய் பார்த்தனர். கிட்டத்தட்ட மூன்று நாட்கள் எந்த சலனமும் இல்லாமல் சித்தர் அமர்ந்திருக்க அவர் ஜீவசமாதி அடைந்துவிட்டதை உணர்ந்த பக்தர்கள், அவரது உடலை அவர் வணங்கிய மணக்குள விநாயகர் கோயிலினுள்ளே விநாயகருக்குப் பின்புறமாக சமாதி செய்வித்தனர்.

தொள்ளக்காது சித்தர் இப்போது அந்த திருக்கோயிலினுள்ளே இருந்தபடி ஜோதி வடிவமாய் தன்னை தேடிவரும் பக்தர்களுக்கு நலம் பல புரிந்து கொண்டிருக்கிறார்.

என்ன உங்களுக்கும் ஸ்ரீ தொள்ளக்காது சித்தரின் அருளாசி வேண்டுமா? உடனே பாண்டிச்சேரியிலுள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீமணக்குள விநாயகர் கோயிலுக்குச் செல்லுங்கள்.

நலமும், வளமும் பெறுவீர்கள்.

சித்தன் போக்கு சிவன் போக்கு.



இது சித்தர்களின் மீது நம்பிக்கையும், பக்தியும் கொண்டவர்களுக்கான நூல்.

இதனுள்... சென்ற நூற்றாண்டில் நமது தமிழக மண்ணில் வாழ்ந்த எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்திய 16 சித்தர் களைப் பற்றிச் சொல்லியிருக்கின்றேன். சுவாமிகளாக அறியப்பட்ட இவர்களில் பெரும்பான்மையோர் ஜீவசாமதி நிலையடைந்தவர்கள்.

இன்றைய பரபரப்பான, வேகமான சூழ் நிலையில்... இந்த அற்புத மகான்களைப் பற்றிய வாசிப்பு... உங்களுக்குள் அமை தியையும், சாந்தத்தையும்... ஆனந்த உணர்வையும் கொண்டுவரும் என நம்புகிறேன்.

சித்தர்கள் ஆசி...உங்களுக்கு பூரணமாக கிடைத்திட பிரார்த்திக்கிறேன்.

- பெ. கணேஷ்